197879

# பாரதி


ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.


எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.


ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.



| மாலை 4 | ஆங்கீரஸ சித்திரை 1932-ம் ௵ ஏப்ரல்—மே ௴ | மணி 1 |
| --- | --- | --- |


## "பாரதி" விஜயம்.

‘பாரதி’ ‘பாரதி’ யென்று சென்ற மூன்று மாத காலமாக எதிர் பார்த்துக்கொண்டிருந்த நண்பர் களின் அவாவை இன்றே பூர்த்தி செய்ய முடிந்தது பற்றி பேருவகை யடை இன்று தேவியின் திருவருளாலும் அ
வலியாலும் நமது இந்ந முதற் சஞ்சிகையை
தேச மிருக்கும் நிலையில் கிடைக்கட்கு முன்னெல்லாம் ஆங்கில
யடையத்தக்கதாகும். வந்துளது. இவ் வருடம் முதல்
மிழ் வருடத்தைப் பின்பற்றியே—அதன்
சென்ற ஜனவரிமாக இச் சித்திரையிலிருந்து வெளி வருகிறது.
தொடக்கம் முதல் பிறந்து தமிழில் பிரசுரமாகும் தமிழ்ப் பத்திரிகையை
வெளியீண்டின் ஆரம்பத்தை முதன்மையாகக் கொண்டு நடத்துவது

அதுசமயம் அமுலுக்கு வந்துவிட்டதாலும், ஆசிரியர் திருமிகு ரா. நாராயணஸ்வாமி அவர்கள் சிறைபுக நேர்ந்ததாலும் செய்திருந்த முயற்சிகளனைத்தையும் விட்டுவிட்டு, இங்கிருந்து 'பாரதி'யைப் பிரசுரிக்க மறுபடியும் புதிதாகப் பிரவேசிக்க நேர்ந்தது. இதிலும் சிறிது காலதாமதம் நேர்ந்தது. இது விஷயங்களெல்லாம் அவ்வப்போது துண்டுப் பிரசுரங்களாலும் பத்திரிகைகளாலும் பிரசுரித்திருந்தது அன்பர்கள் காணப் பெற்றதே. இம் முறை 'பாரதி'யை மறுபடியும் வெளியிடும் முயற்சியில் வெற்றி யடைந்ததுபற்றி மிகுதியும் மகிழ்ச்சியடைகின்றோம்.

'பாரதி' தோன்றி, இற்றைக்கு மூவாண்டுகட்கு மேலாகின்றதென்பது அறியக் கூடியதே. இம் மூவாண்டிலும் 'பாரதி' யாற்றியுள்ள தொண்டைப்பற்றிப் பெருமைதரக் கூறத் துணிகின்றேமில்லையென்றாலும், குறைகூற முடியாதெனத் திட்டமாய்ச் சொல்லப் பின்னடையோம். வசதிகளில்லாத ஓர் சிறு கிராமத்தி லிருந்துகொண்டு, 'பாரதி'யைப் பிரசுரிக்க நாம் அடைந்த கஷ்டம் கொஞ்சமல்ல. அன்றியும் தனது சிறந்த ஆசிரியரைத் தேசப் பணியில் தளராதவராக்கி, இரு முறையும் சிறைக்கனுப்பித் தந்துளது விசேஷிக்கத்தக்க செய்தி யொன்றாம். இவையல்லாமலும் 'பாரதி' தோன்றிய மூன்று வருடங்களிலும் இன்னல்—இடைஞ்சல், சிறை வாழ்வு இவைகளுக்கிடையில் பத்திரிகையின் விருத்திக்காக மட்டும் அதிகப்படச் செலவிடப் பெற்ற தொகை ரூ. 5000; மிகுதியான நஷ்டத்தையும் பொருட்படுத்தாது, கொண்ட கொள்கையில் மாற்றமில்லாது, விரும்பத்தகுந்த முறையில் வெளிவந்து களிப்புத் தந்துள தென்பதை விரித்தல் வேண்டா மெனவே விடுகின்றோம். 'பாரதி'யினிடம் நாம் கொண்ட அன்பால், அதன் பணியில் பிறவொன்றையும் கருதாது துணிந்துள பொறுப்பில். நாட்டார் 'பாரதி'யின்பால் கொண்டுள்ள நல்லபிப்பிராயமும், அன்பின் பெருக்கும், ஆதரவும் சேர்ந்து துணையாக நின்றே, இதுபோது பத்திரிகையை வெளியிட உதவிய தென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

...பாரதி,' தமிழ் நாட்டில் ஓர் சிறந்த மாஸிகையெனப் பல்லோ
...ாகச் சொல்ல வாய்க்கப்பெற்றதா யிருப்பினும், அதற்
...களால் மிகுதியும் விரிவாகப் பரவ முடியாத
...பற்றி நமது மனம் பெரிதும் வருந்திய
... குறைபாடுகள் இவ்வாண்டு முதலாக
...ணுகின்றோம். நிற்க,

...க்கவேண்டியது மிக மிக
...ரியர்களும் அன்பர்
...னைத்திலும்



தெளிவுபட எழுதிக்கொண்டும் வந்திருக்கிறார்கள். ஆயினும் என்ன? போதிய பலன் கிடைத்ததாகத் தெரியவில்லை யெனவே சொல்ல வேண்டி யிருக்கின்றது. இன்று சுதேச பாஷைப் பத்திரிகைகளில் சிறந்ததும் அவஸ்யமானது மென்று யாவராலும் மதிக்கப்பெற்று வருவதற்கே, 10,000 சந்தாதாரர்களில்லை யென்றால், யாரை நோவது!

நாடு, மொழி ஆகியவற்றிற்குத் துணைசெய்ய முன்வாராது, பல்வேறு அனாவஸ்யமான பழக்கங்களுக் கடிமைப்பட்டு, செல்வத்தை இறைத்து, நாட்டின் கௌரவம், மொழியின் தொன்மை, பிறப்பின் தன்மை யாகியவற்றைச் சிறிதும் கருதாது பாழடையும் சோதரரைப் பற்றியே அறிவுளோர் கவலைப்பட வேண்டியிருக்கின்றது. விழலுக் கிறைக்கும் செல்வத்தின் ஓர் சிறு பகுதியை, அவர்களால், அவர்கள் அறிவு விருத்தியடைந்து மேம்பட்டு வாழ, நல்ல பத்திரிகைகளுக்கு உதவ, முன் வருவார்களாயின், எங்ஙனம் இருக்கும்! நாட்டில் அறிவும் ஆற்றலும் செல்வமும் ஒருங்கே நிறைய வாய்க்க, இதுபோது பத்திரிகை வாசிப்பே இன்றி யமையாததா யிருக்கின்றது. அறிவாளர் பெருக விஷய ஞானம் மிகும். நாட்டின் க்ஷேமம் நாளுக்கு நாள் பற்பல துறைகளிலும் சிறப்புற்று உதாரணமாய்த் திகழும். எல்லாவித நலனையும் அளிக்கும் காமதேனுவா யிலங்கும் பத்திரிகையின் விசேடத்தை நம்மனோர் பெரிதும் அறியாத குறையினாலேயே, தமிழ் நாட்டில் பத்திரிகைகள் சிறப்புறவும், ஓர் பெரும் விஷயத்தை ஆக்கவும் காக்கவும் முடியாது தயங்கித் தத்தளித்து வாடுகின்றனர். நாட்டார் தம் செல்வத்தின் மிகச் சிறிதளவான ஒரு பகுதியையேனும் நல்ல நல்ல பத்திரிகைகளுக்கு ஈந்து அதனை வளர்த்து வரின், புதிய புதிய எத்தனையோ நன்மைகளை மிகுதியாகப் பெறுவதோ டமையாது அநியாயமாகச் செல்லும் பொருள்களனைத்தையும் ஒருவாறு கட்டுப்படுத்திவிடலாம். குடிக்கும், கூத்துக்கும், புகைக்கும், இன்னும் பல விதமான குடி கெடுக்கும் விஷயங்களுக்கும் நீர்போலச் சென்று மறைந்தொழியும் பொருள்களையும் மீட்டுவிடலாம், நல்லதனைத்திலும் வெறுப்புக்கொள்ளும் வீணர்களின் போக்கையும் திருத்திவிடப் பத்திரிகை யொன்றினாலேயே சாலும். அதனாலன்றோ பத்திரிகையை இன்று 'உலக சர்வ கலாசாலை' என அறிஞர் செப்புகின்றனர்.

இதுபோது 'பாரதி'யின் 4-ம் ஆண்டின் முதற் சஞ்சிகையை வெளியிடுகின்றோம். 'பாரதி' இதற்கு முன்னெல்லாம் ஆங்கில ஆண்டையே ஆரம்பமாகப்பற்றி வந்துளது. இவ் வருடம் முதல் அதன் 4-ம் பிராயத்தில் தமிழ் வருடத்தைப் பின்பற்றியே—அதன் முதல் மாதமே ஆரம்பமாக இச் சித்திரையிலிருந்து வெளி வருகிறது. தமிழ் நாட்டில் பிறந்து தமிழில் பிரசுரமாகும் தமிழ்ப் பத்திரிகையை ஆங்கில ஆண்டின் ஆரம்பத்தை முதன்மையாகக் கொண்டு நடத்துவது

சரியல்லவெனும் பலரின் குறிப்பையேற்று இம் முறையை அனுசரித்துளோம். ஆங்கில அபிமானிகள் இதுபற்றி மாற்றமாக எண்ண மாட்டார்களெனவே எண்ணுகின்றோம்.

'பாரதி'யை மா நகரிலிருந்து பெரிதாகவும் விஷயங்களும் படங்கள் பலவும் நிரம்பியதாகவும் பிரசுரிக்க முயற்சித்திருந்த எண்ணம் நிறைவேற, தேவி பரா சக்தி இன்னருள் சமீபிக்காததினால், மறுபடியும் இங்கிருந்தே முன் போலவே வெளியிட வேண்டியதாயிற்று என்பதை முன்னரே கூறினோம். ஆயினும் 'பாரதி'யை இங்கிருந்து வெளியிடுவதில் மேலும் மேலும் சிரமமே அடையவேண்டியிருக்கிறதினால், சந்தர்ப்பம் சாதகமானவுடன் மதுரைக்கு மாற்றுவதாகவே எண்ணியுள்ளோம்.

'பாரதி' இம் மூன்று ஆண்டிலும் பெற்ற கஷ்ட நஷ்டங்களை மேலும் பெறாது, தனது நோக்கங்களை நிறைவேற்றிவர அவஸ்யமும் நெருக்கடியும் நேர்ந்திருக்கின்றது. இது சமயம் 'பாரதி'யின் செல்வநிலைமையை நல்லவிதமாக உயர்த்திவிடுவது விசேஷமாக விரும்பத்தக்கதாயிருக்கின்றது. நாம் இவ்வாறு செய்வது நியாயமும் முறையுமென்பதை அன்பர்கள் உணர்வார்களாக.

'பாரதி' நாட்டாரிடம் நன்கு பரவவும் சிறந்த முறைகளெல்லாவற்றையும் பெற்று வெளிவரவும் போதிய பணம் வேண்டியதெனத் தெரிவிக்க வேண்டியதில்லை. 'பாரதி'யின் சந்தாத் தொகையோ ரூ 2. அபரிமிதமாகச் சந்தாதாரர்கள் நிறைந்திருந்தாலும் நமது இந்த எண்ணங்கள் நிறைவேற ஒருவாறு உதவியாயிருக்கலாம். இந்நினைவு சமீபத்தில் சித்திபெறுமென வெதிர்பார்க்கவியலாதாகையினாற்றான், போஷகர்களை அதிகம் அதிகமாகச் சேர்க்க முனைந்துள்ளோம். இதற்குச் செல்வர்களே உதவி செய்யவேண்டும். அறிஞர்களையும் அன்பர்களையும் தனது நண்பர்களாக மிகுதியாகப் பெற்றிருக்கும் 'பாரதி'க்குச், செல்வர்களும் உதவி செய்வதில் அவ்விதமே யிருந்துவர விருப்புகின்றோம்.

'பாரதி'யின் பணக் கஷ்டத்தைப் போக்கி, ஓர் நல்ல நிலைமையில் சீரும் செல்வமும் நிரம்பிய பத்திரிகையாக்கவே போஷகர்களை ஆரம்ப முதல் விரும்பியேற்றுவர நேர்ந்ததென்பதை இங்கு அறிவிப்பது நமது கடமையாகும். பத்திரிகையின் நஷ்டம் நம்மைப் பாதித்ததினாலும், நாட்டின் பண நிலை சிலாக்கியமற்றிருப்பதினாலுமே போஷகர்களைச் சேர்க்கவேண்டியதவஸ்யமென உணர்ந்தோம். அதற்காக இது சமயம் முயற்சி செய்யும்போது, நமது எண்ணத்தையறிந்து, பூர்த்தி செய்யச் சில அன்பர்கள் போஷகராயிருக்க முன்



வந்து ஊக்கியதுபற்றி அவர்களுக்கு மிகவும் நன்றி பாராட்டுகின்றோம். ஆரம்பத்தில் இஃதோர் விரும்பத்தக்க நற்குறியேயாகும். விரைவில் இதுபற்றி மேலும் முயலுவதாகவே யிருந்துவருகின்றோம். குறைந்தது இவ்வாண்டில் புதிதாக ஒரு நூறு கனவான்களையேனும் போஷகர்களாக்கத் தீர்மானித்துள்ளோம். இதற்கு நாட்டார் அனுதாபம் நிரம்பிய ஆதரவு மிக மிகத் தேவை. செல்வர்கள் தாமாகவே இதில் மனமுவந்து உதவுவார்களென நம்பி எதிர் பார்க்கின்றோம். 'பாரதி'யின் அன்பர்களும் அறிஞர்களும் நம்மைப்போலவே இதற்காகப் பிரத்தியேக முயற்சிகளனைத்தையும் யெடுத்துக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

வீடுதோறும் 'பாரதி'யின் பிரவேசமிருந்துவர விரும்பும் எமது எண்ணத்தைப் பூர்த்திசெய்ய நண்பர்கள் முயற்சிப்பது போலவே பத்திரிகை ஏஜெண்டுகளும் அதிகமாக உதவி செய்ய முன்வரவேண்டியதவஸ்யம். ஓர் சிறந்த பத்திரிகையைப் பூரணமானதாகக் காண வேண்டுமாயின் பெருப்பாலோரின் ஓர் முகமான ஒத்துழைப்பும் முயற்சியுமின்றிச் சாத்தியமில்லை. ஆகையினால், ஏஜெண்டுகளும் இதில் அதிகமாகப் பங்கு பெறுவதை ஆவலுடன் விரும்புகின்றோம்.

அறிஞர்கள் ஆசி நிறைந்த ஆதரவும் செல்வர்களின் மனங்கனிந்த உதவியும் அன்பர்களின் தியாகம் ததும்பிய பணியும் சேர்ந்ததே ''பாரதி''யின் வடிவமாகும் எனச் சுருங்கக் கூறிவிடலாம். அஃது மேலும் சிறக்கவும் வாழவும் நம்மவர் முன் வருவரெனும் ஓர் திட நம்பிக்கையினாலேயே சென்ற ஆண்டுகளிலுற்ற சிரமங்களைச் சிறிதும் கவனியாது முன்வந்திருக்கிறோம். 'பாரதி'க்காக எதனையும் விருப்பமுடன் ஈந்து இன்புற ஆவலுள்ள எமக்கு, தமிழர்களின் துணைவலிமுழுதும் கிடைக்கப்பெறுமென வெண்ணி எதிர் பார்த்துக் காத்திருக்கின்றோம். தேச நிலையும் கால மாறுபாடும் 'பாரதி'யைப் பாதிக்காதிருக்கவும் அதன் செழிப்பும் வளர்ச்சியும் வாழ்வும் நீண்டு பெருகவுமே, இன்று நமது செயல்களனைத்துமென உறுதி கூறுகின்றோம். அவ்விதம் அறிவும் ஆக்கமும் கலந்து நிறைந்து வரும் 'பாரதி'யைக் காணத் தேவியின் கிருபையை வேண்டுவோமாக.

சந்தா நேயர்கட்கோர் வார்த்தை. சென்ற மூவாண்டிலும் 'பாரதி'யின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து பெற்று, சீற்றமும் மாற்றமுமடையாது மேலும் அதன் வளர்ச்சிக்கே உதவியாக நின்று துணை செய்துவருவதற்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அது மேலும் மேலும் வளர்ந்தோங்கி நிலவக் கூடுமான உதவிகளை நாளும் செய்து வர வேண்டுவது முன்னிலும் அவஸ்யமும் அவசரமுமாகுமெனத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இவ் வாண்டில்

# மனம்போல வாழ்வு.

திரு. S. ஆறுமுகம் அவர்கள், B. A., L. T.

வாழ்க்கையின் வெற்றியைப் பற்றியும் அதை அடையும் வழிகளைப்பற்றியும் எடுத்துக் கூறும் பல தேசத்துச் சான்றோர்களும், அது எப்படி மக்களுடைய மன நிலையோடு பிரிக்க முடியாத ஒரு தொடர்பைப் பெற்றிருக்கிற தென்று வற்புறுத்துவதை நாம் படிக்கின்றோம். அதைக் கண் கூடாக வாழ்க்கையிலுங் காண்கின்றோம். நம் வாழ்க்கையில் நிகழும் செயல்களனைத்தும் மனதோடும் அதன் எண்ணங்களோடும் கருத்துக்களோடும் சம்பந்தப்பட் டிருக்கின்றன. மனமே உலகில் நிகழும் பல

---

'பாரதி' புத்துயிரும் புது வாழ்வும் பெறும் நிலைமையில், சந்தாதாரர்கள் தம் தம் கடமையைப் பூர்த்தி செய்யத் தளராது தயங்காது முன் வருவது இன்றியமையாததாகும். 'பாரதி'யின் உயர்வு இன்று தமிழர் ஒவ்வொருவரின் முயற்சியிலும் கலந்திருக்கிற தென்பதைத் தாழ்மையுடன் தெரிவிக்கின்றோம்.

'பாரதி'யின் போஷகர்களே, செல்வர்களே, அறிஞர்களே, அன்பர்களே, சந்தாதாரர்களே, 'பாரதி'யின் 4-ம் ஆண்டின் முதல் வெளியீட்டை இன்று இதோ உங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கிறது. அதன் விஜயம் நலந்தருவதாக. அது உங்களில் பெறும் அன்பு, அறிவு, ஆக்கம், ஆற்றல் ஆகியவற்றை அவ்விதமே திரும்பப் பன்மடங்காக்கித் தருவதாயிருப்பதால், அதன் வளர்ச்சி செழிப்புறுவதற்கும் வாழ்வு பெருகுவதற்கும் உங்களின் உதவி யனைத்தும் கிடைக்கப்பெறுவதை எதிர் பார்க்கின்றோம். தேவி பாரதி, 'பாரதி'யையும் அன்பர் அனைவரையும் நல் வாழ்வுறுத்தி நாளும் நலம்பல பெற்று வாழ அருள் பாலிக்குமாறு இறைஞ்சி இதனை இனிது முடிக்கின்றோம்.

அன்புமிக்க
ரா. சுப்ரமண்யம்.



செயல்களுக்கும் காரணமா யிருக்கின்றது. ஆக்கல், அளித்தல், அழித்தல் முதலியவற்றைச் செய்யும் கடவுளே மனது என்று கூறினும் பொருந்தும்.

ஒரு மரத்தில் பழம் ஒன்று பழுப்பதற்கு அடிப்படையாயும் மூல காரணமாயு மிருப்பது அதன் பூவே என்பது வெளிப்படை. அப் பூ பிஞ்சாகிக் காய்த்து, முற்றிப் பிறகு பழமாகின்றது. அதே போன்று நம் வாழ்நாளில் நிகழும் ஒவ்வொரு செயலையும் ஒரு பழமென்று வைத்துக்கொண்டால், அதற்கு அடிப்படையாக விருக்கும் பூ, நம் மனதின்கண் தோன்றும் எண்ணம் அல்லது கருத்தே யாகுமென்று கூறுவது மிகையாகாது. பூ, பிஞ்சாகிக் காய்த்துப் பழமாவது போல் எண்ணமும் படிப்படியாக முதிர்ந்து இறுதியிற் செயலாக மாறுகின்றது.

எக் காரியத்தை நாம் செய்யினும் அதை முக்கரணத் தூய்மையோடுஞ் செய்வதே மேன்மை. பூவைப் போன்று முதலில் மனதின் கண் தோன்றுகின்ற எண்ணம் மொழி மூலமாக, எல்லோரும் அறியும் வண்ணம், பூவில் மறைந்து கிடந்த பிஞ்சு வெளிப்படுவதைப் போன்று வெளிப்படுகின்றது. காற்று, வெயில், கால நிலை முதலியவற்றால் முதிர்கின்ற பிஞ்சைப் போன்றே, வெளிப்படுத்தப்பட்ட எண்ணமாகிய பிஞ்சும், பிறர் அதை விரும்புதல், வெறுத்தல், சரி அல்லது தவறு என்று தம் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தல் முதலிய ஆராய்ச்சிகளாகிய காற்று, வெயிலாதிய கால நிலைகளால் முதிர்ச்சி யடைந்து, இறுதியில் அவற்றிற்கெல்லாந் தப்பினால் வாழ்க்கையிற் செய்து காட்டலாகிய பழமாகப் பழுக்கின்றது. பெருங் காற்றுக் காற்றாது உதிர்ந்துபோம் பிஞ்சை ஒக்க நெறிமுறைக் கெதிரான எண்ணமா யிருப்பின், அதைச் செய்கையில் செய்வதிலும் பயனில்லை யென்பது தேற்றம்.

தற்கால உளநூல் வாணர் செய்யும் ஆராய்ச்சியின் பயனாக, எப்படி எண்ணம் உண்டாகிற தென்றும், அது எங்ஙனம் செயலாக மாறுகின்ற தென்றும் படித்து மகிழ இடமிருக்கின்றது. நினைப்பதற்கு இடமாக விருக்கும் மனதிற்கும் மூளைக்கும் நெருங்கிய சம்பந்த மிருக்கின்றது. "ஏனைய ஐம்பொறிகளும் மனது, வெளியுலகிலுள்ள பொருள்களை அறிந்து கொள்வதற்கு உரிய வாயில்களாக இருக்கின்றன" என்று ஹார்ன் என்னும் உளநூற் பண்டிதர் கூறுகின்றார். வாயில்களாக விருப்பதோடு, மனது செய்யுமாறு கூறுகின்ற செயல்களைச் செய்வதற்கும் அவை உதவுகின்றன. நாம் ஒரு மணி அடிக்கும் ஒலியைக் கேட்கின்றோம். மணியின் ஒலி என்னும் எண்ணம் காதின் மூலமாக உண்டாகின்றது. கதவைத் திறக்கும்படி யாரோ ஒருவர்

மணியை யடிக்கின்றார் என்ற எண்ணம் உண்டாக, உடனே கதவைத் திறக்க வேண்டுமென்ற மறு எண்ணம் தோன்றி, உறுப்புக்களுக்கு அறிவிக்கப்படவே, கால் கைகள் அவ் வேலையைச் செய்கின்றன. இன்னது என்று அறியும் எண்ணமும், இன்னது செய்ய வேண்டுமென்று கூறுகின்ற எண்ணமும் இரண்டு வெவ்வேறு வித நரம்புகளின் மூலம் முறையே முதலில் மூளைக்கும், பிறகு அவயவங்களுக்கும் அறிவிக்கப்படுகின்றன வென்பது உடல் நூல் படித்தவர்களுக்கு நன்கு தெரியும்.

இம் மனத்தின் மூலமாகவே வாழ்க்கையின் செயல்களனைத்தும் நடப்பதால் அது எவ்வளவு இன்றியமையாத தென்பதையும் அதை நாம் எப்படிக் காப்பாற்றி நல் வழிப்படுத்த வேண்டுமென்பதையும் நாம் நன்றாய்க் கவனித்து நோக்க வேண்டும். மனமெனும் நினைப்பாலேயே நாம் மேல் நிலையையோ அல்லது கீழ் நிலையையோ அடைகின்றோம். ஆவதும் அதனால் அழிவது மதனாலேயே. மனிதனது "அக நிலைமைகளி லிருந்தே அவனது புற நிலைமைக ளெல்லாம் வருகின்றதினால், புற நிலைமைகளைத் திருத்துவதற்கு அக நிலைமைகளைத் திருத்த வேண்டும்" என்று ஜேம்ஸ் ஆலன் என்னும் ஆங்கிலப் பண்டிதரும் கூறியுள்ளார். மனம் போலேயே மக்களுக்கு வாழ்வு அமைகின்றது. மக்களே, அதாவது மனமே நினைப்பின் தலைவனாகும். ஒழுக்கத்தைத் தோற்றுவிப்பதும், தனது நிலையையும், சுற்றுச் சார்பையும் விதியையும் உண்டாக்கிக்கொள்வதும் அதுவே. இதுபற்றியன்றோ 'மனிதனே தன் வாழ்க்கை வெற்றியை உண்டாக்கிக் கொள்ளும் சிற்பி' என்ற ஆங்கிலப் பழமொழியும் எழுந்தது. 'பெருமையுஞ் சிறுமையும் தான்றர வருமே' என்றதும் இக் காரணத்தை முன்னிட்டே.

"நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும்—நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்"

என்று நாலடியாரும்,

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்று திருக்குறளும் முழங்குகின்றன.

மேற்கூறியாங்கு மனமே யாவற்றிற்கும் அடிப்படை யென்னு முண்மையைக் கண்டோமாதலின், நாம் மனதின் பயிற்சியைப் பற்றியும், வாழ்க்கை நிலையைப் பற்றியும் ஊக்கத்தோடிருப்பின் ஒழுக்கம்



என்னும் குன்றேறி மேல் நிலையை யடைந்து பேரின்ப வீட்டின் வாயிற்படியில் கால் வைப்போம். பேரின்ப வீட்டுக் கதவு நமக்குத் திறக்கும். அவ் வுண்மையை ஒருவர் சரிவரக் கண்டறிவாராயின், அவர் தம் மனதை அதிக முயற்சியோடு பாதுகாத்து, சுத்தப்படுத்திக் கொண்டு, அதன் மூலமாகத் தம் புற வொழுக்கத்தையுந் தூய்மைப் படுத்திக்கொள்ள வழியுண்டு. தம் மனத்தை ஆள்வதற்கும் அதை அடிமைப்படுத்தித் தம் இலட்சியத்திற்குத் தக்கபடி திருத்திக்கொள்வதற்கும் வழியுண்டு.

அவ்வாறின்றி அவ் விஷயத்தில் நாம் தூக்கத்தோடிருப்பின் அறியாமை யென்னும் இருளிலுழன்று, தண்ணீர் நிறைந்திருப்பதைப் போன்று மேலுக்குத் தோற்றும் சேற்றிலிறங்கிப் புதைபட்டவராவோம். அப்பொழுது ஒழுக்கத்தைச் சரியாகத் திருத்துவதாகிய மேலான கடமையைச் செய்யாது சோபித் திரிந்தவர்களாவோம். அறிவு மயங்கித் துன்பக் கடலில் மூழ்க நேரிடும். அப்படியுள்ள ஒருவன் தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்கின்றவனாகின்றானே யொழிய பிறர் அவனைக் கட்டுப்படுத்தவில்லை யென்பதை எல்லோரும் உணர வேண்டும். முயன்றால் அவன் அக் கட்டினின்று விடுவித்துக் கொள்ள முடியுமென்பதையும் அறிய வேண்டும்.

இவ் வுண்மையை உணர்ந்த எல்லோரும் தங்கள் வாழ்க்கை நிலையை உயர்த்தித் தங்கள் பெயரைப் பொறித்துவைக்க வேண்டுமென்னும் அவாவினால் தூண்டப்படுவர் என்பது திண்ணம். பலமும் சுத்தமும் பொருந்திய நினைப்புகள் உடம்பிற்கு ஊக்கத்தையும், வன்மையையும், அழகையும் கொடுக்கும். இந் நல்லெண்ணங்கள் நற் பழக்கங்களாக மாறி நற் பயனை விளைவிக்கும். அங்ஙனே தூய்மையற்ற கெட்ட எண்ணங்கள் அவற்றை யுடையோரது புறத்தையும் கெடுக்கு மென்பதில் ஐயமுண்டோ? கெட்ட எண்ணங்கள் தோன்றுங் காலமெல்லாம் இரத்தமுங் கொதிப்படைந்து அசுத்தமாவதோடு, நற் செயல், வாழ்வு முதலிய தண்ணீர் ஊறும் ஊற்று வாயாகிய நினைப்பு, விஷங் கலந்ததைப் போலாகின்றது. ஆகவே, ஒருவன் வாழ்க்கையிலும் மனத்திலும் தூய்மையுடையவனாயிருக்க வேண்டின், அகம் புறமாகிய இரண்டு கருவிகளும் சுத்தத்தோடும் ஒற்றுமையோடும் உழைக்க வேண்டும். இயற்கையில் தோன்றும் கெட்ட மன நிலைகள் கெட்ட செயல்களைச் செய்யத் தூண்டுதலின் அவற்றை யொழித்து நல்ல மன நிலைகளிற் பழக வேண்டும் தன் உடை ஊண் முதலியனவும், தன்னைச் சுற்றியிருக்கும் பொருள்களும், இருக்குமிடத்தின் தன்மையும், நண்பரும் இன்னும் இவை போன்ற பல

விஷயங்களும் ஒருவனகத்தே எழும் நிலைகளுக்கு முற்றிலும் காரணமா யிராவிடினும், ஒரு சிறிதாயினும் அவற்றை மாற்றுவதற்கு இடமிருப்பதால் அவையெல்லாம் சரியாயிருக்குமாறு செய்வதவசியம்.

காமம், தன்னலத்தையே பாராட்டல், அழுக்காறு, அவா, வெகுளி முதலியன கெட்ட மன நிலைகளில் முக்கியமானவை. அவை அசுத்த உடையினை அணிதல், உடம்பினையும் அசுத்தமாய் வைத்துக் கொள்ளுதல், பிறர் பொருளை விழைந்து அதை அடைய வேண்டிப் பாவ காரியங்களைச் செய்தல், பேருண்டி, பெருந் துயில் முதலிய பல கெட்ட செயல்களுக்கு ஒருவனை யிழுத்துக்கொண்டு சென்று, வாழ்க்கையைக் கெடுக்கும். தன்னலமின்மை, அடக்கம், அன்பு, அருள், பொறுமை முதலியன நல்ல குணங்கள். இவை முற் கூறிய படி ஒழுக்கமென்னும் குன்றிலேற்றி மேல் நிலைக்குக் கொண்டுபோய் விடுவன. மன நிலையை உயர் வாழ்வோடு சம்பந்தப்படுத்தி மேன்மை யடையும் உண்மையை, என்றும் பொன்றாப் புகழ் படைத்துச் சென்ற ரஸ்கின், டால்ஸ்டாய் முதலியோருடைய வாழ்க்கைச் சரித்திரங்களிலிருந்தும், மகாத்மா என்று உலகு முழுவதும் கொண்டாடும் காந்தி யடிகளின் வாழ்க்கையிலிருந்தும் நேரில் கண்கூடாகவும் காணலாம். எனவே,

"நல்ல செய்து நரரை யுயர்த்தவு
மல்ல தெய்தங் களற்றிடை யாழ்ப்பவும்
வல்லதிந்த மன"

மென்பதுவும்,

"அறவி னைக்கு மரும்பொரு ளின்பொடு
வெறுவ தற்கும் பெருங்கல்வி கற்றுயர்
விறலி னுக்குநல் வீரந் தனக்குமொண்
துறவி னுக்குந் துணை மனம்"

என்பதும், அதனால் அதை நல் வழிப்படுத்த வேண்டு மென்பதும் பெறப்படுகின்றது. மன நிலையைச் செம்மையுறச் செய்தபின்றான் வாழ்க்கை.

# இந்தியா இழந்த இன்பம்.

திரு. **K. G.** கிருஷ்ணன் அவர்கள், B. Sc., (Hons.)




கி. மு. 300 வருடங்களுக்கு முன்னிருந்தே உலகத்திலேயே சீரும், சிறப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்று பூமா தேவிக்கோர் திலகம் போன்றும், விசித்திர வேலைகளுடைய கைத்தொழில், வெகுதூர வியாபாரம் இவைகளில் என்னாட்டையும் இணை கூறக் கூடாமையும், மேற்கே மெக்ஸிகோ (அமெரிக்காவில்) வரையும், கிழக்கே சீனா தேசம்வரையும் இந்தியர்கள் இந்தியக் கப்பல்களில் பெருந் திரைக் கடல் கடந்து சென்றுவந்த பெருமையுமான சில பாரத தேசத்தின் புராதனச் சிறப்புகளை மறந்து தற்கால நவீன நாகரிகத் தடபுடலில் தட்டுக்கெட்டு "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்," என்ற விதமாக தற்காலம் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் சில வசதிகள் மேனாட்டார் வருகையாலன்றி ஏற்பட முடியாதென்று தேசாபிமானமும், தேச பக்தியும் சிறிதுமின்றி வாய் வீணாகக் கூறித் திரியும் நம் பாரதப் புதல்வர்களில் சிலர் உளர்.

"எப் பொருள் எத்தன்மைத் தாயினும்
அப் பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்று திருவள்ளுவ நாயனார் கூறிய வண்ணம், இந்தியா தேசம் தற்போது வகித்திருக்கும் பிற்போக்கான நிலைமையைக் கண்டு அதின் புராதன உண்மை நிலைமையை உணராதிருப்பது கூடாவாம். நமது பண்டை இந்தியக் கைத்தொழில், வியாபாரம், இவைகளின் சிறப்புகளைமாத்திரம் மேனாட்டுச் சரித்திர ஆசிரியர்களின் சரியான ஆதாரங்களுடன் இவண் சிறிது ஆராய்வோம்.

## இந்தியக் கைத்தொழில் சிறப்பு

வீபர் என்னும் மேதாவி யொருவர் (Prof. Weber) இந்தியாவைப்பற்றிக் கூறுவதாவது:

“மிகவும் மெல்லிய பின்னல்களை யுடைய விசித்திர நூல் வேலைகளுக்கும், பல நிறங்களை அளவுடன் கலந்து வேண்டிய நிற முண்டாக்குவதற்கும், உலோக வேலைக்கும், விலையுயர்ந்த கற்கல் வேலைக்கும் இன்னும் பலவித அரிய வேலைகளுக்கும், வேலை நுட்பத்திற்கும் இந்தியா வெகு காலத்திற்கு முன்னேயே போற்றப்பட்டது.”

கி. மு. 3000 வருஷங்களுக்கு முன்னேயே பேபிலோன் நகரம் இந்தியாவோடு வியாபாரம் நடத்தியதற்குப் போதிய ஆதாரம் உளது. எகிப்து தேசத்தில் கி. மு. 2000 வருஷங்களுக்கு முன்னிருந்த பெரிய பொம்மை (Mummies)கள் இந்தியாவின் மெல்லிய மஸ்லின் துணிகளால் சுருட்டப்பட்டிருந்தன.

“ரோமாபுரி (Rome) இந்தியாவின் ஏராளமான கைத்தொழில் சாமான்களை ஏற்று வந்தது. மூத்த பிலினி (இத்தாலி தேசத்து ஆசிரியர்) என்பவர் ரோமாபுரி வருடாந்தரம் ஏராளமான திரவியத்தை இந்திய வியாபாரத்தில் போக்கிவிடுகிறதென்று புகார் கூறியிருக்கிறார்.” “டக்கா மஸ்லின் துணியை, கிரீக் தேசத்தார் ‘கங்கேடிகா’ (Gangetika) என்றழைத்தனர்...............ஆகவே இந்தியாவில் பஞ்சு நூற்றல் நெசவு செய்தல் இமை 2000 வருஷங்களுக்கு முன்னேயே வெகு முன்னேற்ற மடைந் திருந்ததென்று சந்தேகமின்றி முடிவுக்கு வரலாம்.” (Imperial Gazetteer of India, Vol· III page 195)

புரோபசர் வில்சன் தன் சரித்திர புத்தகத்தில் கூறுவதாவது: “கைத்தொழில் விருத்தியான இந்த தேசத்தில் (இங்கிலாந்தில்) இரும்பு உருக்குவது வெகு சில வருஷங்களாகத்தான் நடைபெறுகிறது. ஆனால் இந்துக்கள் வெகு காலந்தொட்டு இரும்பை உருக்கவும், அவைகளைப் பொருத்தவும், உருக்காக்கவும் கூடிய கைத்தொழிலைச் செய்து வந்திருக்கின்றனர்.”

“இரும்பு வேலைகள் பொதுவாக வேண்டியவைகளுக்கு உதவியதல்லாமல் இந்தியா, பிரதேசங்களுக்கு உயர்ந்த இருமபுச் சாமான்களை ஏற்றுமதி செய்யவும் முடிந்தது.........குறைந்தது 1500 வருஷங்கள் வயதையுடைய டில்லிக் கருகிலுள்ள பெயர் பெற்ற இரும்புத் தூணின் விசித்திர வேலையைக் கவனித்தவர்களுக்கு ஆச்சரியத்தை யுண்டாக்கியதோடு புராதன இரும்பு வேலையின் சாமர்த்தியத்தையும் அறிவுறுத்துகிறது. இந்தியாவில் பூமி சாஸ்திர இலாகாவைச் சேர்ந்த பால் (Mr· Ball) என்பவர், கொஞ்ச காலத்திற்குமுன்கூட உலகத்திலேயே அப்படிப்பட்ட இரும்புத்



தூண் செய்யும் இயந்திரசாலை இருந்திருக்க முடியாது என்றும் தற்போதுகூட அப்படிப்பட்ட சாலைகள் அநேகம் காண்பதரிது என்றும் ஒத்துக்கொள்ளுகிறார். அஸாம் மாகாணத்தில் பீரங்கிகள் செய்யப்பட்டன. உலகப் பிரசித்திபெற்ற டமஸ்கஸ் (Damascus) ஈட்டி செய்வதற்கு இந்திய உருக்குகள் உபயோகிக்கப்பட்டன. அக் காலத்தில் பேர்ஸியா தேசத்தார் இந்தியாவுக்கு நடந்து வந்து இந்திய உருக்குகளை வாங்கி ஏற்றுமதி செய்து வந்தனர். இங்கிலாந்திலும் கத்தி முதலியவை செய்ய இந்திய உருக்குகள் அதிகம் தேவையா யிருந்தது. இவ்விதமாக இரும்பு உருக்குவதிலும், உருக்குகள் (Steel) செய்வதிலும் இந்தியா குறைந்தது 2000 வருஷங்களுக்கு முன்னேயே முன்னேற்ற மடைந்திருந்தது.” (Ranade's ‘Essays on Indian Economics,’ pages 159—160).

ரோமாபுரியோடு முதலாம் நூற்றாண்டில் வெகு தீவிரமாய் இந்தியா வியாபாரம் நடத்தினது. 4-ம், 5-ம் நூற்றாண்டுகளில் இரு சீன தேசத்துச் சுற்றுப் பிரயாணிகள் இந்தியாவுக்கு வந்து அதின் அற்புதத்தைத் தொழில் வியாபார உன்னதத்தைப் பற்றிப் புகழ்ந்துரைத்துச் சென்றிருக்கின்றனர். பிறகு வெனிஸ் நகரத்தோடு பெரும் வியாபாரம் நடந்தது. அதன் பிறகு ஜெனோவா நகரோடும் வெகு காலம் வியாபாரம் வளர்ந்தோங்கிற்று. இவ்விதமாக அரிய கைத்தொழில் வியாபாரங்களில் மிகவும் முன்னேற்ற மடைந்திருந்த இந்தியா பல ஐரோப்பிய வியாபாரிகளைக் காந்தம் இழுத்தாப்போல் தன்னிடம் இழுத்தது. “(இந்தியாவின்) வெகு விசித்திரமானதாயும், மானிடர்களால் எங்கும் உண்டாக்கப்படாததாயும் அவ்வளவு உயர்ந்த சாமான்களை அநேக வியாபாரிகள் வெகு அபாயங்களுக்கும், கஷ்டங்களுக்கும் ஆளாகித் தேடி யோடி வந்தனர்.” (Murray—‘History of India,’ page 27).

## ஈஸ்ட் இந்தியா கம்பெனி வருகை

வெனிஸ், ஜெனோவா நகரங்கள் க்ஷீண திசை யடைந்த பிறகு இந்திய வியாபாரங்களைப் போர்த்துகீயர்களும் டச்சுக்காரர்களும் கைப்பற்றினர். இங்கிலாந்து தேசத்து வியாபாரிகளும் தங்கள் பொறாமையால் இதைக் கண்கொண்டு பார்க்கச் சகியாமல், “ஈஸ்ட் இந்தியா கம்பெனி” ஒன்று இந்தியாவோடு வியாபாரஞ் செய்ய 1600-ம் வருஷம் டிசம்பர்மீ 31௳ எலிஜபேத் இராணியிடம் உத்திரவு பெற்று உண்டாக்கினர். இதை உண்டாக்கினது, “இங்கிலாந்தின் கைத்தொழில் சாமான்களைக் கொண்டுபோய் இந்தியாவிலுள்ள இயற்கை சாமான்களுக்கு மாற்றுவதற்கல்ல,” (East India

Company Report para 2) ஆனால் இந்தியாவிலிருந்து கைத்தொழில் சாமான்களையும், இயற்கைச் சாமான்களையும் ஏராளமாய் ஏற்றிச் செல்லவே. ஏனெனில் அப்பொழுது இங்கிலாந்தில் கைத்தொழில் சாமான்கள் உண்டாக்கப்படவில்லை.

"17-ம் நூற்றாண்டின் இறுதியில் ஏராளமாகக் குறைந்த விலைக்கு நுட்பமான வேலைப்பாட்டை யுடைய காலிகோ, மஸ்லின் முதலிய துணிகள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு ஜனங்கள் வெகு ஆவலாய் வாங்கியதின் காரணமாய் அங்கு சிறிது உண்டாகியிருந்த உரோமப் பட்டு நெசவுகள் க்ஷீண திசையை யடையத் தொடங்கிற்று. ஆகவே 1700-ம் ஆண்டிலும், 1721-லும் பார்லிமெண்டில், பலவித நிறங்களைத் தாங்கியிருந்த காலிகோ துணிகளையும், சாமான்களையும் அல்லது பருத்தி கலந்த மற்ற எந்த அச்சு அல்லது நிறங்களிட்ட சாமான்களையும் (சில குறிப்பானவை தவிர) இங்கிலாந்துக்குள் பிரவேசிக்கச் செய்யக்கூடாதென்று ஓர் சட்டம் பிறப்பித்தது." (Lecky's—'History ofc England in 18th Century').

## இந்தியா எவ்வாறு வேளாண்மைத் தேசமானது?

ஈஸ்ட் இந்தியா கம்பெனியார்கள் துவக்கத்திலேயே வங்காள தேசத்திலிருந்து ஏராளமாக இங்கிலாந்து சென்ற பட்டு நெசவு வேலையில் பொறாமை கொண்டு இந்தியக் கைத்தொழில் சாமான்களை இங்கிலாந்து செல்லாமல் தடுத்ததுமன்றி, "இந்தியாவிலேயே கம்பெனிக்கு உண்டான அதிகாரத்தைக் கொண்டு இந்தியாவில் விருத்தியான கைத்தொழில்களை நசுக்கிவிட யத்தனித்தனர். கம்பெனியார்கள் 1769-ம் வருஷம் மார்ச்சுமீ 17வ வங்காள அதிகாரிக்கு, வங்காளத்தில் பட்டு எடுத்து சேகரிக்கும் வேலையை விட்டு அதனை நெசவு செய்து வியாபாரஞ் செய்யுந் தொழிலை நசுக்கிவிட வேண்டுமென்று எழுதியிருந்தனர். அன்றியும் பட்டு நூல் சுற்றுவோர்கள் கம்பெனியாரின் வேலை செய்யுமிடத்தில் அவர்களுக்காக வேலை செய்யவேண்டுமே யன்றி தங்கள் வீடுகளில் அவ்வித வேலைகள் நடைபெற லாகாதென்றும் கூறினர்." (Mr. Romesh Dutta—"Economic History of British India).

ஈஸ்ட் இந்தியா கம்பெனியை நடத்தும் அதிகாரிகள் 1783-ல் இந்தியாவை ஆளும் விதத்தைக் குறித்து எழுதிய கடிதத்தைக் காமன் சபையின் 9-வது ரிப்போர்ட்டில், 37-வது அனுபந்தமாகக் குறிப்பிட்டிருப்பது பின் வருமாறு: "இந்தத் திருத்தம் (மேலே குறிப்பிட்டபடி) மிகவும் நன்மையைப் பயக்கக் கூடியதாயிருக்கிறது. முக்கியமாக பட்டு முதலிய நூல் சுற்றுவோர்களை (நமது)



வர்த்தகசாலையில் வேலை செய்யக் கொண்டுவருகிறது. இவ்வித நூல் சுற்றுவோர்களைச் சரியான கவனமின்றி தங்கள் வீடுகளில் செய்துவர விட்டிருந்தால் அதைத் தடுப்பது முக்கிய கடமை. கவர்ன்மெண்டாரின் அதிகாரத்தைக் கொண்டு கொடூரமான தண்டனைகளால் அவைகளைப் பரிபூரணமாய்த் தடுத்துவிடலாம்." (Quoted by Mr. Romesh Dutta at page 45 of his book)

ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இவ்வித ஏற்பாடுகள் செய்த பிறகு இந்தியக் கைத்தொழிலும், வியாபாரமும் எவ்வித நிலைமைக்கு வந்ததென்று பார்ப்போம்.

"100 வருஷங்களுக் குள்ளாகவே டக்கா என்ற பட்டணத்தில் வியாபாரம் ஒரு கோடி ரூபாய் பெருமானதென்றும், அதின் ஜனத்தொகை 200,000 என்றும் மதிப்பிடத் தக்கதா யிருந்தது. 1787-ல் இங்கிலாந்திற்கு டக்காவிலிருந்து மஸ்லின் துணிகள் 30 லட்சம் ரூபாய் மதிப்புக்கு அனுப்பப்பட்டன. ஆனால் 1817-ல் அவைகள் ஏற்றுமதி யாகவே கிடையாது. நூல் செய்வதும், நெசவு வேலையும் அநேக ஜனங்களுக்கு வேலை கொடுத்தது போக இப்பொழுது அவ்வித வேலையொன்றும் கிடையாமல் போய்விட்டது. பெரிய பட்டணங்களில் செல்வமாய் வசித்த குடும்பங்களெல்லாம் கிராமங்களுக்குப் போய் தங்கள் ஜீவனத்திற்குத் தேடவேண்டியதாயிருந்தது. தற்போது டக்காவில் ஜனத் தொகை 79,000 இம்மாதிரி டக்காவில் மாத்திரமல்லாது எல்லா ஜில்லாக்களிலும் நடந்தது." (Sir Henry Cotton—'New India' 1890.)

இந்தியக் கைத்தொழில் சாமான்கள் இங்கிலாந்தில் வந்து அதிகம் விற்பனை யாகக்கூடாதென்று அதிகமாய் வரிப்போட்டுத் தடுத்த விதத்தை 1813-ல் டிக்பி (Mr. Digby) பின் வருமாறு குறிப்பிடுகிறார்:

| | | ப. | ஷி. | பெ. |
|---|---|---|---|---|
| 100 பவுன் மதிப்பான காலிகோ துணி வரி | ... | 81 | 2 | 11 |
| *100 பவுண்ட் இடை பருத்திக்கு வரி | ... | 0 | 16 | 11 |
| பருத்தி நெசவுத் துணி 100 பவுன் மதிப்பு | ... | 81 | 2 | 11 |
| தலை மயிர், ஆட்டு ரோமம் முதலிய சாமான்கள் 100-க்கு | ... | 84 | 6 | 3 |
| பூப்போட்ட வெள்ளை காலிகோ, மஸ்லின் துணி | | 32 | 9 | 2 |
| மற்ற விதப் பஞ்சுத் துணிகள் | ... | 32 | 9 | 2 |

* சாதாரண பஞ்சு இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு அதிகம் வந்து சேரவேண்டு மென்று (அதினால் அதின் கைத்தொழில் கெட) அவைகளுக்குக் குறைந்த வரி யிட்டிருப்பதைக் காண்க.

ஆனால் ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தது முதல் அவர்கள் சாமான்கள் இறக்குமதி வரியின்றியோ அல்லது வெகு குறைந்த வரியுடனோ வந்து சேர்ந்தன. இந்திய பருத்தி நெசவுத் துணிகள் இங்கிலாந்தில் இறக்குமதி வரி 100-க்கு 81 பவுன் கொடுத்தபோது இந்தியாவில் ஆங்கிலேயத் துணிகள் 100-க்கு $2\frac{1}{2}$ பவுன் கொடுத்ததென்றால் இந்தியாவின் கைத்தொழில் வியாபாரம் எவ்விதமாய் நசுக்கப்பட்டன வென்று தெரிகிறதல்லவா? இப்படி இந்தியக் கைத்தொழில் விருத்தி யடையாமல் க்ஷீண திசை யடைந்து வரும் சமயம், "இங்கிலாந்தில் நெசவு இயந்திரங்கள் உண்டாகி ஆங்கிலேயர் இந்தியாவுக்கு ஏராளமாய் வந்து தங்கள் வியாபாரத்தை விருத்தி பண்ணி இந்திய நெசவுத் துணிகளைத் தலையெடுக்க விடாமல் தடுத்து இந்தியாவைக் கடைசியாக வேளாண்மைத் தேசமாக மாற்றிவிட்டனர்." (Mr. Henry St George Tucker—"Memorials of the Indian Govt." Page 494. a Directer of East India Company—Quoted by Mr. Romesh Dutta at page 262 of his book.)

இன்னும் இந்திய சரித்திர ஆசிரியர் எச். எச். வில்ஸன் (H. H. Wilson) எழுதியதாவது:

"(இந்தியப் பட்டு, பருத்தித் துணிகளின் மீது) வரிகளும், சட்ட திட்டங்களும் ஏற்படாவிட்டால் பேய்ஸ்லி, மான்செஸ்டர் (Paisley and Manchester) 'மில்கள்' நின்றுவிட நேர்ந்து, நீராவி இயந்திரம் வந்த பின்னும் தொடங்குவது சாத்தியமில்லாமலும் போயிருக்கும். இந்தியக் கைத்தொழில் நாசத்தால் அவைகள் தோன்றின. இந்தியா சுதந்திரமா யிருந்தால் தன்னை அபகரித்தவர்களுக்கு அபகாரஞ் செய்து பிரிட்டீஷ் சாமான்களின் மீது வரிகளை அதிகம் போட்டு வரவிடாது தடுத்து தனது கைத்தொழில் நாசமாகாது பாதுகாத்திருக்கும். இவ்வித சுய பாதுகாப்புக்கு இடமில்லாது போய்விட்டது. அவள் (இந்தியா) அன்னியரின் அடக்கத்திலிருந்தாள். பிரிட்டீஷ் சாமான்கள் இந்தியாவில் யாதொரு வரியும் கொடாமல் புகுத்தப்பட்டன. அன்னியக் கைத்தொழிலாளர் சரிசமானமா யிருந்து போராட முடியாமல் தன் எதிரியை (இந்தியத் தொழிலாளர்)த் தேசிய அதிகார அநியாயத்தைக் கொண்டு அடக்கிக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொன்றனர். (Quoted by Mr. Romesh Dutta,—Ibid Pages 262—263.)

## கப்பல் செய்தல்—ஓர் புராதன இந்தியத் தொழில்

இவ்விதமாக இந்தியாவில் நெசவுத் துணிகளின் விருத்தி நசுக்கப்பட்டுப்போனது போலவே மற்றொரு முக்கியமான



தொழில்—கப்பல் செய்யும் தொழில், ஆங்கிலேய கைத்தொழில் வர்த்தகர்களால் நசுக்கப்பட்டது. கப்பல் செய்வது இந்தியாவுக்கு ஓர் புராதனக் கைத்தொழில். இந்தியர் கிழக்கிலும் மேற்கிலும் வெகுதூரம் வரை கப்பல்களில் சென்று வந்தனர் என்று டாக்டர். ராதாகுமுட் மூக்கர்ஜீ அவர்களின் "இந்தியர் கப்பல் சரித்திரம்" என்ற புத்தகத்தில் விரிந்து கிடக்கிறது; டாரியஸ் (Darius) என்பவரும் அலெக்ஜாண்டரும் இந்தியாவில் நூற்றுக் கணக்கான கப்பல்கள் செய்து கொண்டு போயிருக்கின்றனர். இந்தியர்களின் சாதாரணக் கப்பல் படகுகள் ஆப்பிரிக்கா தேசத்து நதிகளுக்கும், மெக்ஸிகோ (Mexico) தேசம் வரையும் சென்றிருக்கின்றன. ஆகவே மெக்ஸிகோவுக் கடுத்தாப்போல் சில தீவுகளில் இந்துக் கோவில்கள் இருந்து மறைந்ததாகவும் கூறப்படுகிறது. இந்திய கிழக்குக் கரையிலிருந்து ஜாவா, சுமாத்ரா, போர்னியோ, சீனு முதலிய கீழ் பாகங்களுக்கும் இந்தியப் படகுகள் போயிருந்திருக்கின்றன.

"நூறு வருஷங்களுக்கு முன் கப்பல் செய்யுந் தொழில் இந்தியாவில் வெகு நேர்த்தியா யிருந்ததால் இந்தியாவிலிருந்து பிரிட்டீஷ் கப்பல்களோடு இங்கிலாந்து சென்று தேம்ஸ் நதியில் பிரிட்டீஷ் கப்பலோட்டிகளால் ஓட்டப்பட் டிருக்கின்றன." (Mr. Digby, "Prosperous British India.")

"இந்தியச் சாமான்கள் இந்தியாவில் செய்த கப்பல்களில் ஏற்றப்பட்டு லண்டன் நகரை யடைந்தபோது தங்கள் விரோதிகளின் படைக் கப்பல்களைக் கண்டு எவ்வளவு நடுக்கம் ஏற்படுமோ அவ்வளவுக் கதிகமாக ஆங்கிலேயர்களுக்கு உண்டாயிற்று. லண்டனில் கப்பல் செய்வோர் முதலாவது தங்களுக்குக் கெடுதிகள் வந்ததென்று கூக்குரலிட்டனர். அவர்கள் தங்கள் கைத்தொழில் நாசமடைந்த தென்றும், இங்கிலாந்தில் கப்பல் செய்து பிழைக்கும் குடும்பங்கள் பட்டினியாகக் கிடக்க நேரிடுவது நிட்சய மென்றும் கூக்குரலிட்டனர்" (Mr. Taylor—"History of India"—Page 216) என்று அனேக சரித்திர ஆசிரியர்கள் இந்தியக் கப்பல் கைத்தொழிலைப் பற்றிக் கூறியிருக்கின்றனர்.

இப்படி இங்கிலாந்தில் ஜனங்கள் கூக்குரலிட்ட தொருபுறமிருக்க ஈஸ்ட் இந்தியா கம்பெனி அதிகாரிகளும், "உயர்ந்த நிலைக்கு வந்திருக்கும் இந்தியக் கப்பலோட்டிகள் நமது தேசத்திற்கு வந்து நமது தன்மைகளைக் கண்டு சென்றால் நாம் அடக்கி

நம்மைக் கண்டு பயப்படும்படி செய்திருக்கும் ஆசியா தேசத்தினர் மனதில் நம்மை மதியாத வெண்ணத்தை உண்டாக்கி விடுவார்கள். ஆதலால் நமக்கு அநேக இடையூறுகளுண்டு" (Fourth Report—East India Company Page 23, 24; Quoted by Mr. Digby in "Prosperous British India Page 101—103) என்று பல காரணங்களோடு இதையுங் கூறி இந்தியக் கப்பலும், கப்பலோட்டிகளும் இங்கிலாந்திற்கு வரவிடப்படாதென்று ஆலோசித்தனர்.

"இந்தியாவில் கப்பல் விருத்தியை அடக்காமலிருந்தால், இந்தியாவின் நிலைமை எவ்வளவு உயர்ந்திருக்கும்! இங்கிலாந்திற்கும் எவ்வளவோ பலம் அதிகரித்திருக்கும்!! கடந்த 40 வருஷங்களில், இதர நாடுகளைப் போல் கப்பல் போக்கு வரத்துச் செய்வதில் முன்னடைந்திருந்தால் இந்தியாவிற்கும் பிரிட்டிஷ் இராஜ்ஜியத்திற்கும் எவ்வளவு க்ஷேமமா யிருந்திருக்கும்!!!" (Pandit M. M. Malaviya-'Indian Industrial Commission' 1916—18, Page 300.)

"இங்கிலாந்தின் கைத்தொழில் வங்காளம், கர்னாடகம் இவைகளிலிருந்து ஏராளமாய் வந்த திரவியங்களைக் கொண்டு விருத்தியடைந்தது.................பிலாஸி (Plassy)யை எதிர்த்து ஜெயம் பெறுமுன்னும், இந்தியாவிலிருந்து செல்வ ஆறு இங்கிலாந்திற்கு ஓடுமுன் நமது தேசத்தின் (இங்கிலாந்தின்) கைத்தொழில் ஆற்றின் வடிவைப்போல் வெகு குறைவா யிருந்தது. இயந்திர வேலைகளை ஒத்துப் பார்த்தால் லங்காஸயர் நெசவுத் தொழில் இந்தியாவை ஒத்திருந்தது. ஆனால் வேலையின் சாமர்த்தியம், இந்தியர்களின் நெசவுத் தொழில்களை ஆச்சரியப்படக் கூடியதாகவும் மேனாடுகளில் எத் தேசத்திலும் அவைகள் போலக் கிடைக்கக் கூடாததாகவும் செய்தது. பருத்தி வேலையைப் போலவே இரும்பு வேலைகளிலும்." (Mr. Digly in 'Prosperous British India;' Quoted from I bid Pages 30—31.)

இந்தியாவில் நெசவுத் தொழில் நசுக்கப்பட்டு கடைசியில் பருத்தியை அனுப்பி துணிகளுக்கு இங்கிலாந்திலிருந்து எதிர்பார்க்க நேரிட்டது, இந்தியாவின் தலையெழுத்தே யன்றி வேறல்ல! 1801-ம் வருஷம்வரை இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு 21,000 பவுன் விலை மதிப்பான துணிகளும், 1813ல் 108,824 பவுனுக்கு மதிப்பான துணிகளும் அனுப்பப்பட்டன. ஈஸ்ட் இந்தியா கம்பெனியின் உரிமைப் பத்திரம் புதிப்பிக்கப்பட்ட அவ் வருஷத்தில் கம்பெனிக்கு வியாபார உரிமை இல்லாமல் போன பிறகு பிரிட்டிஷ் வியாபாரிகள் ஏராளமாய் வந்து நுழைந்தனர். சுமார் 100 வருஷங்களுக்குள் இங்கிலாந்தின் துணிகள் ஏராளமாய் வரத் தலைப்பட்டு கடந்த மகா யுத்தத்திற்குச் சிறிது முன் 44,581,000 பவுன் மதிப்புள்ள துணிகள் இந்தியாவில் இறக்குமதியாயின.



## இந்தியாவில் புகை வண்டி ஏற்பட்ட காரணம்

இந்தியாவில் புகை வண்டிப் பாதைகளை இந்திய வைசிராய் லார்ட் டென்ஹௌஸி ஏற்படுத்தினார். அப்படி ஏற்படுத்தியதின் கருத்தை அவர் ஜீவிய சரித்திரத்தை எழுதிய சர் வில்லியம் ஹண்டர் கீழ் வருமாறு கூறுகிறார்:

"இது லார்ட் டென்ஹௌஸியின் போற்றத்தக்க கருத்து. அவர் தன் புதிய புகை வண்டிப் பாதைகளால் புதிதாகச் சேர்த்த தேசங்களின் தூரங்களைக் குறைத்து, தன் இராணுவ அதிகாரத்தை ஆங்காங்கு ஸ்தாபித்துக்கொள்ள முடிந்ததோடு பிரிட்டிஷாரின் முதலாளிகளையும், அவர்கள் வியாபாரங்களையும் இந்தியாவுக்குள் இலகுவாகப் பல விடங்களில் வந்து சேரவும் புகை வண்டிகளை உபயோகமாகச் செய்தது, மற்ற எந்த கவர்னர் ஜெனரலுக்கும் மனதில் உதிக்கவில்லை...............அவருடைய எட்டு வருஷ ஆளுகையில் இயற்கைப் பருத்தி ஏற்றுமதி இரண்டு பங்காயிற்று. 1,500,000 பவுனிலிருந்து 3,300,000 பவுனுக்கு வந்தது. தானியங்களின் ஏற்றுமதி மூன்று பங்கதிகமாயிற்று. 890,000 பவுனிலிருந்து (1848). 2,900,000 பவுனுக்கு உயர்ந்தது (1856)......... மொத்தம் ஏற்றுமதி 13,300,000 பவுனிலிருந்து, 23,000,000 பவுன்வரை ஏறியது............இப்படியாக விளைவு அதிகரிக்கவே இந்தியர்கள் எப்பொழுது மில்லாத விதமாக இங்கிலாந்து தேசத்தின் சாமான்களை வாங்க ஏற்பட்டது. இந்தியாவில் துணிச் சாமான்களின் (இங்கிலாந்திலிருந்து) இறக்குமதி 1848ல் 300,000 பவுனிலிருந்து 1856ல் 630,000 பவுனுக்கு உயர்ந்தது." (Sir W. W. Hunter—"Dalhousie" Pages 191, 193–166 )

## இவைகளின் முடிவு—அடிக்கடி பஞ்சமே!

இந்தியாவின் கைத்தொழில் நாசத்தாலும், பிரிட்டிஷாரின் சாமான்கள் இறக்குமதியின் உயர்வாலும், இந்தியாவிலிருந்து இயற்கைச் சாமான்கள் ஏற்றுமதியாலும், கைத்தொழில்களில் ஈடுபட்ட எல்லா வகுப்பினர்களையும் தேசத்தில் எல்லாப் பாகங்களிலும் தரித்திரர்களாக்கி அவர்கள் அதிகம் அதிகமாய்த் தங்கள் ஆகாரத்திற்கு வேளாண்மையைக் கைக்கொள்ள நேரிட்டது. 1878—79 வருடங்களில் மொத்த ஏற்றுமதி 58,750,000 பவுன்

மதிப்புள்ள சாமான்களில் கேவலம் 100-க்கு 6½ விகிதமுள்ள பாகமே இந்தியக் கைத்தொழில் சாமான்களாயிருந்தது. 1880-ம் வருஷத்தில் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி மாத்திரம் 51,397,561 பவுன் மதிப்பாயிற்று. இந்த இரண்டு செய்கைகளின் காரணத்தால் இந்தியாவின் பொருளாதாரம் குறைவுபட்டு அடிக்கடி கொடும் பஞ்சங்கள் உண்டாகத் தொடங்கின. இந்தியாவில் 1800 வருஷத்திலிருந்து 1825-ம் வருஷம் வரை 5 பஞ்சங்களும், 1825 லிருந்து 1850 வரை 2 பஞ்சங்களும், 1851 லிருந்து 1875 வரை 6 பஞ்சங்களும், 1876 லிருந்து 1900 வரை 18 பஞ்சங்களும் உண்டாயின. சரித்திர ஆசிரியர் டிக்பி (Mr. Digby) என்பவரின் சொல்படி, அதிகாரிகளின் கணக்குப்போல் 1854 லிருந்து 1901 வரை மாத்திரம் 28,825,000 ஜனங்கள் மாண்டு மடிந்தனராம்! அதே டிக்பி 1901ல் எழுதும்போது கூறுகிறார்: "ஏறக்குறைய 19-ம் நூற்றாண்டில் கடந்த 30 வருஷங்களில், 100 வருஷங்களுக்கப்பால் ஏற்பட்ட பஞ்சங்களைவிட நான்கு பங்கு அடிக்கடியும், நான்கு பங்கு விரிவாகவும் பஞ்சங்கள் உண்டாயின."

1877–78ல் உண்டான கொடிய பஞ்சத்திற்குப் பிறகு கவர்ன்மெண்டார் இந்திய பஞ்ச நிவாரணக் கூட்டமொன்று ஏற்படுத்தி பஞ்சங்களை நீக்கும் வழிகளை ஆராய உண்டாக்கினர். அவர்களுடைய அறிக்கையில், "இந்தியாவில் பஞ்சங்களை உண்டாக்குவதற்குக் கொடிய காரணமாயும், நிவர்த்தி செய்து கொடுப்பதற்கு மிகவும் கஷ்டமாயும், அரிதாயுமிருப்பது; ஜனங்களின் அதிகமான பேர் வேளாண்மையையே கையாண்டு மற்றவர்கள் வேறு எந்த விதமான கைத்தொழிலினாலும் ஜீவனாம்சம் பெறக்கூடாமையாலுமே.....................இவ்வித நிலைமைக்குப் பூரண நிவாரணம், காலங்களுக்குத் தகுந்தவாறு உயரவும், தாழவுமில்லாத கைத்தொழில்களை (வேளாண்மையைத் தவிர்த்து) உண்டாக்குவதிலேயேதான் காணப்படுகிறது."

இப்படிக் கூறிச் சென்ற கமிஷனுக்குப் பிறகு 1900ல் இரண்டாவது கமிஷனும் ஏற்பட்டது. இவ்வாறு ஏற்பட்டு அறிக்கைகள் மாத்திரம் வெகு அழகாக எழுதி வைத்து இருக்கின்றனவேயன்றி அவைகள் எவ்வளவு தூரம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றனவென்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இவ்வாறு இந்தியா தன் இன்பத்தை இழந்து துன்பத்திலாழ்ந்தது இம்மட்டோ?

# எனது குருநாதரின் கடிதம்.

V

(மனோகரனார்.)

இந்தியனே!

விழித்தெழு. உலகை உற்று நோக்கு; அந்தோ விஞ்ஞான சூரியன் உதயமாகிவிட்டான். உன்னைக் கவர்ந்து கொண்டிருக்கிற அஞ்ஞானமென்னும் மாயப் போர்வையை உதறியெறி. உன்னைப் பிணித்துள்ள மூடக் கொள்கைகளென்னும் தளைகளையறுத்துத் தள்ளு. சமயத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் உன்னைச் சுற்றியெழும்பியுள்ள வீண் வெளிச் சடங்குகளென்னும் சுவர்களைத் தகர்த்தெறிந்து வெளிப்படு. 'வீடே கைலாயம், கிராமமே வைகுண்டம்' என நினைத்திருந்த எண்ணத்தை விட்டொழித்து, இப் பரந்த உலகத்தைக் கண்ணெடுத்துப் பார். உன் தேசத்தின் அளவையறிந்துகொள். விரிந்த இவ்விந்திய நாட்டில் நீ எந்த மூலையில் வசிக்கிறாயென்பதைக் கவனி. இந்தியாவெங்கணும் பரவி எத்துணை மக்கள் வாழ்கின்றனரென்பதை நோக்கு. ஏறக்குறைய இந்தியாவின் ஜனத்தொகை முப்பத்தாறு கோடியென்பதையறிந்துகொள். அவர்களில் நீயொருவன் அல்லவா? நீ நலம் பெற விரும்பினால் உனது நாடு முதலில் நலம் பெற வேண்டுமென்பதை மறவாதே. உனது நாடு மேன்மையெய்த வேண்டுமாயின் உனது நாட்டு மக்களனைவரும் ஒற்றுமையெய்த வேண்டுவதவசியமாகும். உங்களில் ஹிந்துக்களென்றும், மகம்மதியர்களென்றும், கிறிஸ்தவர்களென்றும், சீக்கியர்களென்றும், ஆதித்திராவிடர்களென்றும் பல பிரிவுகளைக் கூறிக்கொண்டுப் பிளந்து நிற்கும் வரையில் உங்களிடையில் ஒற்றுமை நிலவுவதெங்ஙனம்? அடிமை நாட்டில் இத்துணைப் பிரிவுகளா? ஒவ்வொருவனும் 'தனது சமயமே உண்மையும் உயர்வுமானதென்றும், பிற சமயங்களனைத்தும் உண்மையற்றனவும், தாழ்மையானவுமெனவும்' கருதும் வரையில் இந்திய மக்களிடையில் அன்பு அரும்புவதேது? அன்பு உதயமாகாத வரையில் ஒற்றுமையும், சமத்துவமும் யாண்டு நிலவப் போகிறது? சாதியினிடத்தும், சமயத்தினிடத்தும் உலகில் மக்கள் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றும், அபிமானமும் அகலுவதற்குக் காலம் அணுகி நிற்கிறது. உண்மை முடிவை உறுதியுடன் கண்ட ஒரு சமயம் (மதம்) உலகில் உளதாயின் அதற்குப் புறம்பாக உலகில் பல சமயங்கள் தோன்றுவதற் கிடமுண்டோ? எனவே ஆராய்ச்சியில் ஒரு முடிவெய்திய சமயம் உலகில் எது என்பதைச் சிந்தனை செய். ஒவ்வொரு மதமும் 'தான் கண்டதே காக்ஷி

கொண்டதே கோலம்' என்ற முடிவைக் கொண்டு வாதிட்டுச் சமர் விளைக்கின்றதன்றி, உலக மக்களின் வாழ்க்கைச் செம்மையினைக் கருதிச் சீர்படுத்துகின்றதில்லையே. இந் நிலையில் உனது சமயத்தையே பெருமை பாராட்டிப் பிறச் சமயத்தாரை வேறுபடுத்தி நோக்கும் உன் அறிவின்மைதானென்னே!

சாத்திரங்களென்ற சமய நூற்களின் அஸ்திவாரத்தின் மீது அமைக்கப்பட்டுள்ள சமயக் கோட்டைகளே சரிந்து விழுமிக் காலத்தில், அடியும் முடியும் இன்றி இடையில் வந்து புகுந்த சாதி வேற்றுமைகள் எங்கு சாயாமலிருக்கப் போகின்றன? எனவே 'எனது சாதி உயர்ந்ததென்றும், உனது சாதித் தாழ்ந்ததெனவும் கூறிக் காலம் விளைக்கும் இழிதகைமை உன்னைவிட்டகலட்டும். உலகில் சாதியென்பதென்ன? சமயமென்பதென்ன? யாவும் ஒற்றுமையை வீழ்த்தி வேற்றுமையை விளைக்கும் விபரீத உருவங்களேயல்லவா? அந்தோ! சாதியின் பெயரால் உலகில் எத்தனைபேர் மாண்டனர்! சமயத்தின் பெயரால் உலகில் எவ்வளவு மக்கள் மண்ணில் சாய்ந்தனர்! உலக சரித்திரத்தை ஒரு முறை விரித்துப் பார். ஐரோப்பா கண்டத்தில் சமயத்தின் பெயரால் எத்தனை ரத்த ஆறுகள் ஓடியிருக்கின்றன! எத்தனை மக்கள் அவ்வாறுகளுக்குப் பலியாகியிருக்கின்றனர்! இந்தியாவின் சரித்திரப் பக்கத்தைக் கவனி. சைவ வைணவச் சண்டையும், சமண சைவச் சண்டையும், ஹிந்து மகமதியச் சண்டையும் எத்தனை ரத்த ஆறுகளைத் தோற்றுவித்திருக்கின்றன! அதற்கென எத்தனை மக்கள் உயிர் துறந்திருக்கின்றனர்! மக்களை வாழ்விக்க வந்த மதங்களே அவர்களின் மரணத்திற்குக் காரணமானதின் அதிசயமென்னே! நீ கொண்டுள்ள சாதி, சமயாபிமானங்களை ஒரு புறத்தே நிறுத்தி, நடுநிலைமையில் நின்று உற்றுப் பார். சிந்தனை செய். பல நூல்களையும் ஆராய்ந்து பார். பல தேச மக்களின் அறிவாராய்ச்சிகளைச் சுவைத்துப் பார். பகுத்தறிவைப் பயன்படுத்து. விஞ்ஞான சாத்திரம் விளக்கும் உண்மைகளைக் கவனி. உலக நிலையை நோக்கு. இவ்வாறு கூறியதால் உனது சமயத்தின் மேலான கருத்துக்களை மறக்க வேண்டுமென்பதில்லை. ஒருவர்க்கொருவர் வேற்றுமைகளைக் காட்டி இழிவுபடுத்தும் புறச் சமயச் சடங்குகளை யொழித்து நாட்டின் ஒற்றுமைக்கு வழி கோலலாமல்லவா? அவ்வாறு செய்யின் இன்று இந்தியாவின் ஒற்றுமைக்கு ஊறு விளைக்கும் ஹிந்து முஸ்லீம் வேற்றுமைகளுக்கிடமுண்டாகுமா? இந்தியாவில் தலை விரித்தாடும் சாதிப் பேய்களையொழிக்கும் வரையில் பிராமணர், பிராமணரல்லாதார், சாதி இந்துக்கள், ஆதித்திராவிடர்கள் என்ற பேதங்கள் ஒழியுமா? அவை யொழியாத வரையில் சாதி இந்துக்களுக்குச் சற்றேறக் குறைய ஆறு கோடி தாழ்த்தப்பட்ட இந்திய மக்களின் துணைவலி யேற்படுமா?



வீணாக வாய் வேதாந்தம் பேசி உன் குற்றத்தை மறைக்கப் பார்க்கிறாய். தாழ்ந்த குலத்திற் பிறந்தோர் நாயன்மார்களாகவும், ஆழ்வார்களாகவும் ஆகவில்லையா என்கிறாய். ஆதி சங்கரரின் முன்னர் சிவபெருமான் ஆதித்திராவிடனாகத் தோன்றித் தீண்டாமையைக் கண்டித்துள்ளாரென ஒப்புக்கொள்ளுகிறாய். நந்தனார் சிதம்பரத்தில் உயர்வு பெற்றாரென்று உளமுருகக் கூறுகிறாய். உன் அயலில் வசிக்கும் ஓர் ஆதித்திராவிடனை உன் அருகில் வரவும், பள்ளியில் படிக்கவும் அனுமதிக்கின்றாயில்லையே! ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள் இந்தியரைச் சமத்துவமாக நடத்துவதில்லை யென ஆத்திரத்தோடு கூவுகிறாய். இந்தியாவில் உன்னோடு பிறந்து, உன்னுடன் வளர்ந்து, உனக்குத் தொண்டு செய்துவரும் தீண்டாதாரொருவனை விலங்கினும் கேவலமாக நடத்துகின்றனையே! மேலும் உன் அறியாமையின் கூற்றை யென்னென்பது! நீ இன்று தீண்டாதவனாகக் கருதி நடத்தும் மாறன் சாம்பான் நாளை மகம்மதியனாகி மஸ்தான் சாயபு என்றோ, கிறிஸ்தவனாகி மாசிலாமணி யென்றோ பெயர் தாங்கி வந்தால் அவனை உயர் குலத்தானென மதித்து மரியாதைக் காட்டி உபசரிக்கின்றாய். மலையாளத்தில் ஒரு தீண்டாதான் கழுத்தில் சிலுவைக் குறியை மாட்டிக் கொண்டு உன் அருகில் வந்து வேலை செய்ய அனுமதிக்கின்றாய். அவனே அச் சிலுவையை எடுத்துவிட்டு அசல் ஹிந்து மதத்தனாயிருக்கையில் அவனைக் கண்ணில் காணவும் பின்னடைகின்றாய். இதுவா உன் மதாபிமானம்! சபாஷ்! தாழ்ந்தவனொருவனுக்குக் கதி மோக்ஷம்—உயர்வு நல்காத—மேன்மை கொடுக்க முடியாத உனது ஹிந்து மதத்தை எவ்வாறு உயர்வெனக் கருதுகிறாய்?

ஹிந்து மதம் என்ற மாத்திரத்திலேயே 'அமெரிக்க நாட்டின் சிகாகோ நகரத்தில் நடைபெற்ற சர்வ மத மகா சபையில் சுவாமி விவேகாநந்தரால் ஹிந்து மதத்தின் உயர்வு நிரூபிக்கப்பட்டிருக்கிற'தெனத் துள்ளிக் குதிக்கின்றாய். அவ் விவேகாநந்தரே உனது சமூகத்திலும், சமயத்திலும், சாதியிலும் காணப்படும் தீமைகளையும், ஊழல்களையும், கொடுமைகளையும் பலமாகக் கண்டித்துக் கதறிக் கதறி இரத்தக் கண்ணீர் வடித்திருப்பது உன் மனதிற் கெட்டவில்லையே! ஹிந்துமத (வேத, சாஸ்திர, புராண, இதிகாச) நூற்களைக் கண்டு பெருமை கொள்ளுகின்றாய். மாக்ஸ் முல்லர் போன்ற மாபெரும் பண்டிதர்கள் உனது நூற்களைப் புகழ்ந்து கூறியிருப்பதாக மகிழ்ச்சியடைகின்றாய். ஆனால் அவர்கள் எந்த நூல்களை, எம்மட்டும், எவ்வாறு வியந்து போற்றியுள்ளார்களென்பதை மறந்து விடுகின்றாய். கடவுளுக்குப் பெண்சாதியும், பிள்ளையும், கூத்தியும், விபசாரமும், பொய்யும், புளுவும், திருட்டும், புரட்டும் கற்பித்துக் கூறி மக்களை இழிதுறைக்கிழுக்கும் இழிந்த நூல்களையும் உயர்வாக மதிக்கின்றாய்.

ஒருவன் பட்டை நாமம் சாத்தியோ அல்லது கட்டுக் கட்டாக விபூதி யணிந்தோ உன் வீட்டை யடைந்து உன் மனைவியைப் பெண்டாள விரும்பினானையின் பதில் கூறாமல் அவனது இச்சையை நிறைவேற்றி வைத்தலே கடவுளுக்கு உகந்ததா மெனக் கூறும் எத்தனைக் கடை (இழிவான)ப் புராணங்களை நீ உண்மையாக மதித்திருக்கிறாய்! உனது சமய நூல்களில் கண்ட விஷயங்களின் சத்தியா சத்தியங்களை ஆராய்ந்து உணரும் சக்தியை நீ முதலில் பெற வேண்டும். லோக மான்ய பால கங்காதர திலகர் கீதையின் ரகசியத்தைப் பற்றி ஒரு நூல் எழுத நேர்ந்த அவசியத்தை யறிந்தாயா? தயாநந்தர் தோன்றி ஹிந்து வேத மந்திரங்களுக்குப் புதிய உரை எழுத நேர்ந்ததன் காரணத்தை உணர்ந்தாயா? இராஜா இராம மோகனர் பிரம்ம சமாஜத்தைக் காண வேண்டி நேர்ந்த நிலையைக் கவனித்தாயா? ஈஸ்வர சந்திர வித்யா சாகரர் எதற்காகப் பாடுபட்டார்? தேவேந்திரநாத தாகூர் எதற்காக உழைத்தார்? கவீந்திரராகிய ரவீந்திரர் என்னத்திற்காகப் பாடுபடுகின்றார்? மகாத்மாஜீ உலக சமாதானத்தை விரும்புவதேன்? அரவிந்த கோஷ் அனுஷ்டிக்கும் விரதம் என்ன? இவர்கள் அனைவருக்கும் மேலாக இயற்கை அன்னை இட்டு வரும் கட்டளை யென்ன? உலகம் எவ்வாறு மாறி வருகிறது? சமத்துவ தர்மம் எதனை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வருகிறது? அதனை மறுக்க முயலும் ஸ்தாபனங்கள் படும் பாட்டினைக் கவனித்தாயா?

உண்மையைத் திரித்துக் கூறியும், தத்துவார்த்தங்கள் புனைந்து கூறியும் குற்றத்தை மறைத்துக் குணமான தெனக் காட்டி உலகை ஏய்க்கப் பார்க்கிறாய். அதில் நீ ஏமாறுகிறாயே ஒழிய, உலகம் விழித்துக்கொண்ட தென்பதைக் காண்கிறாயில்லை நீ சேற்றைப் பூசிக் கொண்டு அதைச் சுகந்தத்தோடு கூடிய சந்தனப் பூச்சென்று கூறி மகிழ்ச்சி யடையலாம், உலகம் உன்னைக் கண்டு நகைக்கு மென்பது மாத்திரம் நிச்சயம். உனது தேச பக்தியும் வெளி வேஷமாக விருக்கிறதே. இந்தியாவிலுள்ள பல்வேறு மக்களிடையிலும் நம்பிக்கையும், விசுவாசமும், ஒற்றுமையும் வளர்ப்பதற்கு என்ன முயற்சி செய்தாய்? நீ செய்த தியாகம் யாது? வேற்றுமை யுணர்ச்சியை வளரவிட்டுக் கொண்டு எங்கு சென்றால்தான் பயனென்ன? இங்கிலாந்தில் இரண்டாவது முறை கூடிய வட்ட மேஜை மகா நாடு ஏன் முறிந்துபோய் நிற்கிறது? சீக்கியர்களும், மகம்மதியர்களும் சினங் கொண்டதன் காரண மென்ன? ஆதிதிராவிட மக்கள் ஆத்திரப் படுவதேன்? உனது பலவீனம் எங்கே இருக்கிற தென்பதை அறிந்து கொண்டாயா? கஷ்ட நஷ்டங்களை யேற்று அரசியல் சுதந்திரத்தை ஒரு வகையில் நீ அடைய நேர்ந்த போதிலும் அஃது எக் கதிக்கு ஆளாகு மென்பதை ஊகித்துப் பார். ஆனால் தைரியத்தைத் தளரவிட்டு விடாதே. அரசி



வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

# சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

## தமிழ் நாட்டின் தேசியக் கவி.

வாழ்க்கை வரலாறு கவிதா விலாசம் தேசாபிமானம்
முதலியவற்றைப்பற்றிய

## அரிய ஆராய்ச்சி நூல்.

திரு. சுத்தானந்த பாரதியாரால்
இனிய எளிய ஆவேச நடையில் எழுதப்பெற்றது.

இதுபரியந்தம் இம் முறையில் பாரதியாரைப்
பற்றிய நூலொன்றும் வெளிவந்ததில்லை.

இதில் பாரதியாரைப் பிணித்திருந்த ஆசா, பாச, வாழ்க்கை வரலாறு ஆகிய அவஸ்யமான ஆனால், இதுபரியந்தம் அச் சேராத புதிய பல விஷயங்களையும், அவர்தம் கவிதையின் போக்கையும், நூல்களின் கருத்தையும், நடையின் சிறப்பையும் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

பாரதியாரின் நூல்களனைத்தையும்
இதில் ஆராய்ச்சி செய்யப்பெற்றிருக்கிறது.

இந் நூலை வாசித்து உண்மைகளை அறிய வேண்டுகிறோம்.

கிளேஸ் பேப்பர்; அழகான அச்சு; படத்துடன்

**240** பக்கங்கள் உடைய நூல் 1-க்கு விலை ரூ I.

தபால் செலவு வேறு.

“பாரதி” புத்தகாலயம், உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# சோவியத் ருஷ்யா.

பண்டித. ஜவஹர்லால் நேரு அவர்கள்
எழுதிய ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு.

## அநேக படங்களுடன் கூடியது.

தமிழ் நாட்டார் பொதுவுடைமை ரஷ்யாவைச் சரிவர அறிந்துகொள்ள வேண்டியது அவஸ்யமாகும். இதுபோது சோவியத் ருஷ்யாவைப்பற்றி எப்படி எப்படியோ என்ன என்ன வெல்லாமோ சொல்லப்பட்டு வருகிறது. மக்கள் உண்மை யறிந்தாலன்றி ருஷ்யாவின் புதிய கக்ஷியைப்பற்றித் தீர்மானிக்க வழியில்லை. புத்தப் புதிய இயக்கங்கள் ஓர் நாட்டை மேன்மைப்படுத்தவும் அன்றி சீர்மைப்படுத்தவும் காரணமாயிருக்கின்றன. அறிவுடையோர் நலத்தையே விரும்புவர். ஆனால், விஷயம் விளங்கவேண்டுமன்றோ அதற்கு? பல்வேறு அபிப்பிராயங்கள் நாட்டில் உலாவி உண்மைக்கு மாறான விஷயங்கள் மக்களின் மனதில் பதியக்கூடாதென வறிந்தே, நமது இளஞ் சிங்கம் பண்டித ஜவஹர் அவர்கள் ரஷியா சென்று அங்குக் கண்டதையும் கேட்டதையும் ஆராய்ந்து இந் நூலை எழுதியுள்ளார். இஃது தமிழர்தம் பார்வைக்கு இதுபோது வெளிவருவதா யிருக்கிறதினால், விரைவில் உண்மை காணலாமெனவே நம்புகின்றோம். முதற் பதிப்பு குறைந்த அளவாகவே பிரசுரிப்பதால், உடனே தருவித்துக்கொள்ள முன் வருமாறு வேண்டுகின்றோம்.

(அச்சிலிருக்கிறது; விரைவில் வெளிவரும்.)


முன் பணம் அனுப்புவோருக்கு விலை ரூ. 1.
பிரசுரித்த பின்னர் ரூ. 1—4—0.

“பாரதி” புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.


# பண்டிதை ராமாபாய் சரஸ்வதி.

திருமகள் P. V. சரோஜினிதேவி அவர்கள்.

முகவுரை.



பிறர் நலமே தம் நலமெனக் கருதி, பிறர்க்கு நன்மை செய்வதையே பெறுதற்கரிய பாக்கியமென எண்ணி, தொண்டாற்றுவதையே விரதமாகக்கொண்ட பெண்மணிகள் முற் காலத்தில் நமது தேச சரித்திரத்தை அலங்கரித்திருக்கிறார்கள். கருணையில் மலை மகளை நிகர்த்தும் கல்வியில் கலைமகளை நிகர்த்தும் வீரத்தில் பராசக்தியை நிகர்த்தும் எத்தனையோ அருங்குண வனிதா ரத்தினங்கள் நமது நாட்டில் தோன்றி, அநேக துறைகளில் ஈடுபட்டுத் தங்கள் கடமைகளைச் செய்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். மண்டன மிசிரருடைய பாரியாரையும், வாசஸ்பதி மிஸ்ரருடைய மனைவியார் பாமதியையும், இன்னும் கார்கி, மைத்திரேயி, மங்கையர்க்கரசி,

---

யல் விடுதலையைப் பெறுவதற்கான முதலணி வேலை உனக்கு உன் தாய் நாட்டிலேயே யிருக்கிற தென்பதைத் தெரிந்து கொள். முதலில் நீ செய்ய வேண்டிய அழிவு வேலைகளும், ஆக்க வேலைகளும் பலவுள. உன்னை முதலில் எதிர்ப்பவர்கள் மூடக் கொள்கைகளில் தடிப்பேறிய வைதீகர்களே யாவர். அவர்களே இன்று அரசியல் முற்போக்கிற்கும் முட்டுக் கட்டைகளாக விருக்கின்றன வென்பதை உணர்ந்துகொள். இனி உன் கடமையை நீயே செய்ய வேண்டும். பிறரை எதிர் பார்ப்பதிற் பயனில்லை. உலக நன்மைக்கான—ஜன சமூகத்தின் க்ஷேமத்திற்கான கடமைகளைச் செய்யப் பின்னடையாதே. நாட்டின் ஜனத் தலைவர்களையே முழுதும் நம்பி யிராதே. உன் மூலமாகவே அவர்கள் நோக்கம் நிறைவேற வேண்டும். உனது உழைப்பு இன்று மிகச் சிறிதாகத் தோன்றலாம். அதுவே நாளடைவில் பெரிய விருக்ஷமாகி நாட்டுக்கு நிழல் தரக்கூடியதாகலா மென்பதை யாரால் மறுக்க முடியும்? எனவே தளராமல் உனது கடமையை மேற்கொள். தளரா முயற்சி என்றும் வெற்றியைக் கொடுக்கு மென்பது நிச்சயம். உழைப்பு இன்றி ஊதியம் பெற முடியுமா?.

திலகவதி, புனிதவதி, மணிமேகலை, மதனலீலையார், லீலாவதி, வெள்ளி வீதியார், வாசுகி, ஔவையார் முதலிய சிந்தாமணிகளையும் நம் நாடு நன்கறியும். ராஜாதிராஜர்களும், மாபெரும் சக்கிரவர்த்திகளும் மாண்டு மறைந்தார்கள். ஜூலியஸ் ஸீசர், மகா அலெக்சாந்தர், நெப்போலியன், முகம்மது கஜினி, கோரி முகம்மது, வில்லியம் கெயிசர் முதலிய வெற்றி வேந்தர்கள் எங்கே? அவர்கள் அனைவரும் அழிந்தார்கள்! தனக்கல்லாது பிறர்க்காக வாழ்ந்த அன்பர்களின் பூதவுடம்பு அழிந்து நெடுங்காலமாயினும், அவர்களின் புகழுடம்பு என்றும் நிலைத்து நின்று, மானிடர்களுக்கு வழிகாட்டியாக யிருக்கின்றது. தியாகிகள், வீரர்கள், ஞானிகள், தர்ம அரசர்கள், கர்ம யோகிகள், தொண்டர்கள் முதலியவர்களாலேயே இந்திய நாட்டுப் பண்டைச் சரித்திரம் ஆக்கப்பட்டிருக்கிறது.

இப்படி இருக்க, இக் காலத்தில் இந்தியர்கள் சுதந்திரமின்றி அடிமைகள் போன்று வாழ்கின்றார்கள்; மூடப் பழக்க வழக்கங்களால் முன்னேற்றமின்றி வருந்துகிறார்கள். இந் நாள் இந்தியரின் நிலை பரிதாபம்! பரிதாபம்!! அறிஞர்களும் சமூக சீர்திருத்தக்காரர்களும் தேசாபிமானிகளும் தேசத்தின் நிலையைக் கண்டு திகைத்துக் கலங்குகிறார்கள். உண்மை உழைப்பாளிகளுக்கு தேசத்தொண்டர்களுக்கு சமூக சீர்திருத்த ஊழியர்களுக்கு இமயமலை போன்ற பெரும் பெரும் தடைகள் அவர்கள் வேலைகளில்—வழிகளில் எழும்பி முன் நிற்கின்றன. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் இப்பொழுது எத்தனையோ பெண்ணரசிகள் சிறை சென்று துன்பங்கள் அனுபவித்து வந்திருக்கிறார்கள். கார் எனக் கைமாறு கருதாது இந்தியப் பெண்களுக்குக் கல்வியையும் சுதந்திர உணர்ச்சியையும் பரவவைத்து, அவர்களின் விடுதலைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பெரிதும் உழைத்த சில மாதரசிகள் உண்டு. அந்தச் சிரோன்மணிகளுக்குள் வறுமையில் பிறந்து வறுமையில் வளர்ந்து, பல துன்பங்களையும் துயரங்களையும் சமூகக் கொடுமைகளையும் தாங்கி நின்று, பல நூற்றுக் கணக்கான விதவைகளுக்கு ஆறுதலையும் கல்வியையும் அளித்த பண்டிதை ராமாபாய் சரஸ்வதி அம்மையாரைப் பற்றிச் சிறிது எழுதி, "பாரதி"யின் வாசகர்களுக்கு விருந்தளிக்கிறேன்.

## பிறப்பு

ராமாபாய் அம்மையார் மங்களூர் நாட்டில் "கங்காமூலம்" என்னும் வனப் பிரதேசத்தில் 1858-ம் ௵ ஏப்ரல் ௴ 23௳ ஓர் பிராமண குடும்பத்தில் பிறந்தார். இவர் தந்தையார் அனந்த சாஸ்திரி என்பவர், தம் குலத்திற் கேற்றபடி சகல வேத சாஸ்திரங்களையும் நன்கு கற்றுணர்ந்து சமஸ்கிருதத்தில் சமர்த்தராக விளங்கியதுமன்றி, அரசர் சபையிலும் சமஸ்தான வித்வானாக இருந்து பற்பல பரிசுகள் பெற்றார். இவர் பெண் கல்வியில் மிக்க அபிமானம் உடையவர். "பெண் ஜன்மம் புண் ஜன்மம்" எனும் மூட நம்பிக்கை நிலைத்து, பெண்களுக்குக் கல்வி கற்பித்தல் பாவம் என்ற கொள்கையுடைய மக்கள், பெண் கல்வியைத் தடுக்கவேண்டி வாதம் செய்கையில், வாதப் பிரதிவாதங்கள் செய்து தமது கொள்கையை நிலைநிறுத்துவதில் கெட்டிக்காரர். ஜன சமூக சீர்திருத்தக்காரர். சமூகக் கட்டுப்பாடுகளினால் தமது முதல் மனைவியருக்குக் கல்வி கற்பிக்க இயலாமற்போக, அவர் இறந்தபிறகு இரண்டாம் மனைவி லக்ஷ்மீ பாய் என்பவருக்கு கட்டுப்பாட்டினை எதிர்த்து சமஸ்கிருத பாஷையை நன்கு கற்பித்தார். அவ்வம்மையும் நற்குண நல்லொழுக்கங்களும், கல்வித் திறமையும் வாய்ந்தவர். இராமாபாய்க்கு ஓர் தமக்கையும், தமயனும் உண்டு. அனந்த சாஸ்திரியார், அநேக பிள்ளைகளுக்குக் கல்வி போதித்து வந்தார். அவர் இல்லாத சமயத்தில் லக்ஷ்மீ பாயே சிஷர்களுக்குக் கல்வி கற்பிப்பது வழக்கம் என்றால் அவ்வம்மையின் வித்வத் திறத்தையும், அவருடைய நடத்துதலின்கீழ் வளர்ந்த ராமாபாயைப் பற்றியும் நேயர்கள் ஒருவாறு ஊகித்துக்கொள்ளலாம். குடும்பத்தை ஒழுங்காய் நடத்துவதிலும் அவ்வம்மை நிகரற்றவர். ராமாபாய், தாயின் அருங் குணங்களுக்கேற்ற அருங் குமரியாகவே விளங்கினார். ராமாபாய் 6 மாதகால குழந்தையாக இருக்கையிலேயே சாஸ்திரியார் துர் அதிர்ஷ்டவசத்தினால் தமது செல்வத்தை யெல்லாம் இழந்து மனைவி மக்களுடன் பற்பல ஸ்தலங்களுக்கும் யாத்திரை செய்து ஆங்காங்கு சத்காலக்ஷேபங்கள் செய்து ஜனங்கள் மனமுவந்தளிக்கும் சிறு பொருளைக்கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றலானார்.

## கல்வியும் வறுமைப் பிணியும்

இராமா பாய் கடைசிக் குழந்தை யாதலால் பெற்றோர் அதிக அன்பாகவும், அருமையாகவும் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்ததன்றி, நற்குண நல்லொழுக்கங்களையும் கல்வியையும் போதித்து வந்தார்கள். ராமாபாய் சிறு வயதிலேயே கல்வியிற் றேர்ந்து பல நூல்களைக் கற்றுணர்ந்து கண்டோர் யாவரும் கலைமகளின் அவதாரமோ என்று ஐயுறும்படி விளங்கினார். 12 வயதாகு முன்னரே 1800 செய்யுள்களை மனப்பாடமாக ஒப்புவிக்கும் திறமை அவருக் கிருந்ததென்றால், அவ்வம்மையார் எவ்வளவு ஞாபக சக்தி உடையவராக இருத்தல் வேண்டும்! சாஸ்திரியாருக்குக் கடவுள் பக்தியும், கடவுளின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்ளும் புரோகிதர்களிடத்தில் அத்யந்த விஸ்வாசமும் மூட

நம்பிக்கையும் உண்டு. கிடைக்கும் பொருளில் ஒரு பகுதியை புரோகிதர்களுக்குத் தட்சணையாக வளங்கிவிடுவார். கண்ணை மூடிக்கொண்டு தானஞ் செய்ததாலேயே இவரது பொருள்கள் முற்றிலும் போய்விட்டது.

“கொடிது, கொடிது, வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையில் வறுமை” என்றார் ஔவை பிராட்டியார். கஷ்டங்களைத் தாங்க முடியாத சிறு வயதிலேயே இராமாபாயை வறுமைப் பிணி வாட்ட ஆரம்பித்தது. சில வருடங்களில் சாஸ்திரியார் கண் தெரியாத வயோதிகராய்விட்டார். நாடெங்கும் பஞ்சம் ஏற்பட்டது. தரித்திரக் கொடுமையால் அவர்கள் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. அன்ன ஆகாரமின்றி வெகுவாய் வருந்தி சுரத்தினால் தாக்குண்டு ஒருவர்பின் ஒருவராக சாஸ்திரியும், அவர் மனைவியாரும், மூத்த மகளும் இறைவனின் பாதத்தை யடைந்தனர். பெற்றோரை இழந்த ராமாபாயும் அவர் தமயனும் இமயமலை வரையில் உள்ள பற்பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று தங்கள் பாவம் தொலைய புண்ணிய தீர்த்தங்களில் நீராடியும் ஸ்வாமி தரிசனம் செய்தும், தக்ஷணைகள் வழங்கியும் கிடைக்கும் அற்ப ஆகாரத்தைக்கொண்டு வயிறு வளர்த்தும் வந்தனர். தமயன் தன்னா லியன்றவரை கூலி வேலை செய்து தங்கையைக் காப்பாற்றி வந்தார். காலக் கிரமத்தில் இருவருக்கும் மூட பக்தி குறைய ஆரம்பித்தது. அவர்கள் சென்ற ஸ்தலங்களிலெல்லாம் புரோகிதர்கள் மதத்தின் பெயராலும், கடவுளின் பெயராலும் ஜனங்களை ஏமாற்றிப் பணம் பிடுங்கி வருவதையும், மக்களின் மூட நம்பிக்கைகளையும், அவர்கள் ஏமாற்ற மடைதலையும் ராமாபாய் தமது நுண்ணுணர்வினால் அறிந்து வருந்தினர். இவ்வளவு கஷ்டத்திலும் தமயனும், தங்கையும் கல்வியை அபிவிருத்தி செய்தே வந்தனர். ராமாபாய் தமது 22-ம் வயதிற்குள் துளுவம், கன்னடம், மகாராஷ்டிரம், ஹிந்தி, வங்காளம், ஸமஸ்கிருதம் முதலிய பல பாஷைகளையும் கற்றுணர்ந்து தேர்ந்தார். “துன்பமே ஞானத்தின் பாடசாலை” என்னும் பழமொழிக் கேற்ப உலக அநுபவமும், புத்தி நுட்பமும், கஷ்டத்தில் தளரா திட சித்தமும் ஏற்பட்டது. ஆனால் இவர்கள் கல்வி யறிவு காலத்தின் கொடுமையால் குடத்திலிட்ட தீபமெனத் தெரியாவண்ணம் மங்கி மறைந்திருந்தது.

## நல்லோர் நட்பும் நலம்பெறு வாழ்க்கையும்

பல விடங்களிலும் சுற்றித் திரிந்து கல்கத்தாவிற்கு வந்து சேர்ந்தனர். கற்றறிந்த பெரியோர் பலரின் நட்பு இவர்களுக்குக் கிடைத்தது, கிரகண காலத்தில் கதிரவனை மூடி இருக்கும் நிழல்



அகல அகல இருள் நீங்கி வெய்யோன் ஒளிக்கற்றைகளுடன் பிரகாசிப்பது போல ராமாபாய்க்கும் நற் காலம் வருவதுபோல் தோற்றிற்று. இவ்விருவருடைய கல்வித் திறத்தினைக் கேள்வியுற்ற பல பண்டிதர்கள் இவர்களைப் பார்க்க வந்தனர். ராமாபாயின் கல்வி யறிவைப் பரிசோதித்து மிகவியந்த சில சங்கத்தார், ஒன்று கூடி அவருக்கு “பண்டிதை” என்னும் பட்டத்தையும், “சரஸ்வதி” என்னும் பட்டத்தையும் அளித்தனர். பண்டிதை அவர்கள் பற்பல சீர்திருத்தங்களைப் பற்றியும் இந்தியப் பெண் மக்கள் அடைந்துள்ள தாழ்ந்த நிலையைப் பற்றியும் அவர்களுக்கு வேண்டிய தேவைகளைப் பற்றியும் அநேக இடங்களுக்குச் சென்று பிரசங்கித்தார். கல்கத்தா முழுவதும் ராமாபாயின் புகழ் பரவியது. பல பெரியோரின் வேண்டுகோட்கிணங்கி வங்காளத்திலுள்ள உயர்குல மாதர்களுக்கு தர்ம சாஸ்திரங்களில் உள்ள மாதர் தர்மங்களைப் போதித்தார். “கற்றோர்க்குச் சென்ற விடமெலாஞ் சிறப்பு” என்பதே போல் அம்மையின் அருங் குணங்களைக் கேள்வியுற்ற அநேகர் அவர் அரிய நட்பை நாடியதுமன்றித் தமது மனைவி மக்களுக்கும் அவரை அறிமுகம் செய்துவைத்தனர். கல்கத்தாவில் மிகுந்த பிரபலப் பிரசங்கியாரான பேர்பெற்ற கேசவ சந்திர சேனர், ராமாபாய் அம்மையாரைத் தனது வீட்டிற்குக் அழைத்துக் கொண்டுசென்று தனது மனைவி மக்களுக்குப் பழக்கம் செய்து வைத்தாராம்.

இந்நிலையில், அவருடைய சகோதரரும் தங்கையை அநாதரவாகவிட்டுக் காலஞ் சென்றார். பந்துக்கள் யாவரையும் இழந்த அம்மையார் வெகுவாய் வருந்தித் தாமே தேறியதுமன்றி, தாமும் தம் குடும்பத்தாரும் இதுவரை உண்மை பக்தியுடன் விக்ரகங்களை வணங்கியும், காணிக்கைகள் செலுத்தியும் விரதங்கள் அநுஷ்டித்தும் வந்ததில் யாதொரு பயனும் ஏற்படாதது கண்டு, சிறிது சிறிதாகத் தமது மதத்தில் வெறுப்புக்கொள்ள லானார். நிற்க, சில நாட்களில் மகாராஷ்டிரத் தலைவர்களில் சிலர் பண்டிதையைத் தங்கள் நாட்டுப் பெண்களுக்குக் கல்வி கற்பித்தற் பொருட்டு வரும்படி பரிவுடன் அழைத்தனர். ஆனால் அவ்விதம் போக முடியாதபடி அசந்தர்ப்பம் நேரிட்டது.

அதாவது வங்காள நாட்டவரான பிப்பின் பிகாரி மேதாவி (Bipin Behari Medavi) என்னும் நியாயவாதி ஒருவர் பண்டிதையின் அழகையும், அருங் குணங்களையும், கல்வித் திறமையையும், கேள்வியுற்று அவரை மணக்க விரும்பினார். அவர் எம். ஏ., பி. எல். பட்டம் பெற்றவர். பண்டிதையும் அவ் வக்கீலை மணம்புரியச் சம்மதித்ததால், 1880-ம் ௵ அக்டோபர் மாதம் 13௳ அவ்

விருவருக்கும் திருமண வைபவம் நடந்தேறியது. மகாராஷ்டிர நாட்டாரின் எண்ணம் இச் சம்பவத்தால் ஈடேறவில்லை. இவ் விருவருக்கும் முத்திரை விவாகமே நடைபெற்ற தென்பதை நாம் அவசியம் குறிப்பிட வேண்டும்.

பண்டிதை யவர்கள் விவாகத்திற்குப் பின் தமது கணவரோடு அவரது ஊராகிய ஆசாம் தேசத்திலுள்ள சில்சார் என்ற இடத்திற்குப் போய் இல்லற வாழ்க்கையை இனிது நடாத்தி வந்தார். அப்போது பண்டிதைக்கு கிறிஸ்தவர்களுடைய பழக்கம் அதிகமாக ஏற்பட்டது. முன்னமே மதத்தில் வெறுப்பு ஏற்பட்டிருந்ததினாலும் ஆலன் ஐயர் (Rev. Allen) என்னும் கிறிஸ்தவப் பாதிரியாரின் போதனையினாலும் கிறிஸ்து மதத்தில் சிறிதளவு பற்று ஏற்பட்டது. அம் மதத்தைப்பற்றி ஆராயலானார். அவர் கணவர் கிறிஸ்து மார்க்கத்தில் வெறுப்புற்றவராகையால் தமது மனைவியைக் கண்டித்ததுமன்றி பாதிரியையும் தம் வீடு வரவொட்டாமல் செய்தனர். மணமான சில வருடங்களில் அவர்களுக்கு மனோரமா பாய் என்னும் ஓர் பெண் குழந்தை பிறந்தது.

## வைதவ்யமும் பொதுநலத் தொண்டில் ஈடுபடுதலும்

குழந்தை பிறந்த சில மாதங்களில் பண்டிதையாரின் கணவனார் தேகவியோகமாயினார். அவர் இறந்த செய்தியைக் கேள்வியுற்ற மகாராஷ்டிர நாட்டார் முன் தீர்மானத்தின்படி பண்டிதையைத் தங்கள் நாட்டிற்கு அழைத்தனர். பண்டிதையும் அதற்கு உடன்பட்டு அங்கு சென்று ஊரூராகப் பிரயாணம் செய்து இந்து ஜன சமூகத்திலுள்ள கொடிய பழக்க வழக்கங்களைப் பற்றியும், பெண்களுக்குக் கல்வியின்மையால் ஏற்படும் தீமைகளைப் பற்றியும், மற்றும் மாதர்க்கு சுதந்திரமளிக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியும் பிரசங்கித்து வந்தார்.

பண்டிதை யவர்கள் பூனாவில் முதன்முதலாக 1883-ம்௵ பலருடைய உதவியைக் கொண்டு "ஆரியமஹிலா சமாஜம்" என்ற ஓர் சங்கத்தை ஸ்தாபித்தார். பெண் மக்கள் முன்னேற்றத்தில் அபிமானமுள்ள சில புருடர்கள் பண்டிதைக்கு உதவி புரிந்தனர். மிஸ். ஹர்போர்டு (Miss. Hurford) என்ற கிறிஸ்தவ மாதிடம் பண்டிதை ஆங்கிலம் கற்று வந்ததோடு கிறிஸ்துவைப் பற்றிய சரித்திரத்தையும் அறிந்து கொண்டார். நெகேமியா நீலகண்ட கோரே (Nehemiah Nilakanto Goreh) என்ற பிராமண கிறிஸ்தவரிடமிருந்தும் கிறிஸ்து மார்க்கத்திலுள்ள அநேக விஷயங்களைத் தெரிந்து கொண்டார். தம் நாட்டிலுள்ள விதவைகளுக்குக் கல்வி



கற்பிக்க வேண்டுமென்கிற ஆவல் பண்டிதையின் உள்ளத்தில் ஏற்பட்டதாயினும் போதிய பொருளின்றி அவ் வெண்ணம் முதலில் ஈடேறவில்லை. ஆனால் விதவைகளுக்கு இயன்றவரை உதவி செய்து வந்தார்.

1882-ம்௵ இந்தியாவிலுள்ள கல்வி யிலாக்காக்களைப் பார்வையிடும் பொருட்டு இராஜாங்கத்தாரால் அனுப்பப்பட்ட கூட்டத்தாரின் தலைவரான சர் வில்லியம் ஹண்டர் (Sir William Hunter) என்பவர் பூனாவிற்கு விஜயம் செய்தபோது, பண்டிதையின் முயற்சியால் ஏற்பட்ட சமாஜத்தில் சுமார் 300 பேர்களுக்கு அதிகமாக பிராமண ஸ்திரீகள் அவரை வரவேற்றனர். அங்கு பண்டிதை பெண் கல்வியைப்பற்றி நீண்டதோர் சொற்பெருக்காற்றினார். அக் கூட்டத்தார் கல்வி சம்பந்தமாகப் பல கேள்விகள் கேட்டனர். அவற்றிற் கெல்லாம் ராமாபாய் அம்மையார் சரியான விடை பகர்ந்து, தம் நாட்டில் பெண் மக்கள் கல்வி கற்பதற்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்களை எடுத்துக் காட்டி பெண் பள்ளிக்கூடங்களில் பெண்களையே உபாத்தியாயினிகளாக நியமிக்க வேண்டுமென்றும் பரீட்சாதிகாரிகளையும் பெண்களாகவே நியமிக்க வேண்டுமென்றும் ஸ்திரீகளுக்கென்று பிரத்யேகமாய் வைத்தியசாலை ஸ்தாபிக்கும்படியும் விண்ணப்பம் செய்துகொண்டார். அந்த விண்ணப்பத்தின் மூலமாகவே டப்லின் சீமாட்டி இயக்கம் (Countess of Defferin Movement) தோன்றி ஸ்திரீகளுக்கு மருத்துவ உதவி ஏற்பட்டது. வில்லியம் ஹண்டர் மூலமாக பண்டிதையின் கீர்த்தி இங்கிலாந்திலும் பரவியது.

## இங்கிலாந்து பிரயாணமும் மார்க்கம் மாறுதலும்

பண்டிதை மகாராஷ்டிரப் பெண்களுக்காகவேண்டி "மாதரொழுக்கம்" (Morals for Indian Women) என்ற அரிய நூல் ஒன்றை இயற்றினார். இப் புத்தகம் விற்ற பணத்தைக் கொண்டும், கல்கத்தா நகரத்தினர் சேர்த்துக் கொடுத்த பணத்தைக் கொண்டும், ஒரு பாதிரியார் தர்மத்திற்கு மனமிரங்கி அளித்த பணத்தைக் கொண்டும் தமது புதல்வியுடன் இங்கிலாந்திற்குப் பிரயாணமானார்.

அங்கு வான்டேஜ் சகோதரிகள் (Wantage) என்ற கூட்டத்தாரின் நட்பு ஏற்பட்டது. அக் கூட்டத்தினர் தீ நெறியில் ஒழுகும் மக்களை நன்னெறியில் திருப்ப மிக்க பிரயாசை எடுத்துக் கொள்வதைக் கண்டபோது, பண்டிதைக்குத் தம் நாட்டு மக்களின் பரிதாப நிலை நினைவிற்கு வந்தது. அச் சகோதரிகள் பண்டிதையைத் தமது மார்க்கத்திற்குத் திருப்ப வெகுவாய் முயன்றனராயினும் அவருக்கு அம் மதத்தில் பூரண பற்று ஏற்படவில்லை. அம்

மதத்திலும் அநேக குறைவுகள் இருப்பதைக் கண்டார். நாட்செல்லச்செல்ல கிறிஸ்து மதத்தில் வாஞ்சை ஏற்பட்டு 1883ம்-ஞு செப்டெம்பர்மீ 29உ டீன் பட்லர் (Dean Butlar) பாதிரியாரிடம் வான்டேஜி (Wantage)ல் தமது குமாரியுடன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். அச் செய்தி பண்டிதையின் இங்கிலாந்திலுள்ள நண்பர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியையும், இந்தியாவிலுள்ள நண்பர்களுக்கு அளவற்ற துயரத்தையும் விளைவித்தது.

மார்க்கம் மாறியபின் புதியதோர் மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனுமிருந்த பண்டிதையை தெய்வ கிருபையால் 1884-ம்ஞு செப்டெம்பர்மீ செல்ட்டென்ஹாம் (Cheltenham) என்னும் இடத்திலுள்ள பெண்மக்கள் கல்லூரியில் ஸமஸ்கிருதப் பண்டிதையாக நியமித்தார்கள். வேலையையும் ஒழுங்காகப் பார்த்துக் கொண்டு ஆங்கிலக் கல்வியையும் அபிவிருத்தி செய்து வந்தார். மதம் மாறியபோதிலும் அவர் ஆகாரம், உடை முதலியவைகளை மாற்றவேயில்லை.

## அமெரிக்காவுக்குச் செல்லுதலும் நிதி திரட்டுதலும்

அமெரிக்காவில் வைத்தியம் படித்துக் கொண்டிருக்கும் பண்டிதையின் சொந்தக்கார ஸ்நேகிதிகளுள் முக்கியமான ஒரு அம்மையாரின் வேண்டுகோட் கிணங்கி, வேலையையும் படிப்பையும் விட்டுவிட்டு அவர் அமெரிக்காவுக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு பற்பல இடங்களுக்குச் சென்று பலருடன் பழகிப் புதிய புதிய விஷயங்களையெல்லாம் நன்கு ஆராய்ச்சி செய்து பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும் 'கிண்டர் கார்டன்' முறைகளையும், நவ நவமான பழக்க வழக்கங்களையும் கற்றுத் தெளிந்து 1886-ம்ஞு மராட்டி பாஷையில் சிறு பிள்ளைகளுக்காக வேண்டிய பாடப் புத்தகங்கள் எழுதினார். இந்திய ஸ்திரீகள் படும் கஷ்டங்களையெல்லாம் விவரித்து மேல் ஜாதி இந்துப் பெண்கள் (The High Caste Hindu Women) என்று ஓர் உயரிய நூலை ஆங்கிலத்தில் இயற்றினார். அதில் பண்டிதை பரிதாப நிலையிலுள்ள இந்துப் பெண்மணிகளை முன்னுக்குக் கொண்டுவர தாம் கருதியிருப்பதாகவும் அதற்காகப் பள்ளிக்கூடம் ஏற்படுத்த முதலில் 50,000 ரூபாயும், பிறகு 10 வருடங்கள் வரையில் பிரதி வருடமும் 15,000 ரூபாயும் தேவையென்றும் தாழ்மையுடன் தன் ஸ்நேகிதையொருவரைக் கொண்டு முகவுரையில் விண்ணப்பம் செய்திருந்தார்.

பண்டிதையின் உருக்கமான உபந்நியாசங்களாலும், விண்ணப்பத்தாலும் இந்திய ஸ்திரீகளின் கஷ்டங்களை அறிந்த அமெரிக்க தேசத்தார் பலர் ஒன்றுகூடி ஓர் சங்கம் ஸ்தாபித்து அதிலிருந்து பண்டிதை விரும்பியவாறு பண உதவி செய்யச் சம்மதித்தனர். அச் சங்கத்திற்கு ராமாபாய் சங்கம் என்றே பெயர் ஏற்பட்டது. பண்டிதை இன்னும் பல விடங்களுக்குச் சென்று சங்கங்கள் ஸ்தாபித்து முடிவில் 1889-ம்ஞு பிப்ரவரிமீ 12உ பம்பாய் வந்து சேர்ந்தார்.



## ஸாரதா ஸதன்

பம்பாயில் சௌப்பாட்டி (Chowpatty) என்னுமிடத்தில் பண்டிதை அம்மையார் நெடுங்காலமாகத் தமது உள்ளத்தில் குடி கொண்டிருந்த ஆவலைப் பூர்த்தி செய்யும்பொருட்டு முதன்முதலாக "ஸாரதா ஸாதன்" என்னும் பெண் மக்கள் கல்லூரியை ஏற்படுத்தினார். பம்பாயிலுள்ள நண்பர்களுக்கு பண்டிதையின் மீது மதம் மாறியதால் வருத்தம் இருந்தபோதிலும் மத விஷயத்தில் பிரவேசிப்பதில்லையென்று பண்டிதை உறுதி கூறியதால், ஒருவாறு திருப்தியுற்று ஒத்து உழைக்க முன்வந்தனர். மறு வருடம் பல சௌகரியங்களை ஒட்டி பள்ளிக்கூடம் பூனாவிற்கு மாற்றப்பட்டது. ஸ்ரீமதி. சுந்தர்பாய் பவார் அம்மாள் என்பவர்களைத் துணையாகக் கொண்டு பண்டிதை அவர்கள் 1892-ம் வருட முதற்கொண்டு அமெரிக்காவிலிருந்து கிடைத்த பண உதவியினால் பள்ளிக்கூடத்தை ஒழுங்காக நடத்தி வந்தார். அங்கு பிள்ளைகளுக்கு மதத்தைப்பற்றிப் போதிக்கப்படவேயில்லை. பெண் குழந்தைகள் தங்கள் வீட்டிலிருந்ததைவிடப் பன்மடங்கு சந்தோஷமாகவும், திருப்தியாகவும் வாழ்ந்து வந்தனர். அப் பெண்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள், விவாகம் என்றால் என்னவென்று அறியாத வயதிலேயே வைதவ்யமடைந்து பொறுக்க முடியாத கஷ்டங்களை அனுபவித்த பால்ய விதவைகளேயாவர்.

பள்ளியில் பெண்களைக் கொண்டுவந்து சேர்க்க பண்டிதை வெகுவாய் பிரயாசை எடுத்துக் கொண்டார். சமூகக் கட்டுப்பாடுகளும மூடப் பழக்க வழக்கங்களும் உள்ள குடும்பங்களிலிருந்து பெண்களைக் கலாசாலையில் சேர்ப்பிப்பதென்றால் எளிதான காரியமா? பள்ளிக்கூடத்தில் படிக்க வந்திருக்கும் பெண்களையெல்லாம் பண்டிதை தமது சொந்த மக்களைப் போலவே கருதி அன்பு பாராட்டி வந்ததுமன்றி அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும் தம்மாலியன்றவரை அமைத்துக் கொடுத்தார். பண்டிதை அநேக பாஷைகளைக் கற்றிருந்தாராகையால் பல்வேறு பகுப்பினரான பெண்களுடன் அவரவர்களுடைய சொந்த பாஷையிலேயே பேசி மகிழ்விப்பார். பயிர்த் தொழிலில் அம்மையாரவர்களுக்கு

ஆர்வமும் கை ராசியுமுண்டு. மக்களுள் ஏழை பணக்காரர், கற்றோர் கல்லாதார், உயர் குலத்தோர் தாழ்ந்த குலத்தோர், தன் நாட்டார் பிற நாட்டார் என்று வித்தியாசம் பாராட்டாமல் பண்டிதையார் யாவரிடமும் சமமான அன்பே பாராட்டுவர். மிருகங்களிடத்தும் அன்பு காட்டும் ஜீவகாருண்ய உள்ளத்தவர்.

பண்டிதையின் தூண்டுதலின்றியே சிறிது காலத்திற்குள் கலாசாலையில் இருக்கும் பெண்களில் அநேகருக்கு கிறிஸ்து மார்க்கத்தில் பற்றுதல் ஏற்பட்டது. முழு மனதோடு தமது மதத்தைத் தழுவ விரும்பியவர்களை பண்டிதை வரவேற்று தமது ஜெபக் கூட்டத்தில் சேர்த்து தக்க வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தார். இச்செய்தியறிந்த பலர் ஒன்றுகூடி பண்டிதைக்கு விரோதமாகக் கிளம்பி, பண்டிதை பெண்களை மதமாற்ற முயற்சிப்பதாகப் பெண்களின் பெற்றோர்களுக்குத் தெரிவித்துக் கலகம் செய்து பெண்களில் அநேகரை பலாத்காரமாய்ப் பள்ளியிலிருந்து அகற்றிவிட்டனர். போட்டியாக வேறொரு பள்ளிக்கூடமும் ஏற்பட்டது. என்னவாயினுமென்ன? "முயற்சி யுடையோர் இகழ்ச்சி யடையார்" என்பதே போல் எல்லாவற்றிற்கும் கடவுளை நம்பி பொறுமையுடன் காரியத்தை நடத்தி வந்த பண்டிதையின் முயற்சி வீண் போகுமா? போட்டியாக ஏற்பட்ட பள்ளிக்கூடம் சில நாட்களில் ஓங்காதொழிந்தது.

தமது முயற்சியால் ஏற்படும் பயனை அறிந்தபின் இந்திய நண்பர்கள் பள்ளிக்கூடத்தை ஆதரிப்பார்கள் என்கிற எண்ணத்துடன்தான் பண்டிதை 10 வருட மட்டும் அமெரிக்கரிடமிருந்து பண உதவியை நாடினார். எதிர் பார்த்ததற்கு நேர்மாறாக இந்தியர் விரோதிகளாகக் கிளம்பவே பண்டிதைக்கு ஒன்றும் தோன்றவில்லை. முடிவில் வள்ளற்றன்மை வாய்ந்த பற்பலரிடமிருந்து பணம் திரட்டி, தென் மராத்திய இருப்புப் பாதையில் கேட்கான் (Khedgaon) என்ற இடத்திற் கருகில் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கித் திருத்திப் பண்படுத்தி அதில் கனிதரு விருக்ஷங்களையும், நானாவித புஷ்பச் செடிகளையும், காய்கறி வகைகளையும், தான்யங்களையும் பயிராக்கி அதனால் வரும் பயனைக் கொண்டு பள்ளியை நிர்வகித்து வந்தார். ஸாரதா ஸதனில் பகிரங்கமாய் கிறிஸ்து மதம் பரவ ஆரம்பித்தது.

## பஞ்சத்தின் கோடுமையும் பண்டிதையின் ஜீவகாருண்யமும்

பண்டிதைக்கு நாளுக்கு நாள் தேவனிடம் அத்யந்த பக்திமிகுந்து வந்தது. அவ்வம்மையார் பள்ளிக்கூடத்தைப் பலப்படுத்துவதிலும், மேலும் மேலும் கஷ்டப்படும் பெண் மக்களைத் துன்



பத்தினின்றும் மீட்டுத் தமது பள்ளியில் சேர்ப்பதிலும், கலாசாலையில் வாசிக்கும் ஏழைப் பெண்மணிகளைக் காப்பதற்காக வேண்டி பல விடங்களுக்கும் சென்று உருக்கமாக வேண்டிப் பொருளீட்டுவதிலும், இறைவனைத் தியானிப்பதிலும் மனதைச் செலுத்தி வந்தார். இரண்டொரு குழந்தைகளைப்பெற்ற பெற்றோர்களுக்கே அவர்களைக் காப்பாற்றும் விஷயத்தில் அதிக கவலை ஏற்படுகிறதென்றால், ஆயிரக் கணக்கான மக்களை ஆதரிக்க வேண்டிய பண்டிதைக்கு ஏற்படும் கவலையையும், பொறுப்பையும் அளவிட முடியுமோ? மாணாக்கிகளின் தொகை விர்த்தியாகவேண்டி முழு மனதுடன் கடவுளைப் பிரார்த்தித்தார்.

அமெரிக்காவிலிருந்து வரும் பணவரும்படி நிற்கும் காலம் நெருங்கி விட்டபடியால், பண்டிதை யவர்கள் திரும்பவும் அமெரிக்காவிற்குச் சென்று பணத்தின் அவசியமானத் தேவையைக் குறித்து உருக்கமாக உபன்யாசங்கள் செய்து அவர்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு பணவரும்படியை ஸ்திரப்படுத்திக் கொண்டு திரும்பி வந்து கெட்கானில் "முத்தி ஸாதன்" என்னும் பெயருடைய மற்றோர் பள்ளியை ஸ்தாபித்தார். இருமுறை பற்பல மாகாணங்களில் கொடிய பஞ்சம் நேரிட்டதுபோது பண்டிதை யவர்கள் பட்டபாடு கொஞ்சமா? பஞ்சம் பரவிய ஜில்லாக்களுக்கு நேரில் சென்று பஞ்சத்தினால் வாடும் மக்களை அழைத்து வந்து அவர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க இடமும் அளித்துக் காப்பாற்றினார். அவர்களுள் தீ நெறியில் சென்று துன்மார்க்கர்களால் கற்பழிக்கப்பட்டு, தீரா நோய்க்காளாகி வருந்தும் ஸ்திரீகளும், தரித்திரக் கொடுமையால் நோய்வாய்ப்பட்டோரும், அனாதைகளான சிறு குழந்தைகளும் இருந்தனர். "துன்பம் வந்தால் தொடர்ந்து வரும்" என்பதே போல் இத்துடன் தொத்து நோயும் பரவியது. பண்டிதை யவர்கள் எதற்கும் கலங்காமல் மனவமைதியோடு தொத்து நோய்க்காளாகியவர்களை வைத்திய சாலையில் சேர்த்தும், நோயாளிகளுக்குத் தக்கபடி சிகிச்சைகள் செய்தும், குழந்தைகளைத் தக்க இடத்தில் சேர்த்து வளர்க்கச் செய்தும் காரியத்தை ஒழுங்காக நடத்தி வந்தார்.

## முக்தி ஸாதனின் ஏற்பாடுகள்

மேலே கூறியபடி பஞ்சத்தினால் கஷ்டப்பட்டவர்களில் படிக்க விருப்பமுள்ளவர்களைப் படிப்பிலும், விருப்பமில்லாதவர்களை வேலையிலும் பழக்கி வந்தார். ஆண் பிள்ளைகளுக்கும் முக்தியின் ஒரு பாகத்தில் இடம் ஏற்படுத்தி கல்வி, விவசாயம், தச்சு வேலை, கருமார வேலை முதலிய கைத்தொழில்களையும் கற்கும்படி செய்தார். இரு பள்ளியிலும் பெண் மக்களுக்கும் அச்சுக்கூட வேலை, நூல்

நூற்றல், செக்காட்டி எண்ணெய் எடுத்தல், தையல் வேலை, சித்திர வேலை முதலிய பல்வேறு கைத்தொழில்களும் கல்வியுடன் போதிக்கப்பட்டது. முக்தியிலும், சாரதா ஸதனிலும் வாசித்தவர்களில் அநேகர் உயர்தரக் கல்வி கற்பதிலும், பொதுநல ஊழியத்திலும், இல் வாழ்க்கையிலும் அவரவர்களுக்கு இஷ்டமானபடி மனதைச் செலுத்தினர். சிலருக்கு அங்கேயே தகுந்த உத்தியோகங்கள் அளிக்கப்பட்டன. பண்டிதையே சில பெண்களுக்கு இஷ்டம் போல் விவாகம் முடித்து குடித்தனம் செய்வதற்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்களைப் பெற்றோரைப் போன்று அளித்தாரென்றால் அவர் தாயன்பை என்னென்று கூறலாம்.

## பண்டிதையின் மரணம்

மங்களூர் நாட்டில் பிறந்து பலவிடங்களிலும் வளர்ந்து, 22-வயதுவரை பல கஷ்டங்களுக்கும் ஆளாகி, பன்முறை தற்கொலை செய்துக்கொள்ள முயன்றும் விருப்பம் ஈடேறாமல் வருந்தி, பின்னர் வங்காளத்தில் மணந்து, விதவையாகி, கடைசிவரை பரிசுத்த உள்ளத்துடன் பொதுஜன சேவையிலேயே நாட்களைக் கழித்து தமது புகழ் குன்றின்மேலிட்ட தீபமென எங்கும் பரவ வாழ்ந்த பண்டிதை யவர்கள், தம்மைப் போலவே அருங்குணங்கள் வாய்ந்து உயரிய பட்டங்கள் பெற்று பொது நன்மைக்காகப் பெரிதும் உழைத்த தமது அருமந்தப் புதல்வியை இழந்த துயரத்தால் நோய் வாய்ப்பட்டு "துஞ்சினோர் என்றெடுத்துத் தாற்றப்பட்டாரல்லால் எஞ்சினோர் இவ் வுலகத்தில்" என்பதுபோல், கலாசாலைக் காரிய நிர்வாகங்களைத் தமது உண்மையான நண்பர்களிடம் ஒப்படைத்துவிட்டு, அவரால் காப்பாற்றப்பட்ட ஆயிரக் கணக்கான ஏழை மக்கள் துயரக் கடலில் மூழ்க ஸ்நேகிதர்கள் கண்ணீர் வடிக்க தமது 73-ம் வயதில் பரலோகப் பிராப்தியாயினர்.

சரஸ்வதி ராமாபாய் அம்மையாரைப் போன்று தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராம் பெண்மணிகள் பலர் நம் நாட்டில் தோன்றல்வேண்டும். கற்ற மாதர்கள் தங்களுடை யஏழைச் சகோதரிகளை) கல்லாத பெண்களை முன்னுக்குக் கொண்டுவர முயற்சித்தல் வேண்டும். இதனை வாசிக்கும் சகோதரிகள் உள்ளத்தில் பரநல உணர்ச்சி உதயமாகுமென்றும், ராமாபாய் அம்மையாருக்கு அநேக ஆடவர்கள் உதவி புரிந்ததுபோன்று இதனைக் கண்ணுறும் நம் சகோதரர்களின் உள்ளத்தில் பொதுநலத் தொண்டில் ஈடுபடும் சகோதரிகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்கிற பரோபகார எண்ணம் உற்பத்தியாகுமென்றும் நம்புகிறேன். அவ்வாறே அருள்புரிய வேண்டுமென்று இறைவனை முழு மனதுடன் பிரார்த்திக்கின்றேன்.

---

# தீண்டாமை.

(பாரத நாட்டைப் பற்றிய பெரும் பாவம்.)

திரு. ஆ. வ. பதுமநாப பிள்ளை அவர்கள்.

அன்புநெறி விரித்துரைத்திங்(கு) அனைவர்க்கும்
இரங்குகவென்(று) அறிவுறுத்திச்
சென்றபழந் தமிழர்கண்ட செவ்வியநற்
சமயத்தில் சிறுமைச்சாதி
தன்பெயரால் இன்றுதிருத் தமிழகத்தில்
நிகழ்கொடுமை சற்றுமில்லை;
மன்பதையில் சமரசசன் மார்க்கமதே
யாண்டும் மிக வளர்த்ததம்மா! (1)

இழிந்தோர்க்கும் உயர்ந்தோர்க்கும் ஏற்றத்தாழ்(வு)
ஒழுக்கங்கண்(டு) இயம்பலல்லால்,
மொழிசாதிப் பிரிவினையால் மொழிவதுநன்
முறையாமோ? முதியநாடு
பழிசாரப் பழம்பெருமை பறிகொடுப்பின்,
உரிமைஇனிப் படைத்தற்கேற்ற
வழியாதோ? சோதரரை வருத்திடின், நற்
பிறப்புரிமை வாய்க்குங் கொல்லோ? (2)

எத்தகைய உயிரினிலும் இறைவன் உறைவதை
உணரில், எளியர் மீது
சித்தமதில் கருணையின்றி 'தீண்டாதார்'எனச் சிலரை
செப்புவாரோ?
உத்தமர்தம் பணிஇழிந்தோர் உய்வுறச்
செய்வது வன்றோ? ஒடுக்கப்பட்டோர்
எத்தனை நாள் 'அறியாமை'எனுங் குழியில்
கிடந்துழல்வர்? இனிப் பொறுரோ! (3)

'சாத்திரங்கள் பலபேசும் சழக்கர்களே!
குலங்களினால் சார்வதென்னே?
பாத்திரம் நற் சிவமென்று பணிவீரேல்,
இறைவன் அருள் பயப்பன்'—என்ன
சாத்துவிக நாவரசு சாற்றுமொழி உணரீரோ?
தாழ்த்தப் பட்டோர்
'தீத்தொழிலார்' என விலக்கின், செப்பும்
உயர் குலத்தினிலும் தீயரின்றோ? (4)

பிறவியே இழிவாயின், பேரன்பர் திருப்பாணர்
பேசும் நந்தன்
அறமறையோர் தொழுதேத்த அரங்கத்தும்
அம்பலத்தும் அன்பு மீறி
சிறப்புமிகும் இறைவன் அருள் திருமேனி
யொடு மொன்றாய்ச் சேர்வர்கொல்லோ?
இறைவன் விழைவது அன்போ? இயம்புபல
குல உயர்வோ? இசைந்திடீரே! (5)

ஏனைய எவ்வன்பர்க்கும் எய்தாதவாறு, இறைவன்
ஏற்ற தூய
மேனியிலே தம்முடலும் வேற்றுமை யின்றிக்
கலக்க விளைந்த பேறு
தான் நினைப்பின், பாணர் நந்தர் தமக்(கு)
இழிந்த வகுப்புகளால் தவிர்ந்த நன்மை
நானிலத்தீர்! எது மொழிவீர்? நலம் தடை
செய்வது குலமோ? நவிலுவீரே! (6)

"வறிஞர் அறிவினர் இழி வகுப்பினர்
சக்கிலியரென வகுக்கும் பற்பல்
சிறிய தொழிலின ரெனினும், செப்பும் அவர்
அனைவரும் உம் தேசத்தாரே!
செறிதசையில் குருதியினில் செப்பும் உனை
ஒத்த உந்தம் திருநாட்டாரே!
அறிக"—என பெரியர் விவேகானந்தர்
அறைந்த மொழி அறிகிலீரோ! (7)

காலைமுதல் மாலைவரை கடும் வெயிலில்
கழனிகளில் காலம் முற்றும்
வேலைகள் செய்பவர் உழைப்பால்
விளைபயனை நுகர்கின்றீர்! விசனமில்லீர்!
ஓலைபுனை குடில்களிலே உறைபவராம்
அப் பறையர்க்(கு) உற்ற துன்பம்
சாலவுமே மிகப் பலவாம்; சாற்றவற்றில்
சிறிதேனும் தயை கொள்வீரோ? (8)

எருதுகள் போல் உழைத்திடவே ஏவுகின்றீர்
எளியவரை எக் காலத்தும்;
செருக்குடையீர்! என்றேனும் சிறிது பிழை
அவர் இழைப்பின், சீற்றம் மீறி



கருணையிலா(து) ஐயோ! கை சலிக்க
அடிக்கின்றீர்! கண் கலங்கிப்
பொருமுகிறார் எளியர் பலர்; புடைப்பதுவோ
உம் பெருமை? புன்மையீரே! (9)

பன்றியொடு நாய் கழுதை பழகுமொரு
தெருவினிலே, 'பறையர்' என்போர்
என்றேனும் அடி வைப்பின், இயம்பு தெரு
தூய்மையினை இழந்த தாமோ?
நன்றியறிவில்லீரே! நவில் அவரை நலிவீரே!
நாயிற் கீழாய்த்
துன்றுபவர் அன்னவரோ? சூழ்ச்சி மிகும்
நீவிர் கொலோ? சொல்லுவீரே! (10)

மலை நாட்டிற் குருவாயூர் வட நாட்டிற்
பஞ்சவடி மாண்பை என்னும்
நிலை நாட்டும் கண்ணபிரான் நிகரி லிராமன்
கோயில் நிலைகளாகும்;
தலைவர் சத்தியாக்கிரகந் தன்னால் 'தீண்டார்'
துயரம் தவிர்க்க நின்றார்;
தலை இறையைத் தொழும் உரிமை சகலருக்கும்
உளதன்றோ? தடையும் உண்டோ? (11)

கருத்தினிலே செருக்கின்றி கண்ணனொடு
காகுத்தன் கருணையோடு
வருத்தம் மிகும் எவரிடத்தும் மனம் இரங்கித்
துணைசெய்த வண்மை எண்ணில்,
செருக்கினரே! அவர் வாழும் திருக்கோயில்
புகும் உரிமை 'தீண்டாதவர்'க்கு
இருக்கவிலை எனத் தடுக்க எவ்வண்ணம்
துணிவீரோ? இயம்புவீரே! (12)

வீரர் பலர் 'தீண்டாமை வேண்டாமை'
என்கின்றார்; வெகுளி மிக்க
ஈரமிலா நெஞ்சினர் அவ் இயக்கத்தைப்
பகைக்கின்றார்; எளியர் வாட
பாரதநாட்டினை பற்றும் பழிபாவம்
உள்ளவரை பயனொன்றில்லை;
வீரரெலாம் தீண்டாமை வெம்பிணியை
நீக்கபணி விரைந்து செய்வீர்! (13)

# இரவின் இரகசியம்.

ஆசிரியர். திரு. மா. இராசமாணிக்கம் அவர்கள்.

இந்த உலகில்—அழகே வுருவமான இவ் வுலகில்—இரவும் பகலும் தோன்றி இன்பந் தரும் இவ் வுலகில்—நாம் பிறக்கப் பேறு செய்தவரே யாவோம். எத்திசை நோக்கினும் அழகினது தோற்றமே. உலகம், வானம், கடல், சூரிய சந்திரர் தோற்றம், விண் மீன்களின் காட்சி, மரங்கள் செறிந்த சோலைகள் வனப்பு, மலர்களின் மாண்பு, உருசிகரமான உணவுப் பொருள்கள், புற்பூண்டுகள் நிறைந்த வெளிகள்—இவை ஒவ்வொன்றிலும் அழகு சுடர்விட்டு ஒளிர்கின்றதன்றோ! இவற்றால் உபயோகம் இராவிடின், இறைவன் இவற்றைப் படைத்திருப்பனோ? என்பதை எண்ண எண்ண, உண்மையாகவே இவற்றால் பயனுண்டு என்று அறிகின்றோம். பயனின்றி யொரு பொருளும் உலகில் படைக்கப்படவில்லை. ஆதலின், அவை அழகொடு மிளிர்கின்றன. எல்லாம் வல்ல இறைவன் அழகை விரும்புகையில், அவனால் படைக்கப்பட்ட நாம் அழகை விரும்பாதிருக்கலாமோ? நாமும் அழகை விரும்புகின்றோம்—விரும்பத்தான் வேண்டும். உண்மையில் அழகே—இயற்கை யழகே இன்பத்தைத் தரத்தக்கது. இயற்கை யழகைப் பலர் பலவாறு கண்டு இன்பம் நுகர்ந்துளர். அங்ஙனம் நுகர்ந்தவருள் இராபர்ட் லூயி ஸ்டிவென்ஸன் என்பவர் ஒருவர். அவர் இயற்கை வெளியிற் படுத்துக் கண்டறிந்த இரவின் இரகசியங்களைக் கூறி இன்பப்பட்டுள்ளார். இரவிற் காணும் இன்பத் தோற்றங்களைக் கண்டு அவர் கூறியன ஈண்டுத் தருதும். படித்தின்புறுக:

“நான் பிரான்ஸ் தேசத்தின் தென் கிழக்கில் உள்ள ரோன் நதியோரமாகப் பிரனிஸ் மலையைச் சார்ந்த பிரதேசத்தில் 1876-௵ செப்டெம்பர்௴ தனிப் பிரயாணஞ் செய்தேன்; நாயளவு இருந்த கழுதை யொன்றினை வாங்கி இதனுடன் பிரயாணஞ் செய்தேன். ஓர் இரவு மலைச்சிகரம் ஒன்றன்மேற் றங்கினேன். அங்கே தேவதாரு மரங்கள் அடர்ந்து இருக்கின்றன. சிறிய நீரோடை ஒன்றில் கூழாங் கற்கள் மேல் ‘சல சல’வென்ற இன்னிசை ஓசையோடு நீர் ஓடிக்



கொண்டிருந்தது. மரங்களுக் கிடையில் யான் தங்கி யிருந்தது ஓர் அறையுள் வசித்ததுபோலிருந்தது. என்து கழுதையை மேயவிட்டுப் பின்னர் யான் உணவு கொண்டேன். எனது கோணிக்குள் கால்களை விட்டுக்கொண்டு எனது தொப்பியால் முகத்தை மறைத்துக்கொண்டு நித்திரையில் ஆழ்ந்தேன்.

இராக்காலம் மிகவும் இன்பகரமான காலம் என்பதை நீங்கள் உணர வேண்டும். இரவு பன்னிரண்டு மணிக்கு மேல்தான் இன்பகரமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. நகரங்களில் அவியும் விளக்குகள் தம்மொளி மழுங்கும்; மெய்வருந்தி உழைத்து வாழும் எளியவரும், இருப்பதில் திருப்தியாய் இனிது வாழும் மக்களும் துயிலில் ஆழ்வர். இங்ஙம் உலகெலாந் துயில, சிற்றினக் குடியர் குடித்த தெல்லாம் போதாதென்று பின்னுமோர் முறை மதுவைத் தமது வள்ளத்தில் சொரிந்து மகிழ்வர். விண்ணும் மண்ணும் குவிந்த இருள் அவ் வேளையில் அச்சத்தை யுண்டாக்கும் ஒரு நிலை பெற்றுள்ளது. என்னே இந் நிலை! அந் நடு நிசியிற்றான் மனிதனின் அகங்கார மமகாரப் பூசலெலாம் அடங்கிக் கிடக்கின்றன. பொழுது புலர்ந்ததும் மக்களும் தம் ஆரவாரத்தை ஆரம்பித்து விடுகின்றனர். இரவு இங்ஙனே நிலைபெற்றிருப்பின், மனிதனது அகங்கார மமகாரப் பூசலும் ஒழிந்துவிடும். ஆயின், இரவு இங்ஙனே நிலைபெற்றிருக்குமோ? அஃது எங்ஙனங் கூடும்? இயற்கை மாறுதற்படி இரவும் பகலுந் தோன்றித்தாமே யாகவேண்டும்! பேயுங் கண்ணுறங்கும் நடு யாமத்தில் இயற்கையிற் றோன்றும் மாறுதல்களையும் அற்புத நிகழ்ச்சிகளையும் யான் கண்டவளவில் எடுத்தியம்புவேன்.

ஒரு கூரையடியில் இருந்து இரவைக் கழிப்பது துன்பமான காரியமே. ஆனால், வெட்ட வெளியில் இரவை மிகச் சுலபமாகவும் களிப்பாகவும் கழிக்கலாம். இன்பகரமான நட்சத்திரக் கூட்டமும், தேன் துளிபோல் துளிக்கும் பனித் துளிகளும், இயற்கையின் விநோதமும், இரவை இன்பத்திற் கழிக்கச் செய்யும் சுவர்களுக்கிடையிலும், திரைகளுக்கிடையிலும் படுத்துறங்கும் மக்கள் இராப் பொழுதில் பிணத்துக்குச் சமானமானவர்கள். ஆனால், வெளியிடத்துப் படுத்துறங்கும் பான்மையாளன் யோகானந்த நித்திரை செய்யவே இயற்கை இடங் கொடுக்கும். இரவு முழுவதும் இயற்கை யென்னும் பெண் நன்றாக மூச்சு விடுவதை அவன் கேட்பான். அவள் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் அந் நிலையிலும் புன்சிரிப்புடன் விளங்குவதை அவன் கண்டு மகிழக்கூடும். உலகமே—உலகத்திலுள்ள உயிர்களே உறங்குகையில் இயற்கைப் பெண்ணும் இன்ப நித்திரை புரிகையில் வெளி

புலகில் படுத்துள்ள மனிதன் இரவின் ஒப்பற்ற அழகையும், நிசப்தமான நிலையையும் அனுபவித்து ஆனந்தமடைவான். இத்தகைய இயற்கை இன்பத்தைவிட மனிதன் கண்டு மகிழத்தக்க பொருள் உலகில் யாதுளது!

ஆ! மற்றுமோர் இரகசியம்—வீடுகளுக்குள் விழுந்துறங்கும் மக்களுக்குத் தெரியாத இரகசியம்—பேயும் கண்ணுறங்கும் நடு நிசியில், இரண்டு மணியில் நிகழும் இன்ப ரகசியம் ஒன்று உண்டு. அவ்வேளை வெளியிடத்து உயிர்களைத் தட்டி யெழுப்பும் இரகசிய நிகழ்ச்சியொன்று நடக்கின்றது. அச் செயலைச் செய்பவர் யார்? அவர் யாராயிருப்பினும் நமக்கென்ன? பின்னும் பார்க்கலாம். அந்த அற்புத வேளையில் இயற்கையிடத்து மாறுதல் ஒன்று உண்டாகின்றது. காக்கைகள் கண் விழித்துக் கரைகின்றன; ஆனால், காலத்தை யறிவிப்பதற்கன்று; உலகத்தை அசைக்கும் சக்தியைக் கண்டு ஆனந்தமுறத்தான். வெளியிடத்துறங்கிய கால் நடைப் பிராணிகளும் தூக்க மயக்கத்தினின்றும் துடித்தெழுகின்றன. ஆடு மாடுகள் சிறிது புல் மேய்ந்து மீண்டும் நித்திரையில் ஆழ்கின்றன. இருக்க வீடற்ற மலை நாட்டு மக்கள் இரகசிய வேளையில் எவ்வாறோ எழுகின்றனர்; தூக்கத்தால் மங்கிய தம் கண்களைத் துடைத்துக்கொண்டு இரவின் இன்பத் தோற்றத்தினைக் கண்டு களிக்கின்றனர். உலகத்தில் ஆழ்ந்து கிடந்த இவ்வுயிர்களை யாரேனும் தட்டி யெழுப்பினரா? அல்லது இயற்கை அன்னையேனும் தனது மடியில் உறங்கும் மக்களைக் கிள்ளி விட்டனளா? என்ன ஆச்சரியம்! ஒவ்வோர் இரவும் இவ் விரகசிய நிகழ்ச்சியைக் கண்டு களிக்கும் மலை நாட்டு மக்களும் இவ்வற்புத சக்தியின் காரணத்தை யறியக்கூட வில்லையோ? ஆம்; அவர்களும் இதன் இரகசியத்தை யறியாது விழிக்கின்றனர். இரவில் சரியாய் இரண்டு மணிக்கு அவ் விரகசிய நிகழ்ச்சி நடைபெறுகிறது. இஃது ஓர் இன்பகரமான நிகழ்ச்சியே. இஃது, இயற்கைத் தோற்றத்தினும், அதன் வாயிலாக இறைவனது அரிய சக்தியையும் வெளிப்படுத்தி, மக்களை இன்புறச் செய்யும் நிகழ்ச்சியே யன்றி வேறன்று.

அந்த இரகசிய வேளையில் நான் என்ன செய்தேன் என்பதை யறிய நீங்கள் விரும்புவீர்கள் அல்லவா? கூறுவேன் கேளுங்கள். இரகசிய வேளையில் நானும் பிற உயிர்களைப் போலவே எழுந்தேன். அப்போது எனக்கு நீர் வேட்கை யதிகமாக இருந்தது. நான் வைத்திருந்த குளிர்ந்த நீரைக் குடித்தேன்; எனக்குக் குளிர் தெரியாமல் இருந்தது. வானத்தை நோக்கினேன். விண் மீன்கள் விளக்கமுற்றிருந்தன. பால்போல் வெளுத்த பட்டை யொன்று நீலக் கூரையில் இடப்பட்டது போன்று இருந்தது. அவ் வேளையில் எனது கழுதை மேய்ந்து கொண்டிருந்தது. அது புல்லைக் கடித்த அரவமும், எனக்



கருகில் ஓடிக்கொண்டிருந்த நீரோடையது நிலைத்த ஓசையும் தவிர வேறு ஓசை என் செவியிற் பட்டிலது. அடிக்கடி இன்பகரமான குளிர்ந்த காற்று மலை யுச்சியில் வீசிக்கொண்டிருந்தது.

அந்த இன்பகரமான வேளையில் நான், நாகரீகம் என்னும் பேய் தலை விரித்தாடும் நகரங்களில் இல்லாது, மலை யுச்சியில் மலைமகனாக இருக்க நேர்ந்ததைக் குறித்து இன்பமுற்றேன். இயற்கை அன்னையுடைய இன்பப் புதல்வனாக இருக்கவே யான் விழைந்தேன்; இன்றும் விழைகின்றேன். அந் நிலையில் கச்சேரிகளில் காலை முதல் மாலை வரையில் ஓயாது வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களையும், நற்காற்றின்றிப் பள்ளியிற் படிக்கும் மாணவர்களையும், விளக்கை ஏற்றிக் கதவுகளை யடைத்துக்கொண்டு அறைகளில் படிக்கும் மாணாக்கர்களையும் நான் நினைக்க நேர்ந்தது. மலை யுச்சியில் குளிர்ந்த காற்றில் குதூகலமாயிருந்த நான் அவர்களை நினைக்க வருந்தினேன். அன்றிரவு நான் ஓர் உண்மையைக் கண்டுகொண்டேன். அஃதாவது: ஆண்டவனால் உண்டாக்கப்பட்ட வெளியிடம் என்ற வீடே மனிதனுக்கு இன்பத்தையும் இறைவனது வியத்தகு தோற்றத்தையும் தரத்தக்கது என்பதே. மனிதன் நோயின்றியும் உடல் உரம் பெற்றும் கடவுள் நிலையை யெய்த வேண்டுமாயின், வெளியிடமே அவனுக்கேற்ற தென்பது உண்மை. நான் எனக்கே ஓர் இன்பத்தைக் கண்டறிந்தேன் என்று ஏன் சொல்லக்கூடாது? உங்களுக்கு இவ் வுண்மை இன்பமாகத் தோன்றாவிடினும், மலை யுச்சியில் படுத்த யெனக்கு இன்பந்தானே! அன்பர்களே! அந் நிலையில் யான் எதை விரும்பினேனென்று நினைக்கிறீர்கள்? என் அருகில் அமர்ந்து, சிறிதும் அசையாது என்னுடன் இருந்து நான் காணும் இன்பத் தோற்றத்தைக் கண்டு களிக்கத் தகுந்த துணை ஒன்று வேண்டுமென விரும்பினேன். சுருங்கச் சொல்லில், எனது தனிமை அறிவு நிரம்பிய பெண் ஒருத்தியால் நீங்குமென நினைத்தேன்.

நான் இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் மெல்லிய அரவம் ஒன்று என் செவிகளைத் துளைத்தது. காக்கையினது கரைதல் எனக் கருதினேன். வரவர அச் சத்தம் பலப்பட்டது. ஆ! என்ன இன்பமான குரல்! மலை யடியில் உள்ள பாட்டிடையிற் செல்லும் பிராயாணி ஒருவன் பாடுவதாகத் தெரிந்தது. நிசப்தமான அவ்வேளையில் அவன் பாடிக்கொண்டு போனது இன்பமாகவே இருந்ததென்று கூறவும் வேண்டுமோ? பாடியவன் தனது உள்ளத்தினெழுந்த உவகைப் பெருக்கால் பாடினனாதலின் அவனது பாட்டு, செவிக்கு இனிமையாகவே யிருந்தது. தூங்கும் நகரங்களில் நடுநிசியிற் செல்வாரும் வண்டிக்காரர்களும் இங்ஙனம் பாடுகின்றனரெனச் சொல்லக் கேட்டுள்ளேன். சிலர் வாத்தியங்களை முழங்கு

வார்களென்றும் கேள்வியுற்றுளேன். அந்தப் போக்கையும் இங்குப் பாடியவன் போக்கையும் கவனித்தால், முன்னதைவிடப் பின்னது சிறந்ததென்றே நினைக்கின்றேன். ஏன்? முன்னது, சிறந்த நிலையில் உள்ள பட்டணங்களில் பாடுவத; பாடுபவன் விழித்தவனேயன்றிக் கேட்பவர் ஒருவருமிலர். இங்கோவெனின், பாடியவன் உளன்; நான்கு அல்லது ஐந்து ஆயிரம் அடிகளுக்கு மேலிருந்து கேட்பவன் யானுமுளன். இஃது, இரு மடங்கு இன்பத்தைத் தரத்தக்கதல்லவா? அதிகம் அறைவதேன்? கண்ணுளோர் என் போன்று வெளியிடத்துத் துயின்று இன்ப ரகசியங்களைக் கண்டு களிப்பாராக.

# சீன ஜப்பானியப் போர்க் கோலம்.

திரு. ஸி. எ. பெருமாள் அவர்கள்.

## I



சீனாவைச் சேர்ந்த மஞ்சூரியாவில் ஜப்பானின் அட்டூழியங்களும் அநியாயங்களும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகின்றன. சர்வ தேச மக்கள் குடியிருந்து வரும் ஷாங்கே நகருக்குச் சமீபத்திலுள்ள சாப்பே என்னும் ஓர் மாநகரத்தை ஜப்பானியர்கள் தங்கள் பீரங்கிகளையும் ஆகாய விமானங்களையும் உபயோகித்து படு நாசப் படுத்தி விட்டனர். ஹாங்கோப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வீடுகளையும் கட்டிடங்களையும் ஜப்பானியத் துருப்புகள் நெருப்பு வைத்துத் தரையோடு தரையாக்கி விட்டன. ஜப்பானின் கப்பற் படையினரும் சாதாரண ஆயுதம் தரித்த ஜப்பானிய உத்தியோகஸ்தரும் இப் பிரதேசங்களில் வசித்து வந்த எளிய சீனர்களை மகா பயங்கரமான குரூர முறைகளில் தாக்கியும் கொலை செய்தும் நாசப்படுத்தி வருகின்றனர். பொதுவாகக் கூறின் சீனம் ஜப்பானின் இராணுவத் திமிரினால் மிகவும் நெருக்கடியான நிலைமையில் அகப்பட்டுத் திண்டாடித் தவிக்கின்றது.

ஜப்பான், மஞ்சூரியாவில் திடீரெனப் படையெடுத்ததிலிருந்து அது தனது சர்வதேச உடன்படிக்கைகளையே அடியோடு புறக்கணித்து விட்டதென்று கூறுவது மிகையாகாது. "சின்சோ" பிர



தேசத்தை அது கைப்பற்றியதிலிருந்து, சர்வதேச சங்கம் சமீபத்தில் ஜப்பானை எதிர்த்துச் செய்துள்ள தீர்மானத்தையும் அது லட்சியம் செய்யவில்லை எனக் கூறலாம். ஜப்பான் இதர வல்லரசுகள் தமது பொருளாதார சீர்கேட்டினாலும் அரசியற் குழப்பத்தினாலும் பெருந் தொந்திரவுகளுக் குட்பட்டிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் மஞ்சூரியாவில் பிரவேசித்ததே, ஜப்பான் இதுகாறும் எதிர் பார்த்திருந்த காலா வசதியைச் செவ்வனே விளக்குவதாகும். அதன் எண்ணமும், இதர தேசங்கள் நெருக்கடியான இவ் வேளையில் கீழ் நாட்டுத் தகராறுகளில் தலையிடாது விட்டுவிடும் என்பதேயாகும். ஆதலாலேயே ஜப்பான் தனது இரத்த தாகத்தை இந் நான்கு மாத காலமாக மஞ்சூரியாவில் செலுத்தி அத்துடன் நின்றுவிடாது சீனாவின் தென் பிரதேசமாகிய ஷாங்கே, நாங்கிங், ஹாங்கோ ஆகிய பெரும் துறைமுகப் பட்டணங்களையும் தாக்க ஆரம்பித்தது. இதனால் அது மஞ்சூரியா மட்டுமன்றி சீனா முழுவதையுமே தாக்குவதற்கோ அல்லது பிடித்து அடிமைப் படுத்துவதற்கோ முனைந்துள்ள தென்பது தெளிவாகுமென நம்புகிறோம்.

## II

ஷாங்கே என்பது சீனாவிலிருக்கும் மகா பெரிய மாநகரம். சீனாவின் பொருளாதாரத்திற்கும் வியாபாரத்திற்கும் அது நடு நாயகமாக விளங்குவதாகும். ஷாங்கேயைத் தாக்குவதால் சீனாவின் சகல தொழில்களுக்கும் வியாபாரங்களுக்கும் உடன் கெடுதல் உண்டாவது நிச்சயம். ஆதலாலேயே வீறுகொண்ட ஜப்பான், சீனர்கள் சால்பேயிலுள்ள நாலைந்து மத குருக்களைத் தாக்கினார்கள் என்ற சிறு காரணத்தைப் பலப்படுத்தி, திடீரென்று ஜப்பானிலிருந்து பெரும் யுத்தக் கப்பல்களையும் ஆகாய விமானங்களையும் வரவழைத்து ஷாங்கேயில் சர்வதேச மக்கள் குடியிருக்கும் பிரதேசங்களில் இறக்கி வைத்தது.

இதனிடையில் ஷாங்கேயில் ஜப்பானிய ஸ்தானாதிபதியாயிருந்து வரும் மிர். முறே என்பவர் ஷாங்கேயின் சீன நகர அதிபதிக்கு நான்கு நிபந்தனைகளை அனுப்பி வைத்தனர். அதாவது சாப்பேயில் ஜப்பானிய மத குருக்களை சீனர்கள் தாக்கியதையிட்டு மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும், மதக் குருக்களைத் தாக்கிய குற்றவாளிகளை உடனே கைதிசெய்து தண்டனை விதிக்க வேண்டுமென்றும், அதனாலேற்பட்ட மருத்துவ சிகிச்சைக்கு அவசியமான பொருளுதவி அளிக்க வேண்டுமென்பதாகும். நெருக்கடியான இந்த நிலைமையை நன்குணர்ந்த சீன நகர அதிபதியான மேயர் வூ என்பவரும் ஜப்பானியர்கள் கோரிய இந் நிபந்தனைகளை மிகவும் பொறுமையுடன் அப்படியே ஒப்புக்கொள்ளலானார். இந்த அவமானங்களைப் பொறுத்துக்

கொண்டேனும் பெரும்போருக்கு இடங்கொடுத்தலாகா தென்பதே அவருடைய பெருந்தன்மையான எண்ணமாகும். ஆனால் யாவரும் ஆச்சரியப்படும் விதத்தில், மஞ்சூரியாவில் ஜப்பானியர்கள் திடீரென்று புகுந்து நாசப்படுத்தி விட்டனர். சென்ற ஜனவரிமீ 28உ நடு இரவு, அதாவது சீன நகர அதிபதிக்கு ஜப்பானிய ஸ்தானாதிபதி நிபந்தனைகளை அனுப்பிய ஐந்தரை மணி சமயத்திற்குள் ஜப்பானிய கப்பற் படை வீரர்கள், ஜப்பானின் நிபந்தனைகள் மிகவும் நியாயமானவையென்றும் இதற்கு சீனம் உடனே இணங்க முன்வரவில்லையென்றும் சாக்குக் கூறி, போர் தொடுக்க முன் எச்சரிக்கைகூட இல்லாது சாப்பே பிரதேசத்தில் உள் நுழைந்து தனது ஆகாய விமானங்களின் மூலம் எண்ணற்ற வெடிக் குண்டுகளை வாரி யிறைத்து பெருஞ் சேதத்தை உண்டுபண்ணி அவ்விடங்களையும் கைப்பற்றிக் கொண்டனர்.

## III

சீனம் எவ்வளவு தூரம் பலமிழந்து தவிப்பினும் ஜப்பானின் படை எடுப்பை எதிர்க்காமலிருக்க இயலவே இயலாது. ஜப்பான் மஞ்சூரியாவில் சென்ற செப்டெம்பர்மீ 18உ இரவில் ஆக்கிரமித்து பொறுக்க இயலாத அட்டூழியங்களையும் அவமானங்களையும் விளைவித்து வந்ததாயினும், சீனம் இது பரியந்தம் அதிசயிக்கத் தகும்படியாக மிகவும் பொறுமையுடன் யாவற்றையும் சகித்து ஜப்பானை எதிர்க்காமலே யிருந்து வந்தது. ஆனால் சீனம் எவ்வளவுக்கதிகம் பொறுமையுடனிருந்து வருகின்றதோ அவ்வளவுக் கதிகமாய் ஜப்பான் வீறிட்டு நின்று நாளுக்கு நாள் அளவு கடந்த நாசத்தை உண்டுபண்ணிக்கொண்டே வர முனைந்தது. உண்மையில் ஜப்பானின் இராணுவ பலத்தை எதிர்த்துப் போராடுவதற்கு சீனம் தகுதியற்றிருந்தாலும் ஜப்பானின் இராணுவத் திமிரை எக்காலமும் பொறுத்து அதற்கு அடிமைப்பட்டுவிட ஒருபோதும் இசையவே மாட்டாது. இதுகாறும் ஜப்பானியர்கள் சீனாவுக்கு இழைத்து வந்த பெருந் துன்பங்களையும் தொல்லைகளையும் சீனர்கள் பொறுத்திருந்தனர். இனி, உண்மையைக் கூறுவதானால் சீனர்கள் ஒரு நிமிடமும் பொறுத்திரார்கள். சீனர்கள் தமது இராணுவ பலம், ஜப்பானை எதிர்க்கத்தக்க நிலைமையில் இல்லையென நன்கறிந்திருந்தும், தமது செல்வ நிலையும் தற்போது போர் தொடுப்பதற்கு இடமளியா தென்பதைக் குறைவறத் தெரிந்திருந்தும், போர் தோல்வியுறுமாயின் சீனம் நிச்சயமாகவே உள்நாட்டுக் குழப்பங்களுக்குள்ளாகித் தீரவேண்டுமென்பதையும் அது நன்குணர்ந்திருந்தும், சீனம் தற்கால நிலைமையைப் பொறுத்தவளவில் போரைத் தடுப்பதற்கு யாதொரு மார்க்கமுமில்லாதிருப்பது கண்டு எவ்விதமும் ஜப்பானை எதிர்க்காமலிருக்க ஒருபோதும் முடியாதெனவே தேர்ந்துவிட்டது. எனவே சீனத் தளபதியாக விளங்கும்



சியாங் கேய் ஷேக் அவர்கள், "சீனம் இனி வரப்போகும் ஐம்பது வருடங்களுக்கும் பணமில்லாது தவிக்க நேருவதானாலும் எனது உயிரிருக்கு மட்டும் போர் புரிந்தே வருவேன்" என உக்கிராவேசத்துடன் கூறி நிற்கின்றார். இந் நிலை கண்டு வரும் சீனப் பொதுமக்கள்பாலும் யுத்த உணர்ச்சி நாளொருவண்ணமாக வளர்ந்துகொண்டே வருகிறது. எனவே அவர்கள் தனது தாய் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கும் தனது எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கும் எதை வேண்டுமானாலும் தியாகம் செய்வதற்கும் தயாராகியே வருகின்றனர்.

## IV

சாப்பேயில் ஜப்பானியப் படையை எதிர்த்து நின்ற சீன சைனியம் பலத்தில் மிகவும் குறைவுற்றிருந்த போதிலும் ஜப்பானிய பீரங்கிக் குண்டுகளையும் வெடிக் குண்டுகளையும் எட்டு நாட்களாக எதிர்த்து தங்கள் அரிய திறமையையும் தைரியத்தையும் சீன மக்களிடை நிலை நாட்டினர். பத்தொன்பதாவது வகுப்பு சைனியத்துக்குத் தலைமை வகித்து வரும் சீன தளபதி ஜெனரல் லெய்டிங் கேய் என்பவர் தனது சைனியம் கடைசிவரை நின்று போர் புரியுமென மிகத் தீவிரமுடன் சீன மக்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார். ஆனால் ஆறு மணி நேரத்திற்குள் சீனத் துருப்புகள் யாவற்றையும் ஷாங்கேப் பிரதேசத்தை விட்டு விரட்டி அடித்து சீனாவைச் சரண்புகச் செய்து விடுவேனென மிகுந்த கர்வத்தோடு கர்ஜிதம் செய்த ஜப்பானியக் கப்பற் படைத் தலைவரான அட்மிரல் ஷியேஸ்வா என்பவர் சாப்பேயில் எட்டு நாட்கள் வரை எதிர்த்துப் போராடிய சிறு படை வீரர்களின் அரிய தியாகங்களைக் கண்டு மலைத்துப் போயினர் என்றும், ஆதியில் கொண்ட கருத்தின்படி சீனாவை இலகுவில் முறியடித்துவிட முடியாதென்றும் அறிந்துகொள்ள முடிகிறது.

முடிவு என்னவாயினும் இந் நாள்வரை ஜப்பான் சீனாவில் செய்துள்ள அட்டகாசங்களையும் அங்கிரமங்களையும், சீனர்கள் ஒருபோதும் மறந்துவிட மாட்டார்களென்பது உண்மையாகும். சீன ஜப்பானியத் தற்கால நிலைமை சீனம் உள்ளளவும் சீன சரித்திரத்தில் மிகத் தெளிவாக எழுதப்பெறுமென்பதற்கும் சந்தேகம் வேண்டுவதில்லை. சென்ற ஜனவரிமீ 28உ சாப்பேயில் ஜப்பான் செய்த படு நாசத்தை சதா காலமும் நினைவு கூறும்பொருட்டு சீனாவில் பற்பல துறைகளிலீடுபட் டுழைக்கும் பல சங்கங்களும் ஜனவரிமீ 28உயை "சீனாவின் துக்கதினம்," என வழங்கி அந் நாளை ஒவ்வொரு ஆண்டும் துக்க தினமாகப் பாவிக்க வேண்டுமெனவும் தீர்மானித்துவிட்டன.

# மாணவர் கடமை.

## ஒழுக்கம் உயிரினும் சிறந்தது.

பண்டித. திரு. பா. பக்கிரிசுவாமி செட்டியார் அவர்கள்.

மாணவர் கடமை என்ற தலைப்பின் கீழ் யான் முதன்முதல் நமது அருமைப் 'பாரதி'யில் கட்டுரை எழுதத் துணிந்ததற்குச் சில காரணங்களுண்டு. தற்பொழுது மாணவரா யிருப்பவரே பிற் காலத்தில் தேசாபிமானத்தோடு தாய் நாட்டின் அபிவிருத்திக்காக உழைக்கும் கௌரவம் வாய்ந்த குடிகளாய் மாறப் போகின்றவராதலால், அவர்களுக்கான கடமைகளை அறிவுறுத்த விரும்பியது ஒன்று; "ஏதேனும் உலகத்திற்கு உழைக்க வேண்டுமென்ற எண்ணம் உனக்குளதாயின், போது ஜனங்களிடையே போய்த் துன்பப்படாதே! பள்ளி மாணவர்களிடையே தொண்டு செய்! உன் எண்ணம் நிச்சயமாக நிறைவேற்றப்படும்" என்று ஜெர்மானிய அறிஞர் ஒருவர் கூறியவாறு, மாணவர்களிடம் இன்றியமையாத சில பொருள்களை வலியுறுத்தி எனது கடனை முடிக்கக் கருதியது மற்றொன்று.

### ஒழுக்கமே உயர்வளிக்கும்

அடைதற்கரிய மானிடப் பிறவியின் பருவங்கள் சிலவற்றுள் இளமை சிறந்ததென்பது உலகறிந்தது. இளமைப் பருவந்தான் வாழ்வின் உயிர்நாடியா யுள்ளது. வாலிப வயதுதான் வருங்கால வாழ்க்கைக்கு அடியா யிருப்பது. வாழ்க்கை என்னும் மாடியை அடைய இளமைப் பருவமே முதற் படியா யிருக்கின்றது. இளமையே சக்தி, வலிமை, வீரம் இவற்றிற்கு இருப்பிடமானது. முடிவாய்க் கூறவேண்டுமாயின் ஒருவனது உயர்வும், தாழ்வும் அவனுடைய வாலிப ஒழுக்கத்தில் வயப்பட்டிருக்கின்றதென்னலாம்.

இத்தகைய இளமைப் பருவம் பெரிதும் பாடசாலையிலேயே கழிக்கப்படுகின்றது. பள்ளிக்கூடமே பலரின் மனத்தைப் பண்படுத்தும் இடமாயிருக்கின்றது. அங்கு எது விதைக்கப்படுகின்



றதோ அதுவே நாளடைவில் செழித்து வளருகின்றது. பள்ளிப் பருவத்தில், இளம் வயதில் எத்தகைய அபிப்பிராயங்களும், நோக்கங்களும் வேரூன்றுகின்றனவோ அவைகளுக்குத் தக்கவாறே பிற்கால நடவடிக்கைகளு மிருக்குமென்பதற் கையமில்லை. அவைகளுக்குத் தகுந்தவாறுதான் தாய் நாடு நன்மையையோ, தீமையையோ அடையுமென்பதும் உண்மை. போருக்குப் புறப்படும் வீரனொருவன் எவ்வாறு முன்னரே தனக்குத் தகுதியான படைகளைத் தயார் செய்துகொள்ள வேண்டுமோ, அங்ஙனமே பிற்கால வாழ்க்கையில் ஈடுபடப்போகும் மாணவன் நல்லொழுக்கத்தில் நடக்க வேண்டுவது அவசியமேயாகும்.

கல்வி கற்பது கேவலம் வயிற்றுப் பிழைப்பிற்கென் றெண்ணலாகாது; பெரும்பான்மையும் ஒழுக்கத்திற்கே என்று உன்ன வேண்டும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' ஆதலின், இளமையிற் பற்றிய ஒழுக்கம் பல்லாண்டிற்குப் பின்னரும் நிகழும். எனவே, மாணவர் நல்லொழுக்கத்தில் பயிலுவதே முதற் கடமையாகும்; எழுதப் படிக்கக் கற்பதை இரண்டாவ தென்னலாம். மொழி அறிவாகிய வெறுங் கல்வி ஒரு பயனையும் தாராது. கல்வியின் மூலமாக நல்லொழுக்க நன்னெறிகளை அறிந்து அவ் வழி நின்றொழுகலே இன்றியமையாதது. இதனை, 'ஓதலின் சிறந்தன்று ஒழுக்க முடைமை' என்ற முதுமொழி வலியுறுத்துகின்றது. இன்னும் ஒழுக்கத்தின் உயர்வைக் கூறவந்த வள்ளுவனார் 'ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார். மேலும், உலகத்தை நோக்குமிடத்து ஒருவனிடத்தும் வெளிப்படையாகக் காணப்படும் ஒழுக்கத்தாலேயே அவன் மதிப்போ, அவமதிப்போ அடைகின்றான். மகாத்மா காந்தி அடிகள் உலகம் போற்றும் உத்தமராய் விளங்குவதற்கு அவர்கொண்ட சிறந்த ஒழுக்கங்களன்றோ முக்கிய காரணமாய்த் துலங்குகின்றன? பண்டு நம் மிந்திய நாடு பல் வகையாலும் சிறப்புற்றிருந்த தென்றால் அதற்குக் காரணம், அக் காலத்தில் வதிந்த இளைஞரின் ஒழுக்கம், அறிவு இவைகளே என்றுரைப்பது மிகையாகாது.

### தற்கால நிலைமை

இத்தகைய அத்தியாவசியமான ஒழுக்கம் நம் நாட்டுத் தற்கால மாணவரிடம் திருப்தியாக இருக்கவில்லை என்பதை யான் வருத்தத்தோடு உணர்த்திக் கொள்கிறேன். ஆன்மார்த்த அழுக்கு மாணவரிடையே இதுகாலைப் பரவி வருகின்றது. இது தொத்து

நோய்போல் பரவி எல்லை இல்லாத தீங்குகளை இயற்றி விடுமே என்று இரங்கவேண்டி இருக்கின்றது. மாணவர் தங்களுக்குள் பரவி வரும் தீய பழக்க வழக்கங்களை இனியேனும் அறவே அகற்ற வேண்டும்; தங்கள் வாய்களைப் புகைப் போக்கிகளாக மாற்றுவதை நிறுத்தல் வேண்டும். பீடி, சிகரெட் பிடிப்பதால் உடலுக்கு ஊறு உண்டாவதை எண்ணி, அடியோடு அவற்றைத் தொலைக்க வேண்டும். மனத்தைப் பரிசுத்தப்படுத்திக்கொண்டு நல்லொழுக்கத்தில் நடக்க வேண்டுவது மாணவரின் முதற் கடமையாகும். ஏக்கம், ஏமாற்றம், அதைரியம், அச்சம், கர்வம், கோபம் என்பவை மாணவர் அகராதியிலிருக்கவே கூடாது. அந் நச்சுக் குணங்களுக்குக் கொஞ்சமும் இடங் கொடுத்தலாகாது.

மாணவர் தங்கள் ஒழுக்கத்தைப்பற்றித் தாங்களே கவலையுற்று ஒழுகாதவரையில் பயனில்லை. 'மாணவர்களின் ஒழுக்கத்தை ஆசிரியரவர்கள் கவலைகொண்டு கடுமையான முறையில் சீர்திருத்த வேண்டுமென்னும் கோள்கையை யான் பிற்போக்கான அபிப்பிராயமென்றே உரைப்பேன். கல்விச்சாலையிலுள்ள மாணவர்களின் ஒழுக்கத்தைச் சீர்படுத்த வேண்டுமாயின், அதற்கு அந்த மாணவர்களையே பொறுப்புள்ளவராக்குவதுதான் மிக உசிதமான வழி' என்று அனுபவ முறையில் கண்ட ஆங்கில அறிஞர் திரு. எர்னஸ்டு ஏ. கிராடாக் என்பவர் மொழிகின்றார். எனவே, மாணவர் தங்கள் ஒழுக்கத்திற்குத் தாங்களே பொறுப்பாளிகள் என்பதை உணர்ந்து சன்மார்க்கத்தில் ஒழுகி மாண்புடையவராகத் திகழ வேண்டும்.

## மாதா வயிறெரிய மகேசுவர பூஜையா?

மாணவர் மனத்தில் குடிகொள்ள வேண்டுவது: தாய் நாட்டின் பால் அன்பு. நாட்டுப் பற்றுண்டாகத் தாய்மொழிப் பற்று இன்றியமையாது வேண்டற்பாலது. மகாத்மா காந்தி அடிகள், 'தாய் மொழியை அலட்சியம் செய்வது தேசீயத் தற்கொலையாகும்' என்று கூறுகின்றார். ஆனால், இந் நாளில் நம் நாட்டிற்குரிய இயற்கைக் கல்வி மாணவரிடையே சிதைக்கப்பட்டிருக்கின்றது. ஆங்கிலம் பயில்வதுதான் அறிவுடைமை என்று மாணவர் கருதுகின்றனர். இஃது அறியாமையாகும். நான் ஆங்கிலம் கற்கலாகாதென்று கூறவில்லை. ஆங்கிலம் உலக மொழியாகப் பரவி வருவதாலும், அரசாங்க பாஷையாக இருப்பதாலும் அதனையும் பயில்வது அவசியமென்றே உரைப்பேன். ஆனால், ஆங்கிலக் கல்வியில்தான் அறிவுண்டு என்பதையும், தாய்மொழியை அசட்டை செய்து ஆங்கிலம் கற்பதுதான் கௌரவமும், நாகரீகமுமாகு மென்பதையும் நான் ஏற்றுக்கொள்ளேன். தாய்மொழியை விடுத்துப் பிற மொழி



197879

யைப் படிப்பது 'மாதா வயிறெரிய மகேசுவர பூஜை செய்வ'தை ஒக்குமென்பதை உணர்த்துகின்றேன். தாய்மொழியை அலட்சியம் செய்து அன்னிய மொழியையே சிறந்ததாக எண்ணும் எவரையும் உலகம் கௌரவமாகக் கருதாது. ஆங்கிலர் முதலிய அன்னிய நாட்டினர் எத் தேயத்திலிருந்தாலும், பல மொழிகளைப் படித்திருந்தாலும் தங்கள் தாய்மொழியையே பேசும்போதும், எழுதுங்காலும் உபயோகித்து அதனிடத்துத் தனிப்பற்றுக் காட்டுகிறார்களே யன்றி அசட்டை செய்கிறார்களில்லை. மேல் நாட்டாரைச் சாயல் பிடிக்கும் நம்மவர் அவர்பால் காணப்படும் இத்தகைய நற்குணங்களை ஏனோ நோக்குவதில்லை?

## தமிழின் பெருமை

எவர்க்கும் அவரவர் தாய்மொழிக் கல்விதான் மிகவும் அவசியமாகும். ஒவ்வொரு நாட்டின் அமைப்புக்குத் தக்கவாறு மொழிகள் அமைந்துள்ளன. நமது நாட்டின் இயல்புக்கேற்ற மொழி தமிழ் மொழியேயாகும். ஆதலால் மாணவர் தமிழ் மொழி மீது கவலை செலுத்தாது வாழ்வது இயற்கை யன்னையை மறந்து வாழ்வதாகும். தாய்மொழி மீது பற்றில்லாத எந் நாட்டாரும் முன்னேற்றமுற முடியாது. அடிமைச் சங்கிலியில் கட்டுண்டிருந்த அயர்லாந்து, பின்னர் விடுதலை அடைந்ததற்குக் காரணம் மறந்திருந்த நாட்டு மொழியை வளர்த்ததன்றோ?

நிற்க, நம் தாய்மொழியாகிய தமிழ் மொழி இதர மொழிகளைப் போன்றதன்று; பெயரளவிலேயே இனிமை என்னும் பெயரை யுடையது; முற்றுப் பெற்றது; சிறு சொற்களை யுடையது; நோய் கண்டோர், மூப்புற்றோர், சிறுவர் முதலோர்க்கும் உச்சரித்தற்கு எளிதானது; கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய பல மொழிகளுக்கு முதலானது; சுருங்கக் கூறல் என்னும் அழகில் விரிந்த பொருட் பொலிவுடையது; உள்ளத்தின் தோற்றங்களை வெளியிடுவதற்கு நுணுக்கமாகவும், தத்துவ வகையாகவும் அமைந்த சொற்பொலிவுடையது; பிற மொழிச் சொற்களை வேண்டாது நடைபெறும் பெருமையுடையது; ஆரியம், கிரீக் முதலிய மொழிகளிலும் கலந்துள்ளது; வடமொழிக்கு முற்பட்டது. மற்றும் இதன் பெருமைகள் எண்ணற்றன. உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மைகள் நிறைந்த நூல்கள் தமிழ் மொழியில் பலவுண்டு. திருக்குறள் ஒன்றே இதனை உண்மையென ஒப்பச் செய்யும். திருக்குறளில் அடங்கியுள்ள உண்மைகள் இவ்வுலக மழிந்து வேறு உலகம் ஏற்படினும் அவ்வுலகும், ஏற்றுக்கொள்ளும் சிறந்த இயல்பினை யுடையவை. மற்றும் தமிழன்னையின் அணியாகிய சிந்தாமணி,

சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய அரிய நூல்களின் பெருமையை என்னென்றுரைப்பது? எம்மொழியினும் இனிய மொழியும், தெய்வ மணங் கமழும் சொற்களும் கேட்கவும், ஆனந்திக்கவும் நிறை சுவையுடையதுமான தமிழ் மொழியின் மகிமையை எவரே அளவிடற்குறியார்? தமிழ் மொழியை எவரேயாயினும் சிறிது காலம் வரையில் செவ்வையாகக் கற்றுச் சுவைத்து, அதன் அமுதினை ஒருதரம் பருகிவிட்டால் பின்னர் தீஞ்சுவை கண்டு விடாது மேலும் மேலும் விரும்புவீர்களென்பது திண்ணம். தமிழினிமையில் ஆழ்ந்திருந்த காலஞ் சென்ற தேசீயக் கவி சுப்ரமண்ய பாரதியார், 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' என இசைத்ததை நோக்க வேண்டும். நமது தாய் மொழியாம் இனிய தமிழ் மொழியை ஆர்வத்தோடு பயில வேண்டும். அதன் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்.

## முன்னோர் வரலாறு

அடுத்தபடியாக மாணவர்க்கு அவர்களது முன்னோரைப் பற்றிய அறிவும் நினைவும் அவசியமாகும். ஆகவே, அந் நோக்கினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்றுள்ள சரிதங்களை மாணவர் ஆராய்ச்சி செய்ய வேண்டும். தங்கள் நாட்டின் பழமை, நாகரீகம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ளல் வேண்டும்; பிற நாடுகளின் சரித்திரங்களையும் படித்தறிதல் நலமேயாகும். சரித்திரங்களை ஆராய்வதால் வாழ்க்கைக்கு அவசியமான விஷயங்களை உணர்ந்து கொள்ளுதற்கியலும். ஆதலின், சரித்திர ஆராய்ச்சி மாணவர்க்கு மிகவும் அவசியமானதென்று யான் வலியுறுத்துகின்றேன்.

## ஒரு சிறந்த புத்தகம்

மற்றும், அறிவு வளர்ச்சிக்குச் சரித்திரக் கல்வி ஆதாரமாயிருப்பதுபோல, பல ஊர்களின் பழக்கமும் மிக்க அவசியமாகும். வெறும் எழுத்துப் பூச்சிகளாக இருப்பதைவிட நாட்டு வளப்பத்தையும் அறிதல் நலம். நாட்டின் பல பாகங்களையும் சுற்றி வருகையில் அங்கங்கேயுள்ள மக்களின் நடையுடை பழக்க வழக்கங்கள், இயற்கை செயற்கைக் காட்சிகள் இவை யனைத்தையும் நேரே கண்டு களிக்கவும், மனம் பண்பட்டு அறிவு வளர்ச்சி யடையவும் முடியும். இவ் வுலகத்தைப் பலவித பாடங்களையுடைய ஒரு சிறந்த புத்தகமென்று கூறலாம். அதைச் சுற்றிப் பார்ப்பதுதான் அதனைப் படிப்பதாகும். இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளில் ஊர் சுற்றிப் பார்ப்பதை மாணவர்க்கு ஒரு முக்கிய பாடமாக வைத்திருக்கின்றனர். பள்ளிக்கூட விடுமுறைக்



காலத்தில் அந் நாடுகளின் மாணவர் முடிந்தவரையில் நெடுந் தூரஞ் சென்று சுற்றிப் பார்த்து வருகின்றனர். நம் நாட்டிலும் மாணவர்கட்கு இவ் வசதி வேண்டும். இது பெற்றோர்கள் கவனித்துச் செய்ய வேண்டிய காரியமாகும். எனினும் மாணவர்கள் ஊர் சுற்றிப் பார்ப்பதில் ஊக்கங்கொள்வாராக.

## செயலில் வேண்டும்

கடைசியாக நான் வற்புறுத்தும் விஷயமொன்றே உண்டு. உத்தியோகம் பெறுவதுதான் கல்வி பெற்றதன் பயன் என்பது தற்கால மாணவருடைய கொள்கையாக இருக்கின்றது. துரைத்தன உத்தியோகந்தான் மேன்மையானதென்ற அபிப்பிராயம் பரவி விட்டது. உத்தியோகமென்பது சேவகா விர்த்தி என்றும், அதமத் தொழிலென்றும் அவர்கள் கருதுவதே இல்லை. தவிர, எல்லோரும் உத்தியோகம் பெறும் நோக்கத்தோடிருப்பதாலேயே எங்கும் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகமாகி வருகின்றது. மாணவர்கள் வர்த்தகம், கைத்தொழில் முதலிய சுயாதீனத் தொழில்களே கண்ணியமும் செல்வமும் அளிக்கத் தக்கவை என்பதை இனியேனும் உணர வேண்டும்; 'கோழி மேய்த்தாலும் கும்பேனிக் கோழியாக இருக்க வேண்டும்' என்ற அடிமை எண்ணத்தை ஒழித்து, 'கோழி மேய்த்தாலும் நம் கோழியாக இருக்க வேண்டும்' என்ற உரிமை உணர்ச்சி பெற வேண்டும்.

இதுவரை யான் எழுதிய யாவும் மாணவருலகத்தின் எதிர்கால நலத்திற்கும், தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதவை என்பதை மறுபடியும் வற்புறுத்துகின்றேன். எதையும் படித்ததாற் பயனில்லை, படித்ததைச் சிந்தித்துச் செயலில் காட்டாதவரையில் அவ்வளவும் வீண்தான். எனவே, மாணவர்காள்! இனியேனும் விழிப்படைந்து மேலே படித்தவை யனைத்தையும் நினைத்து செயலில் வேண்டுவன செய்வீராக. அன்னை பாரதி உங்களை ஆசீர்வதிப்பாராக.

# "பாரதி"யின் குறுக்கெழுத்து பந்தனம்.

நிர். 1.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❀ | ❀ | 1 | 2 | 3 | ❀ | ❀ | ❀ | 4 | 5 | 6 | ❀ | ❀ |
| ❀ | 7 | | | | 8 | ❀ | 9 | | | | 10 | ❀ |
| 11 | | | | ❀ | 12 | 13 | | ❀ | 14 | | | 15 |
| 16 | | | ❀ | 17 | | | | 18 | ❀ | | | |
| | | ❀ | 19 | ❀ | 20 | | | ❀ | 21 | ❀ | 22 | |
| ❀ | | 23 | | 24 | | ❀ | 25 | 26 | | 27 | | ❀ |
| ❀ | ❀ | 28 | | | ❀ | ❀ | ❀ | 29 | | | ❀ | ❀ |
| ❀ | 30 | | | | 31 | ❀ | 32 | | | | 33 | ❀ |
| 34 | | ❀ | | ❀ | | 35 | | ❀ | | ❀ | 36 | 37 |
| 38 | | 39 | ❀ | 40 | | | | | ❀ | 41 | | |
| | | | 42 | ❀ | 43 | | | ❀ | 44 | | | |
| ❀ | 45 | | | 46 | | ❀ | | 47 | | | | ❀ |
| ❀ | ❀ | 48 | | | ❀ | ❀ | ❀ | 49 | | | ❀ | ❀ |

## இடமிருந்து வலம்.

1. அட்டயோகத் தொன்று, 4. விரதம், 7. இரும்பைப் பொன்னாக்குவோன், 9. ஓர் தமிழ்ப் பத்திரிகை, 10. இடியேறு, 11. விஜயன் புத்திரன், 14. அச்சம், 16. பெருகும், 17 வெறுப்பு, 20. தீமை, 22. புது மணம், 25. சரஸ்வதி, 28. பேய், 29. வளார், 34. இனிமை, 36. சுவை, 38 உரிமை, 40. பாண்டு மைந்தன், 41. ஒழிய, 43. சூரியன், 44. ஐங்கிலத்தொன்று, 45. அகந்தை, 48. சிள் வண்டு, 49. நுழையும்.

## மேலிருந்து கீழ்.

1. இனிய குணம், 2. மதி, 3. பகல், 4. குன்றல், 5. துட்டை, 6. புளிய மரம், 7. எலுமிச்சை, 8. ஓர் நட்சத்திர நாள், 10. விமலை, 11. நாணல், 13. அழகு, 15 கள்ளி, 18. மலடி, 19. தென்னிந்தியாவில் ஓர் பிரதான நகரம், 21. இலக்குமி, 23. மங்களம், 24. கள், 26. ஒரிருடி, 27. தணியாக் கோபம், 30. வங்கநாட்டு மாபெருந் தேசியத் தலைவர், 31. பழங்கதை, 32. விட்டுணு, 33. இரண்டு மாதிரி, 34. நன்மை, 35. பார்வதி, 37. தலை, 39. திரண்ட தன்மை, 41. அறம், 42. குடிசை, 44 சலதாரை, 46 சனி, 47. உடல்.

விடைகளை ஏற்றுக்கொள்ளும் கடாசி நாள்: ஆனிமீ 25உ (7-7-32)

இக் குறுக்கெழுத்து பந்தனத்திற்கு பிழையிலாது சரியான விடையனுப்புவோருக்கு, "பாரதி"யின் 1930 & 1931 ஆகிய இரண்டு வரு



டங்களின் நேர்த்தியான காலிகோ-கில்ட்-பைண்ட் வால்யம் இரண்டு பரிசு கொடுக்கப்படும். அல்லது 2 வருடங்களுக்குப் "பாரதி"யை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். இவ்விரண்டும் பிரியமில்லாவிடில் நமது பிரசுரங்களில் விரும்புவதையேனும் பெற்றுக்கொள்ளலாம்.

விடையனுப்புவோர் கவனிக்கவேண்டிய சில விதிகள்:

1. இந்த பந்தனத்திலுள்ள கட்டங்களைப் போலவே ஓர் காகிதத்தில் வரைந்துகொண்டு, அதில் விடையைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும்.
2. விடை அனுப்பும் ஒவ்வொருவரும் அதனோடு காலணாத் தபால் ஸ்டாம்பு அனுப்புதல் வேண்டும். ஒருவரே பல விடைகள் அனுப்ப முயலலாம். ஆனால், விடைகள் ஒவ்வொன்றுக்கும் 4 அணு ஸ்டாம்பு அனுப்பிவிடவேண்டும்.
3. விடைகள் எமது காரியாலயத்திற்கு வரும் ஆனிமீ 25உ (7—7—32)-க்குள் வந்து சேர்ந்துவிடவேண்டும்.
4. வந்த விடைகளனைத்திலும் சரியானதாகத் தோன்றும் ஒன்றினையே பரிசுபெறத் தக்கதென மதித்து, அதை அனுப்பியவருக்குக் குறிப்பிட்டிருக்கும் பரிசுகளில் விரும்பியதை அனுப்பிவைக்கப்படும். சரியான விடைகள் ஒன்றுக்கு மேற்படுமாயின், விடை யனுப்பியவர்களின் பெயர்களைத் திருவுளச் சீட்டின்மூலம் தேர்ந்து, அதினின்று வரும் முதற் பெயர்தாருக்கே பரிசு வழங்கப்படும். சரியான விடையனுப்பிய மற்றவர்களுக்கு நமது சுதந்திரப் பிரசுரத்தின் பிரதியிலொன்றினை அனுப்பி வைக்கப்படும்.
5. விடையின் நேர்மையும், மற்ற விஷயங்களையும் பற்றி, பொறுப்பாசிரியர் செய்கின்ற தீர்மானமே முடிவானது.
6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம். ஆனால் ஒன்று; பந்தனத்தில் கலந்துகொள்ள, இத்துடன் பந்தனக் கூப்பன் தனியாக அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருக்கிறது. விடையுடன் அதனையும் பூர்த்திசெய்து 4 அணு ஸ்டாம்பு வைத்து அனுப்பினாலன்றி போட்டியில் கலந்துகொள்ளும் உரிமையாளராகார்.
7. விடைகள், பெயர், விலாசம், பரிசின் விருப்பம் முதலியன தெளிவாக எழுதப்படல் வேண்டும். விடைகளைப் பொறுப்பாசிரியர், "பாரதி," உத்தமபாளையம் என்ற விலாசத்திற்கேயனுப்பிவைக்க வேண்டும்.

குறிப்பு:- இப் பந்தனத்தை விடுவிக்க முயல்வோர் முதலில் வழியைத் தெரிந்துகொள்ள வேண்டும். பின்னர் தாமாகவே முயன்று வெற்றி பெறுவார்களாக. இதற்கு ராமநாதன் தமிழ்ப் பெயரகராதி மிகவும் உபகாரமாயிருக்கும்.

# இலங்கை அரசியல்.

## திரு. N. S. ராமசாமி ஐயர் அவர்கள்.

1

### வருமான வரி விவாதம்

எனது நண்பர் "பாரதி" ஆசிரியர் ஸ்ரீமான் ரா. நாராயணஸ்வாமி அவர்கள் என்னுடன் வேலூர் சிறையிலிருந்த காலத்து இலங்கை அரசியல் விஷயங்களைப் "பாரதி"யில் பிரசுரம் செய்ய, சில கட்டுரைகள் எழுதுமாறு கேட்டார்கள். தற்பொழுது இலங்கை வாசிகள் உள்ளத்தைக் கவர்ந்துநிற்கும் விஷயம் "புதிய வருமான வரி மசோதா" பற்றியதாகும். இது சம்பந்தமாகப் பலத்த அபிப்பிராய பேதங்களும், கண்டனக் கூட்டங்களும் நிகழ்ந்து வருகின்றன. உலகத்தில் தற்பொழுது ஏற்பட்டிருக்கும் பண முடையும், தொழிலின்மையும் இலங்கையிலும் ஏற்பட்டிருக்கின்றன. இலங்கையின் பிரஸ்தாப வருட வரவு செலவு திட்டத்தில் ரூ. 19,601,321 துண்டு விழுகின்றது. பிரஸ்தாப வருஷத்தில் எதிர் பார்க்கப்படும் வருமானம் 87,150,000. ஆனால் திட்ட செலவோ 106,751,821. இந்த நெருக்கடியான நிலையைத் தவிர்க்க சாதாரணமாக அரசாங்கம் இரண்டு முறையை அனுட்டிக்கலாம்: 1. அயல் நாடுகளிலிருந்து கடன் வாங்குவது; 2. புதிய வரி போடுவது இலங்கை அரசாங்கம் இரண்டாவது சொல்லிய முறையைக் கைக்கொள்ளவே முனைந்து நிற்கின்றது. மேற் சொன்ன இரண்டு காரணங்களைவிட மிகத் திருப்தி யளிக்கக்கூடிய மூன்றுவது காரணமுமிருப்பதால், அதுபற்றியே இக் கட்டுரையில் எழுத விரும்புகிறேன்.

உலகத்தில் ஏற்பட்டுள்ள பணமுடையின் காரணமாகப் பலர் தங்களுடைய அத்யாவசியமான விஷயங்களை கூடுமானவரை குறைத்து வருகின்றார்கள். அரசாங்கம் நடைபெற புதிய வரி போட்டுத்தான் ஆகவேண்டுமென்ற நிலையில் இலங்கை அரசாங்கம் இருக்கவில்லை. இலங்கையின் முக்கிய பொருள்கள், 1. தேயிலை, 2. ரப்பர், 3. தென்னை. இம் மூன்று பொருள்களும் மிக மிகக் குறைந்த விலைக்கு வந்துவிட்டன. உள்ள தோட்டங்களைப் பரிபாலிக்கவும், தொழிலாளர்களைக் காப்பாற்றக்கூடிய நிலையில் முத



லாழிமார்கள் இருக்கவில்லை யென்பதும் வெள்ளிடை மலை. இலங்கையில் வரவு செலவு திட்டத்தை நேர்படுத்த சாத்தியமான எல்லா முறைகளையும் அனுட்டித்துப் பார்த்த பின்னரே, புதிய வரி விதித்தல் வேண்டும். இதுவே ஜனநாயக அரசாங்கங்களில் அனுட்டிக்கப்பட்டு வரும் முறையாகும். இலங்கை அரசாங்க வரவு செலவு திட்டத்தை நேர்படுத்த வருமான வரியைவிட மிக மிகச் சாத்தியமானதும், துண்டு விழுந்த பணத்தை ஈடு செய்யக் கூடியதுமான முறை, கொழுத்த சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தைக் குறைப்பதும், அனாவசியமான இலாக்காக்களை எடுத்துவிடுவதுமாகும். இதுபற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

உலகத்திலுள்ள எல்லா நாகரீக தேசங்களிலும் தற்பொழுது ஏற்பட்டுள்ள பண முடையின் காரணமாக 100-க்கு 20 வீதம் உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தைக் குறைத்து வருகின்றார்கள். இலங்கை சுபீட்சமாக இருந்த காலத்தில் உத்தியோகஸ்தர்கள் பெற்றுவந்த சம்பளத்தையே தற்பொழுதும் பெற்று வருகிறார்கள். பிரஸ்தாப வரவு-செலவு திட்டத்தில் உத்தியோகஸ்தர்கள் சம்பளத்திற்காக ரூ. 42,620,794 ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட அரைவாசியை ஊழிய வர்க்கம் விழுங்கிவிடுகின்றது. தற்பொழுது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம்: 1. இலங்கை அரசாங்கத்தை நடத்த எவ்வளவு உத்தியோகஸ்தர்கள் வேண்டும்? 2. ஒரு இலாகா திறம்பட நடைபெறுவதற்கு அதிக உத்தியோகஸ்தர்கள் அவசியமா? 3. இவர்களுக்கு நியாயமாகக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளம் எவ்வளவு? அரசாங்கம் சிக்கன முறையைக் கையாளுவதாகச் சொல்லி இந்த மூலையில் இரண்டு சேவகர்களையும் அந்த மூலையில் நான்கு குமாஸ்தாக்களையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டு திருப்தியடைந்துவிடுகின்றது. இப்படிப்பட்ட சிக்கன முறையில் இத்தீவிற்கு யாதாமொரு நன்மையும் ஏற்படப் போவதில்லை.

இலங்கை அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு பவுன், ஷிலிங் கணக்கிலேயே சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் நாணயம் ரூபாயாக விருக்கும்பொழுது பவுன் மூலியமாகச் சம்பளம் கொடுக்கவேண்டிய அவசியமென்ன? இப்படிச் சம்பளம் போவதனால், இலங்கை அரசாங்கத்திற்கு வருடம் ஒன்றுக்கு இருபத்தியைந்து லட்ச ரூபாய்க்கு மேல் நஷ்ட மேற்படுகின்றது. நாணயச் செலாமணித் திட்டப்படி ஒரு பவுனின் தற்காலப் பெறுமதி ரூ. 13½யாகும். உத்தியோகஸ்தர்கள் சம்பளம் பவுனுக்கு

ரூ. 15/– வீதம் கொடுக்கப்படுகின்றது. பவுன் ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஐம்பது சதம் (ஒன்றரை ரூபா)மாக வரி கொடுப்போர்கள் நஷ்டமடைகின்றார்கள். இலங்கை உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் ரூபாயாக நிர்ணயிக்கப்படாத வரையில் இலங்கை வரி கொடுப்போர்களை அரசாங்கம் ஏமாற்றி வருவதாகவே அரசியல் வாதிகள் எண்ணவேண்டி யிருக்கிறது.

அரசாங்க உத்தியோகஸ்தர்களின் பிரயாணச் செலவுக்காக 35 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதில் வேலை மாற்றத்தின்போது உத்தியோகஸ்தர்களின் பிரயாணச் செலவுக்காக ரூ. 50,000 ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஐரோப்பா பிரயாணச் செலவுக்காக 4 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட் டிருக்கின்றது. ஓய்வு காலங்களில் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் பிரயாணச் செலவை உத்தேசித்து 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எஞ்சிய தொகை பிரயாணப் படியாகும். இது விஷயத்தை நன்கு பரிசீலனை செய்பவர்களுக்கு மேற்சொல்லிய 35 லட்சத்தில் 20 லட்ச ரூபாய் அனாவசியமாக வீணாக்கப்படுவது நன்கு புலனாகும்.

இலங்கை விவசாய இலாகா வருடம் ஒன்றுக்கு 9½ லட்ச ரூபாய் செலவழிக்கின்றது. இதில் 6 லட்ச ரூபாய் உத்தியோகஸ்தர்கள் சம்பளமாகும். பூச்செடித் தோட்டங்களுக்காக ரூ. 32,840 செலவழிக்கப் படுகின்றது. இதனால் கிடைக்கும் வருமானம் ரூ. 8,297. விவசாயப் பள்ளிக்கூடங்களுக்காக ரூ. 27,000 செலவழிக்கப்படுகின்றது. இதனால் கிடைக்கும் வருமானம் ரூ. 13,248. மாதிரிப் பண்ணைகள் ஸ்தாபிப்பதிலும் அதையொட்டிய வகைகளிலும் ரூ. 99,000 செலவழிக்கப்படுகின்றது. இதனால் கிடைக்கும் வருமானம் ரூ. 31,977. நெல் சாகுபடி யபிவிருத்தி விஷயமாக ரூ. 42,000 செலவழிக்கப்படுகின்றது. பருத்தி சாகுபடி யபிவிருத்தி விஷயமாக ரூ. 23,000. பின் சொன்ன இரண்டு இனங்களிலும் யாதொரு வருமானமும் கிடையாது. இந்த இலாகா அரசாங்கத்திற்குப் பெரும் பாரமாகவும், நஷ்டத்தை யுண்டாக்கிக்கொண்டுமிருக்கின்றது. இந்த விவசாய இலாகா யிருப்பதினால் கால்நடைகள் அபிவிருத்தியடைந்துவிட்டதா? நெல் சாகுபடி நல்ல முறைக்கு வந்துவிட்டதா? சுருங்கச் சொல்லுமிடத்து இந்த விவசாய இலாகாவானது, வரி கொடுப்போருடைய பணத்தை விழுங்கிக்கொண்டுதானிருக்கின்றது.

மிருக வைத்திய இலாகாவிற்கு ரூ. 134,550 செலவழிக்கப்படுகின்றது. இந்த இலாகா உத்தியோகஸ்தர்கள் பிரயாணத்திற்கு ரூ. 30,000 அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. இந்த இலாகா யிருப்பதனால் கால்நடைகள் யாதொரு அபிவிருத்தியும் அடையவில்லை. மாட்டு வியாதி (Rinderpest) வருடத்தில் ஆயிரக்கணக்கில் கால்நடைகளை யமபுரிக்கு அனுப்பிக்கொண்டுதானிருக்கிறது. கண்காட்சிசாலைக்கு பொருட்கள் வாங்குவதற்கு 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. தற்கால நிலையை உத்தேசித்து ஒரு வருடம் காட்சிப் பொருள்கள் வாங்காவிட்டால் எந்த வகையிலும் அரசாங்கம் பாதிக்கப்படப்போவதில்லை. பட்டாளத்திற்கு ரூ. 1,044,216 அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. ரூ. 142,500 இவர்கள் பிரயாணச் செலவிற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. கவர்னர் மாளிகைக்கு மரச் சாமான்கள் வாங்குவதற்காக ரூ. 22,500 அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. சுங்க வரி இலாகாவிற்கும், போலீசுக்கும் சேர்ந்து ரூ. 1,118,584 அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. இது தவிர இந்த இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு வெகுமதிகளும் அளிக்கப்படுகின்றன. வரி கொடுப்போர்கள் பணம் வீணாக்கப்படுவதைக் கண்டிக்க இலங்கை வாசிகளுக்குப் பூரண சுதந்திரமுண்டு. இலங்கையில் புதிதாக வருமான வரி போடுவதைவிட சிக்கன முறையைக் கையாளுவதே சாலச் சிறந்த மார்க்கமாகும். இலங்கையில் வருமான வரி போடுவதனால் ஒரு கோடியே ஐம்பது லட்ச ரூபாய் கிடைக்கக்கூடுமென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. வருமான வரி சம்பந்தமாக ஆராய்ச்சிசெய்த நிபுணர் தேயிலைக்குச் சராசரி விலை 85 சதமாகவும் ரப்பர் 52 சதமாகவும் வைத்துத் திட்டம் தயார்செய்தார். கொப்ராவுக்கு பாரம் ரூ. 64 வைத்தும் திட்டம் தயார்செய்தார். இன்று மேற்சொன்ன பொருள்களின் விலையென்ன? தேயிலை ராத்தல் சராசரி 60 சதம். ரப்பர் மிகமிகக் குறைந்துபோய்விட்டது. கொப்ராவும் சராசரி பாரம் ரூ. 35-க்கு வந்துவிட்டது. தற்பொழுதுள்ள விலைவாசிகளுக்கு வருமான வரித் திட்டத்தை எடுப்போமானால் எட்டு லட்சம் வருவதும் கஷ்டம். துண்டு விழும் தொகையில் 8 லட்சம் போக ஒரு கோடியே தொண்ணூறு லட்சம் துண்டுவிழும். இதற்கு வருமான வரியை அதிகம் உயர்த்தித் தனி மனிதர்களின் வருமானத்தையெல்லாம் வரியாக வாங்குவதா?

வருமான வரியை சிபார்சுசெய்த நிபுணர் மிஸ்டர் ஹக்ஸ்ஹேம் வருமான வரி இலாகாவிற்கு 6 லட்சம் செலவு பிடிக்குமென சிபார்சு செய்திருக்கிறார். வருமான வரி விதித்து உத்தியோகஸ்தர்களுக்குக் கொழுத்த சம்பளம் கொடுக்க முடியுமே தவிர, வரவு செலவுத் திட்டத்தை ஒருபோதும் நேர்படுத்த முடியாது. ஆகையினால் சிலாக்கியமான வழியைத்தான் பின்பற்றவேண்டும். அதனைச் செய்ய இலங்கை சர்க்கார் முன்வருமா?

---

# "பாரதி"யின் விகட வகுத்தல்

நிர். 1.

```
பங்கு) குராங்குகுருதி (திங்ரும்ப
       பங்கு
       -----
       குன்றகு
       ருன்ம்ரு
       -------
           றரகு
           றப்ப
           ----
            ருப்ருதி
            தின்ங்ன்
            --------
              பரப்
              ====
```

வெறும் எழுத்துக்களா லாக்கப்பெற்றிருக்கும் இவ் வகுத்தல் சிறிது கஷ்டத்தையே விளைவிக்கும். பத்து வெவ்வேறு தனி யெழுத்துக்கள்கொண்ட ஒரு வார்த்தையின் முதலெழுத்திலிருந்து கடைசி யெழுத்து முடிய 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0 என விலையிடப் பெற்று, அதே இலக்கங்களுக்குச் சரியான எழுத்துக்களால், இவ் வகுத்தல் கணக்கு தரப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒவ்வொரு எழுத்துக்களின் இலக்கங்களை மதித்து வார்த்தையைக் கண்டுபிடிக்க வேண்டும். உதாரணமாக, "தி," என்பது நிச்சயமாக "1," ஆக வேண்டும். ஏனென்றால் முதற்படியில் "பங்கு × தி = பங்கு" என வந்திருப்பதே யாகும்

## விடையும் வழியும் வேண்டும்.

விடைகளை ஏற்றுக்கொள்ளும் கடாசி நாள்: ஆனிமீ 25உ (7–7–32).

நிபந்தனைகள்: 'பாரதி'யின் குறுக்கெழுத்து பந்தனத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளே இதற்குமாகும். ஒருவரே பந்தனத்திற்கும் விகட வகுத்தலுக்கும் விடை தர முயலலாம். விடை ஒவ்வொன்றுக்கும் 4 அணு ஸ்டாம்பு வைத்தனுப்ப வேண்டும். பந்தனத்தில் கூறப்பெற்றவரே இதற்கும் பரிசு கொடுக்கப்படுகிறது.

---

# சீனக் குடியரசின் வரலாறு.

திரு. O. P. தேசிகன் அவர்கள்.

## சீனர்களின் சுதந்திரப் போராட்டம்.

இற்றைக்குச் சற்றேறக்குறைய இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன், கீழ்த்திசை நாடுகளிலே விஸ்தீரணத்திலும், ஜனத் தொகையிலும் மிகச் சிறிய ஜப்பான் தேசமானது, ஐரோப்பாக் கண்டத்தின் வல்லரசுகளில் நிலப் பரப்பிலும், செல்வாக்கிலும், ஆட் பலத்திலும், ராணுவத் திமிரிலும் சிறந்து விளங்கிய ருஷ்யா தேசத்தை யுத்தத்தில் முறியடித்தது உலக சரித்திரத்திலே என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் பெருத்ததோர் நிகழ்ச்சியாகும். இச் சம்பவமானது ஆசியா கண்டம் முழுவதையும் திடுக்கிடச் செய்ததுமன்றி, மின்சார சக்தி போன்ற உணர்ச்சியையும், ஆவேசத்தையும் மக்களின் மனதிலே மூட்டிவிட்டது. ஆசியா கண்டத்திலுள்ள நாடுகளனைத்தும் தமது நெடுங்காலத் துயிலினின்றும் விழிப்படைந்து, அம் மாறுதல் உணர்ச்சியின் தன்மைக்கும், சக்திக்குமேற்ப சுதந்திர வேட்கையுடனும், சுயேச்சை யார்வத்துடனும் துடிக்கலாயின. துருக்கியில் 'வாலிபத் துருக்கி' இயக்கத்தின் தோற்றமும், சுல்தான் அப்துல் ஹமீது அந் நாட்டு சுல்தான் பதவியினின்றும் விலக நேர்ந்ததும், பெர்ஸிய நாட்டு ஷா அரசர் நாடு கடத்தப்பட்டதும் அத் தீவிர உணர்ச்சியின் வெளிப்படையான சின்னங்களேயாம். நமது தாய் நாடான இந்தியாவிலோ, 'சுதேசி இயக்கமும்,' ஸ்வராஜ்ய கோஷமும் மக்களிடையே தோன்றுவதற்குக்கூட அந்தப் பரந்த உணர்ச்சியின் உத்வேகமே முக்கியத் தூண்டுதலாக யிரா நின்றதெனக் கூறப்படுகிறது. ஆனால் இவ் வுலகத்திலே சிறந்த அரசியல் ஞானமும், தீர்க்க திருஷ்டியும் படைத்தவராகக் கருதப்படும் உயர்ந்த அறிவாளிகளேனும்—ஏன் சீன தேசத்திலேயே வசித்துவந் திருப்பவர்கள்கூட அத் தேசத்தில் இந்த சக்தியின் போக்கு மகத்தான ஓர் புரட்சி இயக்கமென்னும், சுழற் காற்றாக முற்றி அந் நாட்டில் முடியரசை வேரோடு வீழ்த்தி முடிவில் நவீன ஜனநாயகக் கொள்கைகளுக்கு இடங் கொடுக்கக்கூடிய குடியரசு அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கு, அடிப்படையான காரணமாயிருக்கக் கூடு மென்பதைக் கனவிலும் கருதியிருக்க முடியாது.

"உதய சூரியனின் ராஜ்ய"மெனப் பெயர் வாய்ந்த சிறிய ஜப்பான் தீவினரின் எழுச்சியைக் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கும் சீன தேசத்தினர், தமக்கு அடுத்தாப்போலிருக்கும் அச் சிறிய நாடு தனது அபாரமான சக்தியினால், பிரம்மாண்டமான ருஷ்யா தேசத்தையே வெல்லக் கூடுமானால், தாமும் தமது பரந்த நாட்டை நவீன முறைகளில் சீர்திருத்தி ஒழுங்காகப் புனருத்தாரணம் செய்யும் பக்ஷத்தில், அதன் பயனாக அயல் நாட்டினரின் கண்காணிப்பையும், எதிர்ப்பையும், நிர்ப்பந்தங்களையும் தாங்கி நிற்க இயலுமாயின், தாமும் சுயேச்சை வாய்ந்த நாடுகளிலொன்றாக இருப்பது மட்டுமேயன்றி, மிகப் பெரிய வல்லரசு நாடுகளில் ஒன்றாக அவற்றின் முன்னணியில் வீற்றிருப்பதும் ஸாத்யமாகும் என்று உறுதியாக நம்புவதற்குத் தலைப்பட்டனர். ஆனால் அவ் வமயம் அவர்களுடைய நாடு திருப்திகரமாக ஆட்சி செய்யப்படவில்லை. அரசுரிமை வகித்திருந்த மஞ்சு வமிசத்தினரோ குடிகளின் நன்மையை நாடவில்லை; அன்னிய நாடுகளுக்குத் தமது தேசத்தில் சலுகைகளையும், உரிமைகளையும் அளித்தனர். ஏராளமான தொகையை அயல் நாடுகளில் கடன் வாங்குவதற்கு யத்தனம் செய்து கொண்டிருந்தனர். உள்நாட்டு நிர்வாகம் மிக்க சீர்கேடடைந்திருந்தது. குழப்பமும் கலவரங்களும் தினசரி சகஜமாய்விட்டன.

சீன தேசத்தின் நிலப் பரப்பையும், ஜனத் தொகையையும் உத்தேசிக்கையில் அது இவ் விரண்டு இனங்களிலும் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களைப்போல் நான்கு மடங்கு அதிகமானது. உண்மையில் இவ் வுலகத்தில் மிகுந்த ஜனத்தொகை யுள்ளது சீனா தேசமேயாம். அந் நாட்டின் குடிமக்கள் ஐந்து வகுப்பு அல்லது இனத்திலடங்குவர். அவர்கள் மஞ்சுக்கள், சீனர், மங்கோலியர், மஹம்மதியர், திபேத்தியர் ஆகியவர்களே. உலகிலுள்ள வேறு எந்த நாட்டையும்விட சீன மக்கள் பாஷையிலும், ஜாதியிலும், மதப் பழக்க வழக்கங்களிலும் மிகவும் ஒற்றுமை வாய்ந்தவராக யிருப்பதைக் காணலாம். சீனர்களின் பரம்பரையைச் சேர்ந்தவரல்லாத மஞ்சுக்கள் அந் நாட்டு ஆதி மக்களுடன் கொள்வினை, கொடுப்பினை செய்து வந்ததன் பயனாகத் தமது முக்கியத் தன்மையையே இழந்துவிட்டனர். மஹம்மதியர்கள் தொகையில் மிகவும் குறைந்த வகுப்பினரா யிருப்பதால், நாட்டின் அமைதிக் காவது சாவதானத்திற்காவது அவர்களால் யாதொரு பங்கமும் ஏற்பட நியாயமில்லை. மங்கோலியாவும், திபேத்தும் சட்டபூர்வமாகத் தனி மாகாணங்களாகப் பிரிவினை செய்யப்பட்டிருந்ததால், அவைகளைப் பற்றிய கவலை யுண்டாகவும் காரணமில்லை. ஆதலின் சீன தேசத்தைப் பற்பல அரசியல் மாகாணங்களாகப் பிரிவினை செய்து, அவைகளனைத்தையும் ஓர் மத்திய சர்க்காருடன் இணைத்து விடுவது பாஷையாலும், ஜாதியாலும், மதத்தாலும் வேறுபட்டு மிக்க சிக்கலான



பிரச்னைகளுக்கிடங் கொடுக்கக்கூடிய இந்தியாவைப் போல் கஷ்டமான வேலையன்று.

மஞ்சு வமிசத்தரசர்களது தலைமையின் கீழ் சீன தேசத்தின் நிர்வாகம் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகார வர்க்கத்தினரால் நடைபெற்று வந்தது. ஆனால் ஜாதி, மத வகுப்பு அந்தஸ்து பேதமின்றி தெரிந்தெடுக்கப்பட்ட இவ் வதிகாரிகள் தம்முடைய திறமையின் காரணமாகப் பதவி வகித்து வந்த அரசாங்க ஊழியர்கள், பொது ஜன உணர்ச்சியை மதியாமல் அரசியல் நடத்தியது அந் நாட்டின் துர்பாக்கியமே யாகும். அவர்கள் தம்மை ஊழியர்களாகக் கருதாமல் யஜமானர்களாகக் கருதி இறுமாப்பெய்தி யிருந்தனர். ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கு மிடையில் நாளடைவில் அதிருப்தியும், வெறுப்பும் தோன்றி வளர்ச்சி யடைந்து வந்தது. அன்றியும் சீன தேச சரித்திரத்தில் பெரும்பாலும் மன்னர்கள் பலவீனர்களாகவேனும் அல்லது மதியற்றவர்களாகவேனும் அல்லது திமிர்படைத்த கொடுங்கோன் மன்னர்களாகவேனும் இருந்து வந்தனர். தர்மத்தையும் நியாயத்தையும் அனுசரித்து நிர்வாகம் நடைபெறாது அரசாங்க அதிபதிகளின் இச்சையைத் தழுவியே நடத்தப்பட்டது. ஆதலின் இவ் விழி நிலையினின்றும் தங்களை உயர்த்தி, உலகத்தாரின் மதிப்பில் தங்களை முன்னேற்ற மடைந்தவர்களாகக் கருதுமாறு சீன தேசத்தை முன்னணிக்குத் கொண்டுவர வேண்டு மென்றும், அந் நோக்கத்தை ஈடேற்றுவதற்கு அந் நாட்டு அரசாங்கத்தையே அடியோடு தகர்த்தெறிய வேண்டுமென்றும் சீன தேச வாலிபர்களும், மாபெருந் தலைவர்களும் தீர்மானித்தது ஆச்சரியமான செய்கையன்று.

கி. பி. 1688-ம் ஆண்டில் ஆங்கிலேய மக்கள் தமது "உரிமைச் சாஸனத்தை" (Declaration of Rights) வரைந்தனர்; 1776-ம் வருடத்தில் ஜெபர்ஸன் என்னும் அறிஞர் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் "ஸ்வாதீன அறிக்கையின்" (Declaration of Independence) விதிகளை வகுத்தார்; பிரான்சு தேசத்தில் "நேஷனல் அஸெம்ப்ளி" என்னும் தேசீய மஹா சபையார், 1789-ம் வருட வாக்கில் "மனிதன் உரிமைகள்" (Rights of man) என்ற அரிய சாஸனத்தை உலகத்திற்குப் பிரகடனம் செய்தனர்.

ஆனால் 1912-ம் வருஷம் ஜனவரிமீ 5உ ஸன்யாட்ஸென் என்ற சீனத் தலைவர், நான்கிங் நகரத்திலிருந்து சீன தேசத்தின் தாத்காலீகக் குடியரசின் ஜனாதிபதி என்ற முறையில் நவீன ஆசியாவில் ஜன நாயக ஆட்சியின் விஜயத்தை—வெற்றியை—முதன்முதலாக அறிவிக்கும் விளம்பரச் செய்தி யொன்றை நாகரீக உலகிற்குப் பறை யறிவித்தார்.

சீனக் குடியரசு ஏற்படுமுன், புரட்சியை விளைவித்தவர்கள் எம்மாதிரிப் போராட வேண்டி நேரிட்டதென்றும், அப் போராட்டத்தின் வரலாற்றையும் போக்கையும் எடுத்து எழுதுவதற்கு இச் சிறிய வியாசம் இடந் தராது. ஆனால், புரட்சியின் முடிவு ஜன சக்தியின் வெற்றியையே ஊர்ஜிதப்படுத்தி யிருப்பதால், தமிழ் நாட்டிலுள்ள நமது நேயர்களும், வாலிபர்களும் அறிய வேண்டி, அவ் விளம்பரத்தைப் பூராவும் மொழிபெயர்த்து ஈண்டு வெளியிடுகிறோம்.

"நேசப்பான்மையுள்ள எல்லா நாடுகளுக்கும்:— வணக்கம். இதுகாறும் தனிப்பட்ட நபர்களின் குறைகுணங்களையும், ஜனங்களின் தேசிய அபிலாஷைகளையும் பரிகரிக்க முடியாத அளவிற்கு ஒடுக்கியதன் காரணமாக, சீன தேயத்தாரின் அறிவு, ஒழுக்கம், பொருளாதார அபிவிருத்தி இவை யனைத்தும் பெரிதும் தடைப்படுத்தப்பட் டிருப்பதால், இவற்றிற்கு மூலாதாரமான காரணத்தை யொழித்துத் துவம்சம் செய்வதன் பொருட்டு புரட்சி இயக்கத்தின் உதவியானது நாடப்பட்டது. அதன் முடிவாக இப்பொழுது நாம், "மஞ்சு வமிசத்தரசர்களின்" கொடுங்கோன்மையான ஆட்சி முறை வீழ்ச்சி யடைந்திருப்பதையும், குடியரசு அரசாங்கம் அமைக்கப்பட் டிருப்பதையும் இதன் மூலம் பிரசித்தம் செய்கிறோம்."

"கோனாட்சிக்குப் பதிலாகக் குடியரசாட்சியாகத் தோன்றிய இம் மாறுதலானது நிலையற்றதும், சிறிது நேரத்திற்குள் மாறுதலடையக் கூடிய தாத்காலிகமான ஓர் மனோபாவத்தின் பலனன்று. ஆனால் எத்தனையோ காலமாகச் சுதந்திர வேட்கையிலும், அமைதியான வாழ்விலும், தேசீய முன்னேற்றத்திலும் பேரார்வங்கொண்ட மக்களின் நெடுங்காலக் கோரிக்கையின் இயற்கையான முடிவேயாகும்."

"அமைதியும், சாத்வீகமும் பொருந்திய சீனக் குடிமக்களாகிய நாங்கள் தற்காப்புக்காகவன்றி மற்றப்படி போர் முழக்கம் செய்ததில்லை. மிகப் பெருமையாகவும், சாவதானமாகவும் இருநூற்று அறுபத்தியேழு ஆண்டுகளாக, நாங்கள் எங்களுடைய குறைகளையும், துன்பங்களையும் சகித்து வந்திருக்கிறோம். சாத்வீகமான நெறிகளில் எமது குறைகளை யகற்றவும், சுதந்திரத்தை நிலைநாட்டவும், முற்போக்கை யடையவும் நாங்கள் இடைவிடாமல் செய்த முயற்சிகள் யாவும் வீணாயின."

"மனித சக்தியாலும் சகித்தற்கரிய கொடுங்கோன்மையின் வயப்பட்டிருப்பதால், நாங்கள் எங்களையும், எங்களுடைய பிற்கால சந்ததியாரையும் இத்தனைக் காலமாக உட்படுத்தப்பட்டிருக்கும் அடிமை வாழ்க்கையின் பந்தத்தினின்றும் விடுவிப்பதற்கு ஆயுத பலத்தின்



உதவியை நாடுவதொன்றே எங்களது மறுக்கவொண்ணாப் பிறப்புரிமையும், மிகப் புனிதமான மதக் கடமையுமாகுமென்றும் முடிவாகக் கருதினோம். அதன்பயனாகச் சரித்திலேயே முதன்முதலாக மிகவும் இழிவான அடிமை வாழ்க்கையானது, புகழ்ச்சிக்குரிய சுயேச்சையாக மாறுதலை யடைந்துள்ளது. மஞ்சு அரசர்களது ஆட்சியின் நோக்கம் ஒருவர்க்கும் இணங்காத கொடுங்கோன்மை பொருந்தியதாகவே யிருந்து வந்துள்ளது. அவ் வாட்சியின் கீழ் நாங்கள் அனுபவித்திருக்கும் இன்னல்கள் கணக்கிலடங்கா."

"இப்பொழுது உலகத்திலே சுயேச்சை பெற்று வாழும் மக்களின் முன்பாக எங்கள் தேசத்தில் புரட்சி யியக்கம் தோன்றியதன் நியாயத்தையும் தாத்காலிக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் காரணத்தையும் நாங்கள் ஸமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளோம்."

"இந் நாட்டின் ஆட்சியுரிமையை மஞ்சு அரசர்கள் துராக்கிருதமாக அபகரிப்பதற்கு முன்பாக நாட்டில், அன்னிய நாட்டினர் போக்குவரத்துக்கு யாதொரு கட்டுப்பாடும் இல்லை. மத விஷயங்களில் தாராள நோக்கமும், சகிப்புத் தன்மையும் காட்டப்பட்டதாக மார்க்கோ போலோ என்பவர் எழுதியிருக்கும் குறிப்புகளினின்றும், ஸிஸி—யான்—புவிலுள்ள நெஸ்டோரியன் சிலாசாஸனத்தாலும் அறியக் கிடக்கிறது. அஞ்ஞானம், சுயநலம் ஆகிய இவ்விரு தீக்குணங்களின் ஆதிக்கத்திற் குட்பட்டவர்களாய் மஞ்சு அரசர்கள் அயலகத்தார் இந் நாட்டில் நுழைய வொட்டாமல் தடை முறைகளை ஏற்படுத்தி யிருப்பதுமன்றி, சீனமக்கள் இருளடைந்த மனோபாவ முடையவர்களெனக் கருதுமாறு சீனர்களின் இயற்கைக் குணங்களுக்கு முற்றிலும் மாறானதோர் நெறியில் அவர்களை ஆழ்த்தி, அதன் மூலம் மனித வர்க்கத்திற்கும், நாகரீக வுலகத்திற்கும் விரோதமான கொடியதோர் குற்றத்தை யிழைத்திருப்பதோடு, அந்தப் பாவத்தை எளிதிலே பரிகரிப்பதை சாத்யமில்லாமலும் செய்திருக்கிறார்கள்."

"சீன மக்களை நிரந்தரமானதோர் அடிமைத்தனத்தில் வைத்திருக்க வேண்டுமென்ற துராசையாலும், சொத்துக்களையும், பொருட்களையும், செல்வத்தையும் தாங்களே ஒருமிக்க சேமித்து வைக்க வேண்டுமென்னும் துர்ப் புத்தியினால் தூண்டப்பட்டவர்களாய் மஞ்சு அரசர்கள் இந் நாட்டு மக்களது நலன்களுக்கு என்றென்றைக்கும் தீங்கிழைப்பதான மிக்க கேவலமான முறையில் ஆட்சி புரிந்து வந்துள்ளார்கள். அவர்கள் சலுகைகளையும், ஏகபோக உரிமைகளையும்

சிருஷ்டித்து தங்களைச் சுற்றிலும் அதிகார மமதை, தேசீய வழக்கம், ஆசாரம் என்னும் மூட சம்பிரதாயங்களையும் தடை முறைகளையும் ஏற்படுத்தியும், நூற்றுக் கணக்கான ஆண்டுகளாய் அவைகளை மிக்கக் கடுமையாக அமுல் நடத்தியும் வந்துள்ளனர்; அவர்கள் ஜனங்களின் சம்மதியின்றி, சட்டவிரோதமானதும் குடிகளுக்கு ஹிம்சையையுண்டுபண்ணக் கூடியதுமான வரிகளை விதித்திருக்கின்றனர். அன்னிய வியாபாரத்தைத் துறைமுகப்பட்டினங்களுக்கு மாத்திரமே அனுமதித்திருக்கின்றனர். வர்த்தகப் பொருள்கள் மீது "லிகின் தீர்வை"யை விதித்தும், உள்நாட்டு வியாபாரத்தைத் தடைசெய்தும், தேசீய முயற்சிகளை முன்னேறவொட்டாமல் தடுத்தும், உள்நாட்டின் இயற்கை வளங்களையும், பொருளாதார மூலங்களையும் அபிவிருத்தி செய்வதற்காதரவு அளியாமலும், பக்ஷபாதமற்ற நீதிபரிபாலன முறை வழங்கி வருவதற்கு ஒழுங்கானதோர் திட்டத்தையமைக்க மறுத்தும், குற்றம் சாட்டப்பட்டவர்கள்—குற்றவாளிகளாயினும், நிரபராதிகளாயினும்—மிகக் குரூரமான தண்டனைகளை விதித்தும் வந்துள்ளார்கள். அவர்கள் அதிகார வர்க்கத்தின் ஒழுங்கீனங்களுக்கு உடந்தையாதயிருந்து வந்ததுமன்றி, உத்தியோகப் பதவிகளை உயர்ந்த தொகைக்கு ஏலங்கேட்பவர்க்கு விற்றனர்; நிர்வாகத் திறமையையும், சாமர்த்தியத்தையும் செல்வாக்குக்கும், சிபார்சுகளுக்கும் தாழ்ந்ததாக உட்படுத்தினர். நல்லரசாட்சி யேற்படுத்தவேண்டுமென்ற மிதமான வேண்டுகோள்களனைத்தையும் நிராகரித்து அலட்சியம் செய்தனர்; மிகவும் வற்புறுத்தப்பட்ட பிறகு, போலிச் சீர்திருத்தமொன்றை அரை மனதுடன் 'தீராப் பொறியாக' வழங்கினர்; நிறைவேற்றும் உத்தேசமின்றி உறுதி மொழிகள் பல அளித்தனர்.

"அவர்கள், அயல்நாட்டினர் தங்களுக்குக் கற்பித்திருக்கும்—துக்கம் விளைவிக்கத்தக்க—அரிய படிப்பினையையும் உணர்ந்துகொள்ளத் தவறிவிட்டனர். ஆதலின் வருடங்கள் செல்லச் செல்ல தங்களையும் தமது நாட்டு மக்களையும் உலகத்தின் அபிப்பிராயத்தில் மிகத் தாழ்ந்தவராக நினைக்கும்வண்ணம் செய்துவிட்டனர். இந்தத் தீங்குகளுக்குப் பரிகாரம் செய்வதால் மாத்திரமே சீன தேசமானது உலக சமுதாயத்தின் குடும்பத்தில் அங்கம் பெறுவதென்பது சாத்யமாகும்."

"நாங்கள் போராடி ஓர் அரசாங்கத்தை யமைத்திருக்கிறோம். எனினும் எங்களுடைய நல்லெண்ணங்கள் வேறு விதமாகப் பொருள் படுத்தப்படக்கூடுமென அஞ்சி, நாங்கள் பகிரங்கமாகவும், யாதொரு விதிவிலக்குகளுமின்றி (பாதுகாப்புகளுமின்றி) இதனடியில் கண்டவைகளே எங்களுடைய உத்தேசமும், வாக்குறுதிகளும் ஆகுமென்பதை விளம்பரம் செய்கிறோம்."



"புரட்சிக்கு முன் மஞ்சு அரசர்களால் செய்துகொள்ளப்பட்ட உடம்படிக்கைகள் யாவும், அவை முடிவுபெறும் காலம்வரையில் அமுலிலிருந்துவரும். புரட்சி யியக்கம் துவக்கப்பட்டபின் செய்துகொள்ளப்படும் எவ்விதயான உடன்படிக்கையும் அல்லது உடன்பாடுகள் முழுவதும் அங்கீகரிக்கப்படமாட்டாது. புரட்சிக்கு முன் மஞ்சு அரசர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் அல்லது கொடுக்கவேண்டியிருக்கும் அன்னிய நாட்டுக் கடன்களும், நஷ்ட ஈடுகளும் ஒப்புக்கொள்ளப்படும். அதன் பிறகு மஞ்சுக்கள் கொடுக்கவேண்டிய நிலுவை, கடன் பத்திரங்கள் மூலமாகப் பணம் செலுத்தி யிருந்தாலும்கூட ஒப்புக்கொள்ளப்படமாட்டா. புரட்சிக்கு முன் அயல்நாடுகளுக்கும், தேயத்தினருக்கும் அளிக்கப்பட்ட சலுகைகளும், உரிமைகளும் கௌரவிக்கப்படும். அதன்பிறகு கௌரவிக்கப்படமாட்டா. குடியரசாட்சியின் எல்லைக்குள் வாழும் அயல்நாட்டினரின் உயிருக்கும், சொத்துகளுக்கும் அரசாங்கத்தின் சார்பாகப் பாதுகாப்பு அளிக்கப்படும்."

"வெகுகாலமாய்ப் புறக்கணிக்கப்பட்டிருக்கும் எமது தேசத்தின் சக்திக்கும், திறமைக்கு மியைந்ததான ஓர் தேசீயக் கூட்டத்தை நீடித்து, நிலைத்திருக்கும் தன்மையதான ஓர் பலமான அஸ்திபாரத்தின் மீது எழுப்புவிப்பதே வருங்காலத்தில் எமது தளரா முயற்சியும், லட்சியமுமாக இருக்கும். நாங்கள் ஜனங்களிடையே அமைதியும் சமாதானமும் நிலவுமாறு அவர்களுடைய நிலைமையை உயர்த்துவோம்—அவர்கள் நலத்தை நாடும் சட்டங்களை யியற்ற முயற்சி செய்வோம். எங்களுடைய விவகார எல்லைக்குள் அமைதியுடன் வாழ விரும்பும் மஞ்சு வகுப்பினர் மற்றவர்களைப்போல் சமமாக நடத்தப்பெறுவதுமன்றி பாதுகாப்பும் அளிக்கப்படுவார்கள்."

"நாங்கள், எமது சட்ட திட்டங்களைப் புதிய தோரணையில் ஒழுங்குப்படுத்தி, ஸிவில், கிரிமினல், வர்த்தக, சுரங்க விதிகளை சீர்திருத்தியமைத்து, செல்வ நிலையை சீர்ப்படுத்தி, சலுகைகளையும், பிரத்தியேக உரிமைகளையும், இதர நிர்ப்பந்தங்களையும் ஒழிப்போம். வர்த்தகப் பொருள்கள்மீதும், வியாபாரிகள்மீதும் விதிக்கப்பட்டிருக்கும் நிர்ப்பந்தங்களையும், பிரத்யேக உரிமைகளையும் அகற்றுவோம். மத விஷயங்களில் தாராள நோக்கத்துடன் நடந்துவருவதாக உறுதியளிக்கிறோம். இதுவரையி லிருந்ததுபோலன்றி அயல்நாட்டுப் பிரஜைகளுடனும், அரசாங்கங்களுடனும் நேசப்பான்மையைப் பின்னும் அதிகமாக வளர்த்துவருவோம்."

"எங்கள்பால், மிகவும் மாறாத அனுதாபத்தைக் காட்டிவரும் அன்னிய நாட்டினர் நமக்கிடையிலுள்ள ஸ்னேக பாவத்தைப் பின்னும் அதிகமாக உறுதிப்படுத்துவரென்றும், எங்களுடைய சோதனை காலத்

தில் எங்களுக்கு ஆதரவு அளித்து, சகிப்புத் தன்மை காட்டிவருவரென்றும், எங்களுடைய புனருத்தாரண முயற்சிகளை யாதரித்து உற்சாகமூட்டுவரென்றும், நாங்களும் எமது நாட்டினரும் நிறைவேற்ற வேண்டுமென்று அவர்கள் எத்தனையோ காலமாகப் பயனின்றி வற்புறுத்திவந்திருக்கும் திட்டங்களை—நாங்கள் இப்பொழுதுதான் மேற்கொண்டிருக்கும் தீர்க்க திருஷ்டியும் பயன் தரத்தக்கதுமான முயற்சிகளைப்—பூர்த்தியடையச் செய்யும் வேலைகளில் எங்களுக்குப் பேருதவி புரிவரென்பதே எமது மனப்பூர்த்தியான பிரார்த்தனையாகும்''.

''சாந்தியும், பரஸ்பர நல்லெண்ணமும் வாய்ந்த இச்செய்தியின் மூலம் சீனக் குடியரசுநாடு உலக நாடுகளின் சமுதாயத்தில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதுடன், அதனுடைய உரிமைகளையும், பாத்யங்களையும் பகிர்ந்துகொள்ள மட்டுமேயன்றி, உலகத்தின் நாகரீகத்தை நிர்மாணிக்கும் உன்னதமான கடமையை நிறைவேற்றுவதில் தன்னுடைய ஒத்துழைப்பையும் அளிக்குமாறு அனுமதிக்கப்படுமென்று எதிர்பார்க்கிறது.''

புரட்சி விளம்பரங்களின் தன்மையைப் பொதுவாகக் கவனித்துப் பார்க்குங்கால், அவை முதன் முதலில் ராஜாங்கத்தில் குழப்பத்தையும் இரத்தச் சேதத்தையும் விளைவிக்கும் புரட்சி தோன்றிய காரணங்களை விளக்கியும், அச்செயல்களுக்காக வருத்த முணர்த்தியும் இருப்பது நமக்குத் தெளிவாகப் புலப்படும். அதாவது புரட்சிக்கு முன் நிலை பெற்றிருந்த ஆட்சி முறையின் தோஷங்களையும் அட்டூழியங்களையும் மிகவும் விரிவாக வர்ணித்துக் கூறுவதுமன்றி, தாங்கள் செய்ய உத்தேசிக்கும் அலுவல்களையும், அரசாங்க சீர்திருத்தங்களையும் குறித்து வாக்குறுதிகள் பலவளித்து குடிமக்களின் கூட்டுறவையும் அனுதாபத்தையும் தங்கள் பால் திருப்புவதற்கு முயற்சி செய்வதேயாம். ஆனால், இக் காகித விளம்பரச் செய்திகளில் வர்ணித்துள்ள குற்றச்சாட்டுகளின் தன்மையும், அவற்றின் உண்மையும் வெவ்வேறாகயிருப்பினும், புரட்சியை உருப்படுத்துவதில் அவை யாதொரு நிலையான வேலையையும் செய்வதாகக் கூறமுடியாது.

புரட்சி யியக்கத்தின் கடுமையும், வேகமும் நாட்டில் ஏற்கனவே புகைந்துகொண்டிருக்கும் அதிருப்தியையும், அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் ஆற்றலுள்ள தலைவர்களின் திறமையையும், செல்வாக்கையும் அனுசரித்ததாகவேயிருக்கும். தவிரவும் ஜனங்களிடையே காணப்படும் அமைதியின்மை, அரசாங்கக் கொடுமைகள் அல்லது குடிகளுக்கிழைக்கப்படும் தீமைகள் இவற்றை யடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்பது மவசியமல்ல—உண்மையிலே அடக்குமுறையின் கொடுமைக்குட்பட்டிருந்தாலும் சரி, அல்லது அவை கற்பனையளவிலே இருந்தபோதிலும் சரி, புரட்சி யியக்கத்திற்குத் தீ மூட்டிவிடவே அவை பெரிதும் பெரிதும் பயன்படுவனவாம். புரட்சி யியக்கத்தின் கர்த்தாக்கள் ஜனங்களிடையே மறைந்து கிடக்கும் இவ்வுணர்ச்சியை மென்மேலும் தூண்டிவிட்டு, தங்களுடைய மும்முறமான பிரசார வேலைத் திறமையால் ஜன சமுதாயத்தின் ஒத்துழைப்பையும் உதவியையும் பெறுவதுடன், குறைந்த பக்ஷம் ஒரு சிறு பகுதியினரின் உதவியையேனும் தங்களது கட்சிக்குச் சாதகமாகப் பெரிதும் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆதலின் புரட்சி யியக்கத்தைத் திறம்பட நடத்தி வைப்பவர்களது அந்தஸ்தும், அவர்களது ஆற்றலும், செல்வாக்கும், பிரசார முறைகளுமே புரட்சி இயக்கங்களின் உடலும், உயிருமாக அமைந்து விளங்கும்.

ஓர் புரட்சியானது வெற்றிபெற்றால் மாத்திரமே உலக மக்களால் சிலாகிக்கப்பட்டு, கடல்களுக்கப்பாலுள்ள நாடுகளிலும் அதனுடைய மகத்துவம் புகழ்ந்து கொண்டாடப்பெறும். சீனாவிலேற்பட்ட மகத்தான புரட்சியைக் கவனிக்கும்போது மஞ்சு அரசர்களின் நிர்வாகச் சீர்கேடுகளின் போக்கு உண்மையில் எத்தன்மை வாய்ந்ததாயிருப்பினும், அதை உலகம் புகழும் கீர்த்தி பொருந்த வெற்றிகரமாக நடத்தியவர்களுக்கு அஃதோர் மகத்தான பெருமையேயாகும்.

ஆகையால் 1912-ம் வருடத்திய நான்கிங் குடியரசுச் சாஸனமானது உலக ராஜீய நூல்களில் சாசுவதமானதோர் அங்கம் பெறுவதற்குரிய தென்பதில் சிறிதும் ஐயமில்லை. அடுத்துவரும் வியாசத்தில் சீனக் குடியரசின் அமைப்பைப்பற்றி எழுதப்படும்.

---

# வைக்கம் சத்யாக்கிரக நினைவுகள்.

## திரு. அய்யாமுத்து அவர்கள்

தென்னிந்தியர் இல்லங்களை அலங்கரிப்பது ரவிவர்மாவின் சித்திரப்படங்களாகும். கம்பருடைய கவி வன்மையும், கற்பனு சக்தியும் ரவிவர்மாவின் சித்திரத்தின் முன்னீடாகா. இதிகாச புராண கதா நாயகர்களை ரவிவர்மா சித்தரித்துள்ளார். காலம், கோலம், இடம், சந்தர்ப்பம் ஆகியவற்றிற்கேற்ப, கண்ணைக் கவர்ந்து மனதைப் பரவசப் படுத்தும் வகையில் மாசற்ற சித்திரங்களை ரவி

வர்மா எழுதியுள்ளார். அவர்தம் சித்திரத்திலுள்ள உருவங்களில்
அமையப்பெற்றுள்ள முகக் குறிப்பை விஸ்தரித்து விளக்கி, ஆயிரம்
கம்பர்கள் கவிபாட வியலும். பிரகாசம் பொருந்திய அக்கண்களை
உயிருள்ள மாந்தரிடத்திலும் காணவியலாது. மக்களைப் படைப்
பிக்கும் "பிரமனாக" ரவிவர்மா பிறந்திருந்தால் உலகிலுள்ள சகல
மானிடர்களையும் "மன்மதன்" "ரதிபாதி"களைத் தோற்கடிக்கும்
வகையில் சிருஷ்டித்திருப்பார். எழில் மிகுந்த அவருடைய சித்தி
ரங்கள் "சிருஷ்டியின்" அழகை மங்கச்செய்துவிட்டதெனச் சொல்
லுதல் மிகையாகா.

ஒரு மனிதனுடைய தேர்ச்சிக்கும், திறமைக்கும், நடத்தைக்
கும் அவனைச் சூழ்ந்துள்ள இயற்கை வனப்பும், தோழர்களும்,
வாழ்வின் நிலையும், சந்தர்ப்பங்களுமே காரணமாயிருக்கிறதென்ற
நம்பிக்கையை ரவிவர்மா மெய்ப்பித்துவிட்டார். பாரதத் திருநாட்
டில் இயற்கை வனப்பனைத்தையும் ஒருங்கே ஸ்வீகரித்த ஒரு பாகத்
தைத் தேடினால், அதைத் திருவிதாங்கூரிலல்லாது வேறெங்குதான்
காணற்கியலும். உலக சஞ்சாரிகள் திருவிதாங்கூரை "இந்தியா
வின் பூங்காவனமெனப் பல்லாண்டுகட்கு முன்னரே சிறப்பித்துக்
கூறியிருக்கின்றனர். காலை யிளங்கதிரவனுடைய அழகிய தோற்
றத்தை நீங்கள் தென் குமரியிலல்லாது வேறெங்குதான் காணற்கிய
லும். குமரிமுனையில் நின்று பரந்த கடலின் அலைகள் கற்பாறை
கள்மீது மோதுங் காட்சியும், பச்சையோ, மரகதமோ, ரத்தினமோ
வென மக்கள் மயங்கி ஆவலுடன் சென்றெடுக்கும் மணல் வகை
களை அங்கல்லாது வேறெங்கு காணக்கூடும்? தரைமீது மோது
மலைகள் ஒவ்வொரு முறையும் நவநவமான மணல் வகைகளைக்
கொண்டுவந்து குவிக்கும். முத்துப் போன்றதும், மிளகுசம்பா
போன்றதும், கடுகுபோன்றதும், அவல்போன்றதுமான அநேக
வகை மணல்களை நீங்கள் அங்குக் காணலாம். மாலைக் கதிரவனின்
செஞ்சுடர்கள் கண்களை ரம்மியப்படுத்தும். ஒருவன் தன் வாழ்
நாள் முழுதும் ஆனந்த சாகரத்தில் மூழ்கிக்கிடக்க விரும்பினால்
அவன் தென்குமரிக்கே செல்லவேண்டும்.

சித்தர்கள் "முத்தியடைந்த" மலைத் தொடர்கள், அடர்ந்த
புதர்கள், சந்தனம், தேக்கு, கருங்காலிபோன்ற விலைதரு மரங்கள்,
உலகத்திலுள்ள சகல பிணிகளுக்கும் ஔடதமாகும் மூலிகை வகை
கள் தென் திருவிதாங்கூரில் மலிந்து கிடக்கின்றன. நீர் வீழ்ச்சி
கள், குளங்கள், குட்டைகள், குயிலினங்கள், குதித்துக் களித்துக்
கவி பாடும் கானகங்கள் திருவிதாங்கூரில் கணக்கின்றிக் கிடக்கின்
றன. பரந்த நெல் வயல்கள், மரச் சீனித் தோட்டங்கள், தேயி
லைச் செடிகள் கணக்கின்றிப் படைத்த பிரதேசம் திருவிதாங்கூர்.



நீங்கள் யானைக் கூட்டங்களைக் காணவேண்டுமா? எழில் மிகுந்த
மங்கையர்களைக் கண்டு களித்து நேத்திரானந்த மடையவேண்டுமா?
சுகந்த தென்றலால் சுகம் பெறவேண்டுமா? Lands cape என்று
மேல்நாட்டார் சித்தரித்துக் காட்டும் இயற்கை வனப்புகளைச் சளைக்
குமட்டும் காணவேண்டுமா? அப்படியானால் நாளையே திருவிதாங்
கூரைச் சுற்றித் திரியுங்கள்.

கல்வியில் வல்ல கவிஞர்கள் நட்பு வேண்டுமா? பயிற்சியில்
வல்ல பால்யர்கள் காட்சி வேண்டுமா? ஆண்மையில் வல்ல ஆடவர்
உறவு வேண்டுமா? ரதியோ, மதியோ, ரம்பை ஊர்வசியோ, தேவ
லோகக் கன்னிகையோவென உங்கள் மனதைத் திண்டாடச் செய்
யும், அழகும், அன்பும், திடமும் கொண்டு குதித்தோடும் மங்கயர்
களின் காதற சுவையின் எல்லை காணவேண்டுமா? எது வேண்டுமா
யினும் வஞ்சி நாட்டிற்கு இன்றே விரைந்தோடுங்கள். இத்தகைய
எழில் பொருந்திய நாட்டிடைத் தோன்றி வாழ்க்கைத் துன்பங்கள்
யாதுமின்றி, ராஜபோகத்தில் சுகித்திருந்த ரவிவர்மாவின் மனதில்
ஓவிய உணர்வு தாண்டவமாடியது அதிசயமல்ல. கலைகள் கரை
புரண்டோடும் திருவனந்தபுரத்தில் ஜெனிக்கும் ஒவ்வொரு குழந்
தையும் கவிஞனாகவும், சிற்ப சாஸ்திர விற்பனனாகவும் திகழத்தக்க
வகையில் ஆங்கே இயற்கை அமைந்துள்ளது.

இத்தகைய எழில் மிகுந்த திருநாட்டில் சந்திரனைக் களங்கம்
பற்றியதுபோலும், தெள்ளிய நீர்த் தடாகத்தில் பாசி படர்ந்தது
போலும், கல்வியில் வல்ல பண்டிதர்களை வறுமை வாட்டுவது
போன்றும் பாராமை, நெறுங்காமை, தீண்டாமையாகிய கொடிய
மாசி பற்றிப் படர்ந்துளது. திருவிதாங்கூரின் பெருமைகளைப்
பிறர் மதியா அளவுக்கு இச்சிறுமை அந்நாட்டைப் பற்றிப் பிடித்
துளது. 'நாயாடி' என்ற மனிதவுடல் தாங்கிய தோழர்களை அந்
நாட்டு வைதீகர்கள் நாற்பது கஜம் தூரத்தில் நின்று சப்தமிட்டுப்
பேசுமாறு கட்டளையிட்டுள்ளார்கள். தீயர், புலையர், பறையர் என்ற
மாசற்ற மனிதர்களை மலந் தின்னும் பன்றிக் கூட்டங்கள் மேய்ந்து
திரியும் பாதைகள் வழியேகூடச் செல்ல அனுமதிப்பதில்லை. பத்ம
நாபசாமி கோயிலைச் சுற்றியுள்ள கோட்டைச் சுவரின் உள்புரத்தில்
நடைபெறும் நியாய மன்றத்தில், ஈழுவ வகுப்பைச் சேர்ந்த பால்ய
வக்கீல்கள் சென்று வழக்காட அனுமதியில்லை. இத்தீண்டாமைக
கொடுமையால், 40 லட்சம் ஜனத்தொகை கொண்ட அந்நாட்டவரில்
12 லட்சம் பேர் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து தங்கள் வாழ்க்கைத்
துன்பங்களை எளிதாக்கிக்கொண்டார்கள்.

தீண்டாமை தோன்றிப் பல நூற்றண்டுகளாயினும் அதுவொழியவென இந்நாட்டில் துணிந்து கூற யாருக்கும் ஆண்மையெழவில்லை. புராணேதிகாசங்களால் மயங்கிய மக்கள் நாடோறும் வளர்த்துவரு மன்பும், பக்தியும், தீண்டாமைப் பேய்க்குத் தூபங் காட்டிப் பூஜிப்பது போன்றிருந்தது. "தீண்டாதார்" எனப்படுவோரை நாட்டார் பொருளாதாரத் துறையில் ஆழ்த்தி அழுத்தி பூச்சி புழுக்களைப்போல் வைத்திருந்தனர். இந்நிலையில் திருவிதாங்கூரில் ஈழுவ சமுதாயத்தில் நாராயண குரு என்ற பெரியார் தோன்றி ஒரே கடவுள், ஒரே சாதியெனப் பலமான கிளர்ச்சி செய்து மக்கள் சுயமதிப்படையச் செய்தார்; அவர் கூறிய நன்மொழி கேட்ட ஈழவ சமுதாயத்தார் விழிப்புற்று கல்வி கேள்விகளில் ஆர்வமுற்றுத் தேர்ச்சி பெற்று மேம்பாடடையலாயினர். ஆணும் பெண்ணும் பேதமின்றி வடமொழி, தென்மொழி, மலையாளம், ஆங்கிலமாகிய பல மொழிகளில் பட்டம் பெற்று, விவசாயம், தொழில், உத்தியோகமாகியவற்றில் முன்னணியில் நிற்கலாயினர். எனினும் தீண்டாமை நீங்க எதிர்த்துக் கூறிப் போராட அவர்கள் உணர்ச்சியற்றுக் கிடந்தனர் என்றே சொல்லவேண்டும்.

தீண்டாமை யொழிந்தாலன்றிச் சுதந்தரமுமில்லை, சுயராஜ்யமுமில்லை. தீண்டாதாரென்போர் மானிடரில் யாருமிலையெனக் கூறி லட்சுமி யெனும் தீண்டாப் பெண்ணைத் தீண்டிச் சுவீகரித்துக் கர்ஜித்தார் காந்தியடிகள். கொடுமைகளை எதிர்த்துப் போராடி வெற்றிபெறச் சத்தியாக்கிரகமெனும் செந்நெறியுங் கண்டார். அதைத் தனி வாழ்விலும், பொது வாழ்விலும் பிரயோகித்து வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் வெற்றியும் பெற்றார். சத்தியாக்கிரகமெனும் சத்தியப் போராட்டங் கண்ட இந்தியர் மனதில் தன்னம்பிக்கையும் தன்மதிப்புணர்ச்சியும் தாண்டவமாடிற்று.

இந்நிலையில் திருவிதாங்கூரிலுள்ள எழுச்சியுள்ள ஈழவ இளைஞர்கள், தோழர்கள் டி. கே. மாதவன், ஜியார்ஜ் ஜோசப், ஏ. கே. பிள்ளை, கேசவ மேனன், குரூர் நம்பூதிரிப்பாட், கோவிந்தன் சாணர் முதலியவர் துணை கொண்டு வைக்கத்துப் பாதைகளில் நடந்து செல்ல உரிமை தேடலாயினர். வைதீகக் கோட்டைக்குத் தளகர்த்தராக விளங்கிய அந்நாட்டு அரசர் தமது அந்திய காலத்தில் ஏற்பட்ட இக்கிளர்ச்சியைக் கண்டு மனம் பதைக்கலானர். இச் சர்வ சாதாரண உரிமையை மறுக்க அவரது இளகிய நெஞ்சு இடந் தரவில்லையாயினும், நீடூழிகாலம் நிலைபெற்றிருக்கும் பழக்க வழக்கங்களை மீறுதற்கான கிளர்ச்சிக்கு அவருடைய வைதீக மனது இடந் தரவில்லை. பத்மநாப சாமிக்கே திருவிதாங்கூர் சொந்தம்.

# ஆசிரியர் குறிப்புகள்.

## "பாரதி"யின் புதிய போஷகர்

சென்ற ஜனவரியில் 'பாரதி'யின் போஷகராயிருக்க வாக்களித்து, தமது கடமையை அப்பொழுதே பூர்த்திசெய்த திருவாளர்களான கூடலூர் நா. சு. க. சுப்புசாமி கவண்டர் பிரதர்ஸ் & நா. சு. கி. பொன்னையா கவண்டர் பிரதர் ஆகிய இவர்களுக்கு நமது மனமார்ந்த வந்தனமும் நன்றியும் உரித்தாகும்.

மதுரை ஜில்லாவிலே கூடலூர் ஓர் மிகப் பெரிய கிராமமாகும். இதில் மிகுதியும் விவசாயிகளே நிறைந்து வசித்து வருகின்றார்கள். நஞ்சை புஞ்சை நிலங்கள் பரந்து விரிந்து கிடப்பதொப்பவே ஜனப் பெருக்கும் 10,000-க்கு மேலிருந்து வருகின்றது. இந் நகரில் பூர்வ குடியும், விவசாயமே குடும்பத் தொழிலாகக் கொண்ட சீரும் சிறப்பும் செல்வாக்கும் நிறைந்த காலஞ்சென்ற கனவான்களாகிய திருவாளர்கள் நா. சு. கதிரய்ய கவண்டர், நா. சு. கிருஷ்ணசாமி கவண்டர் இவர்களை அறியாதார் இப் பக்கத்திலிருப்பது அருமையாகும். இவர்கள் நல்லோர்க்கிரந்து ஏழை எளியவர்களை ஆதரித்து நியாயங் காத்துப் புகழ் படைத்து மறைந்தனர். இவர்களுக்குப் புத்திரர்கள் உண்டு. மேற்கண்ட இவர்களே, நமது "பாரதி"யை கௌரவித்து அன்பு பூண்டு ஆதரவு தந்து போஷகராயிருந்து வருகின்றார்கள். இவர்களுக்கு இறைவன் இன்னருள் நிறையுமாறு இறைஞ்சி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

---

அந்நாட்டு அரசர் அச்சாமியின் அடிமை என்ற நிலையிலிருந்து அந்நாட்டை ஆட்சிபுரியவேண்டும். பத்மநாப சாமியின் "தந்திரிகளான" குருக்கள் கிழிக்கும் கோட்டை மீற அரசனால் முடியாது. அதற்கு அந்நாட்டுச் சம்பிரதாயங்கள் இடந் தரவில்லை. மற்றும் இன்று பாதை அனுமதி கொடுத்தால் நாளை கோவிற் பிரவேச அனுமதி கோரி பத்மநாப சாமியை "அயித்தம்" (அசுத்தம்) செய்துவிடுவார்களோவென அப் பத்மநாப பக்தனை அரசன் அஞ்சி யஞ்சி மனம் நொந்தார். எனவே அவர் சத்யாக்கிரகத்தை எதிர்ப்பதென முடிவுசெய்து, பிரமுகர்களில் முப்பது பேரைச் சிறையிலடைக்கவும் ஆக்ஞையிட்டார்.

(தொடரும்.)

அடுத்த மணி முதல் புதிதாகச் சேர்ந்துள்ள போஷகர்களின் பெயர்கள் பிரசுரமாகு மெனவே எதிர்பார்க்கின்றோம். பெயர் பிரசுரிப்பதற்கு, அக் கனவான்களின் விருப்பம் இன்னும் முடிவாகத் தெரியக் கூடாததினாலேயே தாமதம். அடுத்த சஞ்சிகையில் முற்றுப் பெறுமெனவே யெண்ணுகின்றோம்.

## சிறையிலுறையும் ஆசிரியரவர்கள்

சென்ற 1932-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17-ம் நாள் நமது ‘பாரதி’யின் ஆசிரியரவர்கள் தேவார நகரில் வைத்து கைதிசெய்யப் பெற்று 18௳ மதுரையில் நடைபெற்ற விசாரணையில் ஓராண்டு கடுங் காவல் தண்டனையும் ரூ. 100 அபராதமும் அன்றேல் மேலும் இரு மாதங்கள் சிறைவாசமும் விதிக்கப்பெற்று பி. கிளாஸில் அனுமதித் துக்கொள்ளப் பெற்றிருக்கின்றனர். இது விஷயத்தை அன்பர்கள் அனைவருக்கும் அதுசமயமே தெரிவிக்க முடியாமற் போயினதுபற்றி வருந்தி, மன்னிக்க வேண்டுகின்றோம்.

சிறையி லுறையும் ஆசிரியரவர்கள் சௌக்கியமாகவே யிருந்து வருவதாகக் கடிதங்களால் அறிகின்றோம். சென்ற முறைபோல் இத்தடவையும் 3 சிறையில் விட்டுவிட்டு வதிய அரசாங்கம் உதவி செய்திருக்கின்றது! இதுபோது வசித்துவரும் சிறை வேலூர் ஆகும். சென்ற தடவையில் இச்சிறையிற்றான் மிகுதியான நாட்களைக் கழித்துவந்தார். இம்முறையும் சிறைக்காலம் முழுதும் இச்சிறையிலேயே இருக்க நேருமெனவே நினைக்கின்றோம். கனம் ஆசிரியரின் அன்பு மிகும் நண்பர்களுக்கெல்லாம் உபயோகமாகுமாறு அவர்தம் சிறை விலாசத்தை இங்கே குறிக்கப்படுகிறது:—ரா. நாராயணஸ்வாமி, நிர். 4884, பி. கிளாஸ், சென்ட்ரல் ஜெயில், வேலூர். (R Narayanaswami, No. 4884, B. Class, Central Jail, Vellore.) கடிதங்கள் எழுத விரும்புவோர் இராஜீயக் கலப்பற்ற விஷயங்களை யெழுதவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது அவஸ்யமாகும்.

## பெண்களின் ஒப்பற்ற வலிமை

‘ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே’ என்ற ஓர் முதுமொழி நெடுங் காலத்திற்கு முன்னிருந்தே வழங்கிவருகின்றது. பெண் மக்கள் ஆண்களை மிக விரைவில் சீர்திருத்தம் செய்துவிடலாம். பிறவிகளில் மக்கட் பிறவியே மேன்மையுற்ற தெனினும், அதனை உள்ளவாறு அனுபவித்து மேன்மையுற முடியாமல் தவிக்கவேண்டியிருக்கின்றது. உழைப்பையே உடமையாகக் கொண்ட ஆடவர்களுக்கு, அவர்களின் சிரமத்தைப் போக்கிச் சக்தியைக் கொடுக்கவே